வினோபா

சத்தியாகிரக சோதனை

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை-625020.

சத்தியாக்கிரக சோதனை

வினோபா

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625020

முதற்பதிப்பு — ஜனவரி 1975

2,000 பிரதிகள்

●

விலை ரூ. 3/-

●

வெற்றிவேல் மதுரை - 1

Gandhian Study Circle,
Govt. Arts College.
DHARMAPURI.

பதிப்புரை

தேசத்தந்தை காந்தியடிகள் நிர்மாணத்திட்டங்கள் மூலம் புதிய வாழ்வியலை உருவாக்கியும் சத்தியாக்கிரகத்தின் வழி அநீதிகளை அகற்றியும் அனைவருக்கும் நல்வாழ்வு கிட்டுகிற ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்பிச் செயல் பட்டார்.

தனிமனித வாழ்வின் ஒரு பண்பாகப் போற்றப்பட்ட அன்பினைப் புரட்சிகரமான சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரும் போர்க்கருவியாகப் பயன்படுத்தும் வழி காட்டினார். அவர் உலகிற்கு அளித்த ஒப்பற்ற கொடை 'சத்தியாக்கிரகம்' ஆகும். அவர் வாழ்க்கையே ஒரு சத்தியசோதனை.

காந்திஜி காட்டிய சத்தியாக்கிரக நெறியை முழுமையும் செவ்வனே புரிந்துகொண்ட முதல் சத்தியாக்கிரகி புனிதர் வினோபா ஆவார். காந்தியடிகளின் அனுபவங்களைக் கொண்டு அவர் காலத்திய எதிர்மறை நிலையினின்றும் வளர்ந்து அதற்கு அப்பாலும் புதிய ஆக்கபூர்வமான வகையில் சத்தியாக்கிரக சோதனைகள் செய்வது குறித்துச் சிந்திப்பவர் வினோபா.

புனிதர் வினோபா அவ்வப்போது நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து சத்தியாக்கிரகம் பற்றி தொகுக்கப்பட்ட "சத்தியாக்கிரக விசார்" எனும் நூலினைத் தமிழில் இந்நூல் வடிவில் மகிழ்வுடன் தருகிறோம்.

மதுரை-20
25. 1· 75.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

பொருளடக்கம்

		பக்க எண்
1	சுதந்திர இந்தியாவில் சத்தியாக்கிரகம் ...	1
2	சத்தியாக்கிரகியின் வாழ்க்கை முறை ...	12
3	சத்தியாக்கிரக சாஸ்திரம் ...	21
4	அணுயுகத்தில் எழுந்துள்ள பிரச்சினை ...	27
5	ஜனநாயகமும் சத்தியாக்கிரகமும் ...	35
6	சத்தியாக்கிரகம் என்றால் இனிக்கவேண்டும் ...	41
7	அதிக சிந்தனை தேவை ...	47
8	சத்தியாக்கிரகத்தின் தூய்மை ...	52
9	சத்தியாக்கிரகத்தின் உட்பொருள் ...	60
10	சத்தியாக்கிரக தத்துவம் ...	72
11	சத்தியாக்கிரக வழி விளக்கம் ...	86

சத்தியாக்கிரக சோதனை

—o—

1 சுதந்திர இந்தியாவில் சத்தியாக்கிரகம்

மற்ற வனவிலங்குகளைப்போலவேதான் முன்பு மனிதனும் வேட்டையாடிப் பெற்ற மிருகங்களின் மாமிசத்தைத் தின்று வாழ்ந்துவந்தான். மற்ற பிராணிகளைப்போலவே அவனால் அப்போது ஹிம்சை புரியாது இருக்கமுடியவில்லை. ஹிம்சை புரியாமல் அஹிம்சை வழியில் உயிர்வாழும் முறை மனிதனுக்குத் தோன்றியது முதன் முதலில் இந்தியாவில்தான். பிறகு இங்கிருந்து அவன் வெளிநாடுகளுக்குச் சென்றபோது இந்த கொள்கையையும் தன்னுடன் கொண்டு சென்றான்.

வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இந்தியக் கண்டுபிடிப்பு :— விவசாயம்

விவசாயத்தில் எவ்வளவு ஆன்மீக இரகசியம் பொதிந்திருக்கிறதென்று இன்று நமக்குத் தெரியவில்லை. ஒருசிலர் தானியங்களை வயலில் விதைத்து அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒன்றுக்கு நூறாக விளையும் தானியங்களை எடுத்து வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது என்ற விஷயம் அந்தக்காலத்தில் மனிதனுக்குத் தோன்றிற்று. அது முதல் இந்தியாவில் வாழ்ந்த மக்கள் அஹிம்சா முறையில் வாழக் கற்றுக் கொண்டார்கள். பிறகு விலங்குகளின் மாமிசத்தைத் தின்பதை நிறுத்துவதற்கான இயக்கம் தொடங்கிற்று.

இதில் சமணர் முன் நின்று முழுமையும் பெற்றூர்கள். பௌத்தர்கள் இதோடு அஹிம்சையையும் கருணையையும் இணைத்துவிட, வேதத்தைப்பின்பற்றும் வைதிகர்களோ விவசாயத்தையே வழிபடலானூர்கள். இவ்வாறு ஒவ்வொரு படியாக அடி எடுத்துவைத்து முன்னேறிய இந்திய சமுதாயத்தினர் அஹிம்சைப் பரிசோதனையில் முன்னேறிக் கொண்டே சென்றூர்கள். அஹிம்சையில் செய்யப்பட்ட இந்த முதல் பரிசோதனை நடந்தது இந்தியாவில்தான். உலகில் அதுவரையில் வழக்கிலிருந்த ஹிம்சைமுறைகளைப் பார்க்கிலும் விவசாயம் எவ்வளவோ சிறந்த அஹிம்சை வழியென்று கருதப்படும். இந்தவழி நமக்குத்தான் முதன் முதலில் தெரியவந்தது. 'மற்றவைகளைப் பார்க்கிலும்' என்று நான் சொன்னது, விவசாயத்திலும் ஹிம்சை கலந்தபோதிலும் அதற்கு முந்திய காலத்தைவிட இதில் அஹிம்சைக்கு அதிக-மாயும் ஹிம்சைக்குக் குறைவாயும் இடம் இருந்ததினுலேயே.

விஞ்ஞான யுகத்தின் கண்டுபிடிப்பு :— சத்தியாக்கிரகம்

அந்தக்காலத்தில் இந்தப்புதிய கண்டுபிடிப்பு வந்ததனுல் வாழ்க்கையின் நீக்குப்போக்கு மாற்றப்பெற்றதைப் போல இந்தக்காலத்தில் இன்னெரு கண்டுபிடிப்பு நடந்திருக்கிறது. இப்போது விஞ்ஞானம் காரணமாக மக்களுக்கிடையேயுள்ள தொடர்பு—அவர்கள் செய்யும் வியாபாரம், பிற விவகாரங்கள் ஆகியவை முன்புபோல் குறுகிய அளவில் இராமல் விரிந்து பரந்துவிட்டன. போக்குவரத்து சாதனங்கள் மிகுந்த வேக-மளித்துவிட, மக்கள் தொகையும் பெருகிவிட்டது. இவை அனைத்தின் விளைவாகத் தோன்றிய பிரச்னைகளும் மோதல்களும் ஓர் அளவுக்கு உட்பட்டதாய், ஓரிடத்திலேயே அடங்கியதாய் இராமல் நாடு முழுவதிலும், உலகம் முழுவதிலும் பரவிவிட்டன; நிகழும் பலவகையான அநியாயங்களுக்கும் பரிகாரம் தேடுவது அவசியமாகிவிட்டது. எத்தனையோ

விதமான ஆயுதங்கள் தோன்றிவிட்டன. அநியாயத்திற்கு மாற்று கண்டுபிடிப்பதற்கு வேண்டிய சாதனங்களையும் சமுதாயத்தில் எழும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவும் உபாயங்களையும் தேடுவது அவசியமாகிவிட்டது. முன்-பெல்லாம் பிரச்னைகள் சிறியவையாய், சாதாரணமானவையாய் இருக்கும். அவை சிறு குழுக்களினிடையிலும் சமூகங்களின் இடையிலும் தோன்றும்; தோன்றிய அளவிலேயே அவை தீர்க்கப்பட்டும் விடும். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. எழும் பிரச்னை எதுவும் சிறியதாயிராமல் பிரும்மாண்டமானவையாக இருக்கின்றன. அன்று ஒரு வயலின் பொழி சிறிது நகர்த்தப்பட்டுவிட்டால், அதை அங்கிருந்து இங்கே சிறிது தள்ளிப்போட்டால் இரு வயல்களின் உடையவர்களிடையே எழுந்த வழக்குத் தீர்ந்துவிடும். அதுபோல் இப்போது எதுவும் நடப்பதில்லை.

இங்கிலாந்தில் வசித்து வந்தவர்கள் அங்கிருந்து கிளம்பிப்போய் ஆஸ்திரேலியாவில் குடியேறினார்கள். அவர்கள் கடற்கரையை அடுத்த பகுதிகளில் போய்த் தங்கினார்களே யன்றி, மேலும் உள்ளே சென்றாரில்லை. காரணம், அங்கெல்லாம் ஒரே காடாய் இருந்ததோடு வெப்பமும் அதிகமாய் இருந்ததுதான். கடற்கரைப் பகுதிகளிலோ திறந்த வெளி அதிகமாயிருந்ததோடு தேவையான அளவு குளிர்ச்சியும் இருந்தது. இவ்வாறிருந்தும் யாரேனும் அங்கே சென்றால், 'வராதீர்கள். இது எங்கள் இடம்' என்று சொல்லித்தடுத்தார்கள். இப்போது ஆஸ்திரேலியாவில் எவ்வளவுபேர் இருக்கிறார்களோ, அவர்களைப்போல் பத்து மடங்கு மக்களுக்கு அங்கே இடம் இருக்கிறது. ஆனால் அவர்கள் வேறு எவரையும் அங்கே கால் வைக்க விடவில்லை. தாமேனும் உள்நாட்டுக்குள் சென்று அங்கே பரந்து கிடக்கும் நிலத்தை உழுது பண்படுத்தி விவசாயம் செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

இப்போது குறிப்பிட்ட ஒரு நாட்டினருக்கு இன்னொரு நாட்டில் சென்று குடியேற உரிமையுண்டா இல்லையா என்பது

போன்ற பிரச்னைகள் எழுகின்றன. மேலும் ஒரு நாட்டில் பெட்ரோல் எண்ணெய் கிடைக்கிறது என்றால் அது அந்த நாட்டினருக்குமட்டும் சொந்தமா, அல்லது பிறநாட்டினரும் அதில் உரிமை கொண்டாடலாமா என்பதுபோன்ற பிரச்னைகள் எழுகின்றன. இவ்வாறு எழும் பிரச்னைகளுக்கு அளவே இல்லை. இவ்வாறு தற்கால பிரச்னைகள் சிக்கலானதும் பெரியதுமாக இருக்கிறது. குடிமை உரிமை என்ற பிரச்னை-யையே எடுத்துக்கொள்வோம். இந்தியாவிலிருந்து முன்பு பலர் கூலிவேலை செய்வதற்காக இலங்கையில்போய்க் குடியேறினார்கள். இவ்வாறு அங்கே சென்று தங்கியவர்களுக்கு அந்நாட்டினருக்குரிய குடியுரிமை உண்டா இல்லையா என்பதைப்பற்றி வாதவிவாதம் நடந்தது; அதனால் சிறிது மனக்கசப்பும் தோன்றிற்று. இதுபற்றி நடந்த பேச்சு வார்த்தைகள் இந்திய நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் நடந்த பெரிய பிரச்னையாக ஆகிவிட்டது. இதே போல்தான் சிறிய விஷயங்களும் பெரிய பிரச்னையாக ஆகி விடுகின்றன. இவைகளைத் தீர்ப்பதற்கு இப்பொழுது பல நாடுகளினிடமும் ஆயுதங்களைத்தவிர வேறு சாதனம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

இத்தகைய நிலையில் இந்தியாவில் ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. அதுவே சத்தியாக்கிரகம் என்பது. இதைக்கொண்டு சமூகத்திலும் நாடுகளிடையிலும் எழும் எல்லாச் சிறிய பெரிய சிக்கலான தகராறுகளையும், பிரச்னை களையும் தீர்த்துக் கொள்ளலாம் என்று தெரிகிறது. இது இந்த நவீனகாலக் கண்டுபிடிப்பு ஆகும்.

சத்தியாக்கிரகம் முழுதும் இன்னும் வளர்க்கப் படவில்லை:

பண்டைக் காலத்தில் செய்த கண்டுபிடிப்பின் உதவி-யினால் நமக்கு அஹிம்சை முறையில் வாழ்க்கை நடத்தும் வழி தெரிய வந்ததைப்போல நவீன காலத்தில் சமுதாயத்தில்

எழும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் வழி இருப்பதாக நமக்கு ஓரளவு தெரிய வந்திருக்கிறது. என்ன செய்வதன்று தெரியாது உலகமே தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் இந்த சாதனம் நமக்கு இங்கே கிடைத்தது. இப்போது விவசாயம் எவ்வளவோ திருந்திய முறையில் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் பண்டைக்காலத்திலோ அதில் எத்தனையோ சிரமங்கள் இருந்தன. இதேபோல சத்தியாக்கிரகமும் நமக்கு இப்போது சிரமசாத்தியமானதாய்த் தான் இருக்கும். நமக்கு அதில் இன்னும் அதிகப்பழக்கம் ஏற்படவில்லை. இதனால் அதைச்சுலபமான முறையில் செய்யும் வழி நமக்கு இன்னும் தெரியவில்லை. பழைய காலத்தில் விவசாயம் இருந்த சீர்திருந்தாத உருவிலேயே-தான் இப்போது சத்தியாக்கிரகம் இருக்கிறது. ஆனால் விஞ்ஞானத்தின் உதவியினால் விவசாயம் எவ்வளவோ திருத்தப்பட்டு சுலபமாகிவிட்டதைப் போல சத்தியாக்கிரகமும் திருந்தி, எளிதாக ஆகிவிடும். ஆனால் இப்போதைய நிலையோ, சாதாரண மனிதனுக்கும் எளிதில் புரியக்கூடிய வகையில் அதன் சாஸ்திர விதிமுறைகள் இன்னும் அமைந்தாகவில்லை என்றே சொல்ல வேண்டும். இது வெகு எளிதில், விரைவில் ஆகிவிடக்கூடியதுமல்ல. இதில் எத்தனையோ விதமான பரிசோதனைகள் இன்னும் செய்தாக வேண்டியிருக்கிறது; நாம் இதைச் செய்ய வேண்டும். நம்மால் இந்தச் சோதனைகளை நடத்த முடிமானால் அது சமுதாய வாழ்க்கைக்கு நாம் செய்த பேருபகாரமாய் அமையும்; அதனால் பேரளவில் நடக்கும் ஹிம்சைச் செயல்களை நிறுத்தி அழிவும் நாசமும் சமுதாயத்தைக்குலைக்காது செய்ய முடியும்.

வாழ்வில் ஹிம்சையைத் தவிர்ப்பதற்கு உதவும் வழிகள் என்னவோ கண்டுபிடிக்கப்பட்டன; ஆனால் மக்கள் எல்லோரும் உயிர்ப்பிராணிகளைக் கொன்று அவற்றின் மாமிசத்தைத் தின்பதை நிறுத்திவிட்டார்களாவென்றால் நிறுத்திவிட்டதாகச் சொல்ல முடியவில்லை. பால் மிகுதியாக உண்டாகி, விவசாயம் நடப்பதற்குப் போதுமான நீருக்கும்

ஏற்பாடாகி வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் வடிகட்டவும் வாய்க்கால்கள், வடிகால்கள் முதலியவைகள் அமைந்து, விவசாயம் செய்வதற்கு எல்லோருக்கும் எல்லா வசதிகளும் ஏற்பட்டு, சக்கிலித் தொழில் செய்யும் ஏழைத் தொழிலாளி முதல் நாட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் வரையில் எல்லோரும் தினமும் சிறிது நேரமாவது விவசாயம் செய்வதென்று ஆகும்போதுதான் மாந்தர்கள் பிராணிகளைக் கொன்று தின்னும் அவசியம் இராது. ஆயினும் விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து வழி என்னவோ திறக்கப்பட்டு விட்டது. அதேபோல்தான் சத்தியாக்கிரக வழியும் இப்போது உலகிற்குத் தெரிய வந்திருக்கிறது. இனிமேல்தான் அதை நன்கு வளர்த்து எவ்வாறு பயன்படுத்துவதென்று யோசிக்க வேண்டும். அது நாளையே நடந்து விடாது. அடுத்த ஒன்றிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு இதுபற்றிய பரிசோதனைகளும் முயற்சிகளும் நடத்தப்பட வேண்டியிருக்கும் நடந்து வரும். 5000 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய விவசாயப்பரிசோதனைகள் இன்றும் முற்றுப் பெருமல் நடந்து வருகின்றன. மிருகங்களின் மாமிசத்தையும் மீனையும் தின்பதை நிறுத்தி காய்கறிகளையும் பழங்களையும் மட்டும் தின்று வாழும் நிலைக்கு இன்னும் மனித சமுதாயம் மாற வில்லை. இதைப்பார்க்கையில் சத்தியாக்கிரகமும் முழுமை பெறுவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் இந்தப் புதிய வழி ஒன்று நமக்குக் கிடைத்துவிட்டது; அது கண்டு பிடிக்கப்பட்டது நம் நாட்டில்தான் என்பதை எவராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

இன்று காலையில் ஒரு நண்பர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். அவர் அதைக் கேட்டதிலிருந்து அவருக்கு உண்மையை அறிவதில் இருந்த ஆவல் வெளியாயிற்று, அவர் என்னிடம், 'நீங்கள் சத்தியாக்கிரகம் என்று என்னவோ சொல்கிறீர்களே தவிர சத்தியாக்கிரகத்தினாலும் அஹிம்சையின் உதவியினாலுமே நாம் சுயராஜ்யம் பெற்றோம் என்று சொல்

ஆவீர்களா?' என்று கேட்டார். அவருக்கு நான், 'நாம் அஹிம்சையைக் கொண்டே, அதையே முழுதும் கையாண்டு சுயராஜ்யம் பெற்றோம் என்று சொல்வதற்கில்லை. நாம் இந்தியாவில் நடத்திய சத்தியாக்கிரக இயக்கம் அரைகுறை யான, நொண்டி இயக்கம்தான். அதில் எத்தனையோ விதமான ஹிம்சைகள் கலந்து கொண்டன. நம் மனதில் எவ்வளவு ஹிம்சை இருந்தது என்பதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. நாம் ஒரு வரம்புக்குட்பட்டு நடந்து கொண்ட-தனால் நமக்குச் சுயராஜ்யம் கிடைத்தது என்று உரிமையோடு சொல்வதற்கு இல்லைதான். உலக நிலையும் நமக்கு சுய ராஜ்யம் வர ஓரளவு உதவிற்று. ஆயினும் இங்கே நடந்த சத்தியாக்கிரக இயக்கம் ஒரு பெரிய முயற்சியேயாகையால் அதுவே நமக்கு சுயராஜ்யம் வரக்காரணமாயிற்று என்று சொல்லலாம்' என்றேன்.

உண்மையில் நமது அந்த இயக்கம் வெறும் தொடக்கமே. அது நம்மிடமிருந்த, மிகவும் குறைந்த, வளர்க்கப் பெறாத சக்தியைக் கொண்டு நடத்தப்பட்டது. நாம் இது வரையில் சத்தியாக்கிரகத்தை ஓர் எதிர்ப்பு நட-வடிக்கை என்றே எண்ணி வந்தோம். ஆயுதங்களைக் கொண்டு பகைவனின் அநியாயத்தை எதிர்த்து ஒழிக்க முடியாத போதோ, அல்லது ஒழிக்க விரும்பாதபோதோ ஆயுதமில்லா மலே எதிர்ப்பதைச் சத்தியாக்கிரகம் என்று எண்ணி வந்தோம். ஆனால் இது சத்தியாக்கிரகத்திற்குள்ள அரைகுறையான, ஒரு சார்பான பொருளேயாகும். இதில் சத்தியாக்கிரகத்தின் ஓர் அம்சம் அமைந்திருக்கிறதே தவிர முழுதும் இல்லை. நாம் இனிமேல்தான் சத்தியாக்கிரகத்தின் முழுச்சக்தியையும் வளர்க்கவேண்டும். அது எதிர்க்கும் எதிர்மறைச் (negative) சக்தியல்ல, ஆக்க சக்தியாகும். வாழ்க்கை முழுவதையும் சத்தியத்தின் அடிப்படையில் அமைத்து நடத்துவதே சத்தி யாக்கிரகம். ஆயினும் நம்நாட்டில் அதற்குள்ள ஒரு புதிய சக்தியும் வெளிக் கொணரப்பட்டது. அதை என் கண்ணாலேயே

கண்டு மகிழ முடிந்தது குறித்து நான் என்னை அதிர்ஷ்டசாலி-யாகக் கருதுகிறேன்.

பூதானயக்கமும் சத்தியாக்கிரகமே

என்னிடம் பலர், 'நீங்கள் பூதானயக்கத்தில் எதற்காக நடந்தே சுற்றுகிறீர்கள்? நீங்கள் இவ்வாறே சுற்றி அலைந்து கொண்டு மக்களின் உணர்ச்சியைக் கிளறி விடுவதைத்தவிர சத்தியாக்கிரக ஆயுதத்தைப் பிரயோகிக்கவே போவதில்லையா? என்று கேட்கிறார்கள். இதிலிருந்து நாம் சத்தியாக்கிரக மென்றால் ஆயுதமின்றி எதிர்த்தல், எதிராளியை நம் வழிக்குக் கொண்டு வருவதற்காக அவனை நிர்ப்பந்தபடுத்துவதற்குள்ள உபாயங்களைக் கையாளுதல் என்றே பொருள் கொள்ளு-கிறோம் என்றாகிறது. இதற்கு அதிகமாகச் சத்தியாக்கிரகத்தில் வேறு எதுவுமே இல்லை என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அந்நியர் ஆட்சியின் நிர்ப்பந்தம் இங்கிருந்து விலகிய பிறகு நாம் மக்களை விழிப்புறச் செய்வதைத்தடுப்பார் யாருமில்லை யாகையால் சத்தியாக்கிரக மென்றால் எதிர்மறைச்செயல் என்று எண்ணுவதே தவறாகும். இனி நாம் அதன் ஆக்கத் தன்மை பற்றி சிந்திக்கவும், அதை வளர்க்கவும் வேண்டும்.

ஒருவகையில் பார்க்கையில் நான் இப்போது செய்து கொண்டிருப்பதே சத்தியாக்கிரகம்தான். நான் ஓயாது குளிரிலும் மழையிலும் வெயிலிலும் சுற்றிக்கொண்டேயிருக்கி-றேன்; இடையறாது மக்களுக்கு அவர்கள் செய்யவேண்டியதை எடுத்துச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். ஏழைகளிட-மிருந்தும் தானம் பெறுவது ஏன் என்று பரோபகாரிகளுக்குப் புரிவதில்லை. எனது சகாக்களில் பலர்கூட நாம் ஏழை எளியோருக்கு உதவி செய்யவேண்டியிருக்க, அவர்களிட மிருந்தே ஏன் தானம்கேட்டு வாங்குகிறீர்களென்று கேட்கிறார்கள். எளியோருக்குதவும் கருணையுள்ளம் படைத் தவர்களுக்கு நான் செய்யும் இதன்பொருள் புரியமாட்டே-னென்கிறது.

ஏழைகளிடமிருந்து தானம் வாங்குவானேன்

ஏனென்றால் நான் சத்தியாக்கிரகசக்தியை உருவாக்கவும் ஏழைகளின் தெம்பை வளர்க்கவும் விரும்புவதனால்தான். ஏழை தன்னிடமுள்ள ஒரு துண்டு நிலத்தைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டேயிருந்தால் பெரிய நில முதலாளி ஒரு குழி நிலத்தையும் விட விரும்பமாட்டான். இந்த பிரச்சினை முழுவதையும் தீர்ப்பதற்குள்ள ஒரே வழி எல்லோரையுமே தமக்குள்ள நில உடைமையைத் துறக்கும்படி செய்வதுதான். ஏழைகளே தம் நிலத்தில் தமக்குள்ள உடைமையைவிட சித்தமாகிவிடும்போது உடைமை கொண்டாடுவதே தவறு என்பது நிரூபணமாகிவிடும். அப்போது பெரிய நில முதலாளிகளும் உடமையைவிட முன்வருவார்கள்; இதிலுள்ள நியாயம் அவர்களுக்குத்தானே தெரியவரும்; தாமும் இதைச் செய்யாதிருப்பது தவறு என்பதை அவர்கள் உணர்வார்கள். இவ்வாறு மக்களுக்கு நியாயத்தை உணர்த்துதல், அவர்களை நியாயத்திற்கு கட்டுப்படச்செய்தல், சத்தியாக்கிரகத்தின் ஓர் அங்கமாகும். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள், 'பாபா ஏதோ மனமாற்றம் பற்றிப் பேசுகிறாரே தவிர, சக்தியை வளர்க்கக் காணோமே என்று எண்ணுகிறார்கள். ஆனால் சத்தியாக்கிரகம் செய்வதென்றால் அதற்கு நாம் எத்தகைய சக்தியைப் பயன்படுத்த வேண்டும்? நான் ஓயாது நடந்தே சுற்றிக்கொண்டிருக்கிறேனே, நான் இவ்வாறு சுற்றுவது எதற்காக? இதன் பொருள்தான் என்ன? என்று சிறிது யோசித்துப் பாருங்கள்.

இவையும் சத்தியாக்கிரகத்தின் அங்கங்களே

சிலர் என்னிடம், 'உங்களை பெரிய நிறுவனம் ஒன்று நடத்தும் கூட்டத்திற்கு அழைத்தால் அதில் போய் கலந்து கொள்வீர்களா அல்லது இப்படியேதான் ஊரூராய் நடந்தே போய்க்கொண்டிருப்பீர்களா? மோட்டாரில்தான் சிறிது ஏறிப் போங்களேன்! இது பழைய கட்டை வண்டிக்காலமல்லவே!' என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெரிய நிறுவனங்கள் அழைக்கையிலும் அதற்குப் போகாமல் என்போக்கில் நடந்து

கொண்டேயிருப்பதும் சத்தியாக்கிரகத்தின் ஓர் அங்கம்தான். ஒரு புதிய சக்தி தோன்றியிருக்கிறது என்பதும், அதை நாம் இப்போது வளர்த்தாக வேண்டுமென்பதும் நமக்கு இன்னும் புரியவில்லை. காந்தியடிகள் புரிந்த சாதனையின் வெளி உருவை மட்டுமே நாம் பார்த்தோம். இப்போது நாமும் அதையே செய்வது போதாது. அந்தக்காலத்தின் நிலைமை வேறு. அது முழுக்க முழுக்க எதிர்மறையான (negative) நடவடிக்கை. ஆயினும் அவர் அதைமட்டும் செய்யாமல் அதோடு எவ்வளவு நிர்மாண வேலைகளையும் சேர்த்திருந்தார்! அவரிடமே எத்தனையோ பேர், 'ஆங்கிலேயரை வெளியேற்ற நாம் முயற்சிசெய்து வருகையில் கதரை வளர்க்கவும், தீண்டாமையை ஒழிக்கவும், கிராமக் கைத் தொழில்களை விருத்தி செய்யவும் எதற்காகப் பாடுபட வேண்டும்? இவையெல்லாம் சமுதாயச் சீர்திருத்த காரியங்கள் தாமே' யென்று கேட்டதுண்டு. ஆனால் உண்மையில் இவைகளையும் சத்தியாக்கிரகத்தின் பல்வேறு அங்கங்கள் என்ற கருத்திலேயே அவர் மேற்கொண்டிருந்தார்.

ஒரு சமயம் காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தின் இடையிலேயே தீண்டாமை ஒழிப்பு முயற்சி செய்கையில் உண்ணு நோன்பு தொடங்கிவிட்டார். அப்போது பலர், 'நாம் சுதந்திரத்திற்காகப் போராடிவருகையில் இந்த ஆலயப் பிரவேசம் எதற்காக? நாம் அரசியல் சுதந்திரம் பெறுவதற்காக முயன்றுவருகையில் இதனால் நம் பலம் குறைந்தல்லவோ போகும்?' என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு காந்தியடிகள், 'இதனால் பலமொன்றும் குறையாது. இதுவும் நாம் நடத்தும் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியே' என்று பதில் சொல்லியிருக்கிறார். எனவே ஆங்கிலேயரை இங்கிருந்து விரட்டுதல் அல்லது அவர்களுக்கு நம்மேலிருந்த பிடிப்பைத் தளர்த்தி பின் நீக்குதல் என்பதெல்லாம் நாம் எடுத்த வெளி நடவடிக்கைகளேயாகும். அவர் அதோடு நிறுத்தாமல் எவ்வளவோ நிர்மாண வேலைகளையும் சேர்த்துச் செய்யச் செய்தார். இப்போது அந்த

நிர்ப்பந்தமும் நீங்கிவிட்ட நிலைமையில் அவர் என்னென்ன செய்தார் என்பதைக் கவனித்துச் செய்வோமாயின் நாமும் நல்ல வளர்ச்சியுறுவோம்.

நம் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவோம்

நாம் சத்தியாக்கிரக சக்தியை நம் வாழ்வில் புகுத்த முயலவேண்டும். ஊழியர்கள் ஒருவரோடொருவர் சண்டை-யிடுகிறார்கள். அவர்களுக்குத் தம்மிடையே ஒத்துக்கொள்வது இல்லை. தம்மால் குறிப்பிட்ட இன்னாருடன் சேர்ந்து வேலை செய்யமுடியாதென்றும், இன்னும் என்னென்னவோ சொல்லு கிறார்கள். இவ்வாறு தகராறு எழுந்திருப்பதாக என் காதில் விழும்போது 'நடக்கட்டுமே' என்று நான் சொல்லுகிறேன். ஆனால் என்னால் இன்னொருவருடன் சேர்ந்து வேலைசெய்ய முடியாதென்று ஒருவர் என்னிடம்வந்து சொன்னதும், 'உமக்கு இந்த வேலை கட்டிவராது, உம்மால் இது ஆகாது. இதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் யார் எவ்வாறு இருந்தா லும் எனக்கு எல்லோருடனும் ஒத்துக்கொள்ளும், எவரிடமும் தகராறு வராது' என்று சொல்லமுடியவேண்டும் என்று என் வாயிலிருந்து வந்துவிடுகிறது. இதுதான் சத்தியாக்கிரகத்-தின் சக்தி. இந்தச் சக்தி பிறப்பதற்கு நமக்கு நாம் மேற் கொண்டுள்ள வேலையில் சிரத்தை அல்லது நம்பிக்கையும், சத்தியத்தினிடம் மிகுந்த உறுதியும் வேண்டும். நாம் சத்தியத்திலேயே விடாப்பிடியாய், பிடிவாதமாய் நிற்க வேண்டும். இவ்வாறு நிற்கையில் எதிராளியின் மனமும் நிச்சயமாய் மாறும். அதற்கேற்ப நிலைமையிலும் மாற்றம் காணும். நமக்கு இவ்விஷயத்தில் அசைக்கமுடியாத உறுதி வேண்டும். நாம் அகில உலகையும் சுதந்திரப் பாதையில், சமாதான வழியில் கூட்டிச்செல்ல விரும்புகிறோமென்றால் நம் வாழ்க்கையில் சத்தியாக்கிரக சக்தியைக் கட்டாயம் வளர்த் தாக வேண்டும்.

ரகுநாதபுர், (தர்பங்கா மாவட்டம்)
30-12-1974.

2 சத்தியாக்கிரகியின் வாழ்க்கை முறை

பகைமையைத் துறத்தல்

எப்பொழுதும் கடவுள் நினைவுடனேயே நடந்து, கடவுளிடமே ஆழ்ந்துள்ளவரை தூய பரிசவேதியென்றே கொள்ளலாம். அவர் தொடர்பினால் தூய்மையுற்ற சூழ்நிலையில் இரும்பே இராது, எல்லாம் தங்கமாக ஆகியிருக்கு மென்று எதிர்பார்க்கப்படும். பரிசவேதியைக் கூருமல் சந்தனத்தையும் சிந்தாமணியையும் உவமைகளாகக் குறிப்பிட்ட ஏகநாத சுவாமிகளும் இதையே எதிர்பார்த்திருப்பது தெரிகிறது.

'' நீ சந்தனம். உன் உடல் முழுவதும் மணம் வீசாமல் எப்படியிருக்கும்? நீ சிந்தாமணி. உன் தீண்டுதலால் எல்லாக் கற்களும் கட்டிகளும் வைரக் கற்களாகவும் கட்டிகளாகவும் மாருமல் இருக்குமா?'' என்று அவர் கேட்கிருர். அனுபவம் வாய்ந்த குருவினுல் வழி துவக்கப்பெற்ற ஏகநாதர், ''நீ முழு சம்சித்தி பெற்றவனுயிருக்கையில் உன்னேடு தொடர்பு கொண்டுள்ள எவர்தான் உன்னைப்போல்ஆகாது இருப்பார்?'' என்று கேட்கிருர்.

ஏகநாத சுவாமிகளின் 140-ஆம் பாடலின் பொருளாகும் இது. இது தூய சத்தியாக்கிரக வாழ்க்கைமுறையையே குறிக்கிறது. கடவுள் நினைவாகவே இருந்துகொண்டு மக்களுக்குப் பணிபுரிய விரும்பும் எவரும் இவ்வாறு இராமல் இருக்கமுடியாது. அவரால் வேறுவகையில் சிந்திக்கவே முடியாது. காந்தியடிகள், ''சத்தியாக்கிரகம் என்ற ஆயுதத்திற்குத் தோல்வி என்பதே கிடையாது. அது தோல்வியையே அறியாது'' என்று சொல்லிவந்தார். இதே கருத்தை ஏகநாத சுவாமிகளும் தமது 139-ஆம் பாடலில் அலங்கார நடையில் பின்வருமாறு சொல்லியிருக்கிருர் :

''மகான்கள் மிகவும் பொல்லாதவர்கள். அவர்களைக் கெடுத்தவன் என்று இன்றுவரையில் யாரையுமே கண்டதில்லை. அவர்கள் 'நிஜ போதம்' அல்லது ஆன்மஞானம் என்ற வலையை விரித்து குறுக்கிலும் நெடுக்கிலும் நாமமும் திருநீறும் அணியும் காமம், குரோதம் என்ற இரு சாமியார்களையும் பிடித்துக் கொன்றுவிட்டார்கள். அவர்கள் எல்லோரையுமே ஒழித்துவிடும் வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள். தம்மைச் சூழவிருந்த எல்லாக் கிராமங்களையும் பட்டப் பகலிலேயே கொளுத்தித் தீர்த்துவிட்டார்கள்.'' இவ்வாறு ஏகநாதசுவாமிகள் கேலியும் கிண்டலுமாக அவர்களின் மகிமையை எடுத்தோதியிருக்கிறார்.

வேதங்களிலும் இதே வகையில் நூற்றுக்கணக்கான இடங்களில் இந்திரனுடைய பராக்கிரமம் வர்ணிக்கப் பெற்றிருக்கிறது. இறுதியில் இந்த உருவகப் போர்வையைக் கழற்றி வைத்துவிட்டு, ரிஷி நேரிடையாக எல்லோருக்கும் புரியும் நடையில் உண்மையைப் பின்வருமாறு தெளிவாக்குகிறார் :

'' மாயேத் ஸாதே யானி யுத்தானி க்ராஹு:
நாத்ய சத்ரும் நனுபுரா விவித்ஸே || ''

அதாவது ''ஏ இந்திரா ! உனது போரென்று சொல்லப் பட்டிருப்பவையெல்லாம் வெறும் மாயையே. உனக்கு இன்று பகையென்று எவனும் இருந்ததில்லை; இதற்கு முன்பும் உனக்குப் பகைவன் கிடையாது' என்பது. சூரியனை இருள் வந்து தாக்குகிறது. சூரியன் தனது பல்லாயிரம் கிரணங்களினால் அதை ஒழித்துவிடுகிறான். இதன் பொருள் இருளினால் ஒளியின்முன்—சூரியனுக்கு எதிரில் தன் முகத்தைக் காட்டவே முடியாது என்பதே. சூரியனுக்கு இருளையே தெரியாது. சூரியன் இல்லாத நிலைமையே இருள் என்பது.

பதஞ்சலி மகரிஷி, 'முழுமையான அஹிம்சையில் பகையெல்லாம் தானே விலகிப் போகின்றன. அந்த அஹிம்சை

இருக்குமிடத்தில் பகையினுல் நிலைக்கவே முடிவதில்லை' என்கிருர். ஏகநாதரும் ஒருவர் கடவுளிடமே ஆழ்ந்து விடுகையில் தீமை, கொடுமை ஆகியவை அவர்முன் தலையே காட்டமாட்டா' என்கிருர். வேதமோ 'இந்திரனுக்குப் பகையே கிடையாது, பகையையே அவன் அறியான்' என்கிறது. காந்தியடிகள் சத்தியாக்கிரக ஆயுதத்திற்கு தோல்வியென்ருல் என்னவென்றே தெரியாது என்று சொல்லுகிருர். இவை அனைத்தின் பொருள் ஒன்றுதான்.

எதிர்ப்பின் தன்மை

பகவானிடம் தன்னை முற்றிலும் இழந்து, கடவுளுள் ஆழ்ந்த முழுமைபெற்ற ஆன்மா அகில உலகையும் தன்னுள் ஏற்றுக்கொள்வான், உலகமே தானுக ஆகிவிடுவான் என்ற இந்த தத்துவத்திற்கு மாற்ருன இன்னெரு தத்துவம் நாம், உடலில் கட்டுண்டிருக்கும்வரையில் நம்மால் முழுமையான ஆன்ம நிலையை எய்தமுடியாது என்பது. அதாவது பெரிய பெரிய மகாத்மாவும் குறைகள் உள்ளவராகத்தான் இருப்பார். அவரிடமுள்ள குறைபாட்டிற்குப் பொருந்த அதிகமாகவோ குறைவாகவோ அவருக்குத் தீயோருடனும் பழகவே வேண்டி இருக்கும் என்பது. ஆனுல் இயல்பாகவே தீயோரின் கொடுமைகளுக்குப் பரிகாரம் செய்யும் பிரச்சினையும், அவற்றை எதிர்க்கும் பிரச்சினையும் எழுமே, இதற்கு என்ன செய்வது?

அதற்கும் இதே சத்தியாக்கிரகமே வழிசெய்துதரும். தீயோரின் கொடுமைக்குப் பரிகாரம் செய்வது என்ருல் அவர்களிடம் காணும் தீமைக்குப் பரிகாரம் செய்வதுதான். அதாவது வெளியில் காணும் தீமையை நம் உள்ளத்தி-லேயே தேடிக் கண்டு பரிகாரம் செய்யவேண்டும். இந்த சமீகரண சூத்திரம் நமக்குக் கைவந்துவிடுகையில் பொறுமை-யோடிருத்தல், கஷ்ட நஷ்டங்களை ஏற்றல், தாராளமான போக்கு, ஆணவமின்மை, பணிவு, எந்த நிலைமையிலும்

பதருத மனவமைதி, கட்டுக்கடங்காத உள்ளம், அயராத முயற்சி, பயனில் பற்றில்லாத மனப்பாங்கு என்ற மாற்றுவழி உறுதியாகிறது. இதுதான் கடவுளிடம் ஈடுபாடுள்ளவர்களின், பக்தர்களின் அன்றாட வாழ் முறை. இவ்வாறு வாழ்க்கையில் நைமித்திகமாக என்றேனும் செய்யவேண்டிவரும் எதிர்ப்புக்-களும் சேர்ந்துவிடுகின்றன.

இவ்வாறு எண்ணிப்பார்க்கையில் உண்மையில் சத்தியாக்கிரகம் ஒரு வாழ்க்கை முறையே என்பது புலனாகும். அதன் போக்கில் இயல்பாகவே அதுவே விசேஷ காரணங்களினால் எதிர்ப்பு முறையாக மாறுவதாகத் தோன்றுகிறது. நான் சொல்லவிரும்பியதைப் புரியும்படி என்னால் சொல்லமுடிந்-திருக்கிறதோ என்னவோ, இறுதியில் அத்துவைதத்தோடு கலக்கும் சத்தியாக்கிரகத் தத்துவம் மிகவும் சூக்குமமாய் ஆகி விடுவதால் அதைச் சொற்களால் விளக்குவதே சிரமம்.

வரலாற்றுக் காலத்தில் நடந்துள்ள தலைசிறந்த சத்தியாக்கிரகத்திற்கு உதாரணமாய் ஏகநாதரைக் குறிப்-பிடலாம். தீயோன் ஒருவன், அவர்மீது காறிக் காறி உமிழ்ந்துகொண்டேயிருந்தான்; அவரும் ஒவ்வொரு முறையும் நீரில் மூழ்கி எழுந்துகொண்டேயிருந்தார் என்பது கற்பனைக் கதையல்ல. இது ஓர் உண்மையான நிகழ்ச்சியே. இதில் இருந்து ஏகநாதர் காலத்திலிருந்த ஆட்சியாளரின் திமிர் தண்டமே தெரியவருகிறது. என் அபிப்பிராயத்தில் சத்தியாக்கிரகத்திற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் கிடைப்பது அரிது. லோகமான்ய திலகர் தமது ''கீதாரகஸ்ய''த்தில் இயேசு பெருமானும் அவருக்கும் முன்னாலிருந்த சீன வேதாந்தியான லாவோத்ஸேயும் பகைமையை ஒழிப்பதன் அவசியம்பற்றி அளித்துள்ள போதனைகளைக் குறிப்பிட்டு, அவற்றுடன் ஏகநாதரின் வாழ்க்கையின் இந்த நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பெருமையுடன், 'நமது மகாராஷ்டிர பக்தர்களின் சூழாத்தில் ஏகநாத சுவாமிகளைப் போன்றவர்கள் இவ்வாறு பகைமையற்ற வாழ்க்கை வாழ்ந்திருப்பதாகச் சொல்லக்

கேட்கிறோம்' என்று கூறியிருக்கிறார். லோகமான்யரின் இந்தக் கூற்று முற்றிலும் நியாயமானதே.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் தெளிவுறுத்தி விடுதல் அவசியமாகும். அநேகமாக எல்லோரும் இயேசு பெருமான், 'ஒருவர் உனது ஒருகன்னத்தில் அடித்தால், இதிலும் அடியென்று மறுகன்னத்தையும் காட்டு' என்று உபதேசித்திருப்பதும், ஏகநாதர் மேலே கூறியவாறு நடந்து கொண்டதும் எதிர்க்க மறுத்ததையே காட்டுகிறது என்று சிலேடைப்பொருள் கொள்கிறார்கள். காந்தியடிகள் போதித்து இருப்பதும் அஹிம்சையே ஆயினும், அது எதிர்ப்புச்செய்யச் சொல்லுவதாயிருக்கிறது. ஆனால் எனக்கோ இந்தச் சிலேடைப் பொருள் கொள்ளுவதே தவறென்று தோன்றுகிறது. சொற்களுக்குள்ள பொருளையே கொண்டாலும் இயேசு பெருமானின் வாக்கிலும் எதிர்ப்பு இருப்பது தெரியும். அவர், 'ஒருவன் உன் கன்னத்தில் அறைந்தால் அதை நீ பொருட்படுத்தாதே என்றோ, அறையைப் பெற்றுக்கொண்டு சும்மா இருந்துவிடு என்றோ சொல்லாமல் மறு கன்னத்தையும் காட்டு' என்றே சொல்லியிருக்கிறார்.

எதிர்ப்பு என்ற சொல்லில் பற்றுள்ளவருக்கு இதனால் திருப்தியுண்டாவதாயிருக்கலாம். ஆனால் என் கருத்தோ இந்த சமாதானமும், இந்த சிலேடையும்—இரண்டுமே சிறிதும் பயனில்லாதவை என்பது. முற்றிலும் அச்சமோ பகைமையோ இல்லாத மனிதனின் இயல்பான போக்கு—அது செயலுருவில் இருந்தாலும், செயலற்றிருந்தாலும், மாற்றுச் செயலின் உருப் பெற்றாலும் ஒன்று போலவேதான் இருக்கும். ஒரு தீயவன் தன் உடலில் காறி உமிழ்ந்தால், பகைமையற்ற மனிதன் தன்மீதே உமிழ்ந்து கொள்வான்; இன்னொரு பகையில்லாத மனிதனோ எதுவுமே செய்யாது சிரித்துக்கொண்டே போய்க்கொண்டிருப்பான். மூன்றாவதான பகைமையற்றவன் ஏகநாதரைப்போல நீரில் மூழ்கி மூழ்கி எழுந்து எச்சிலைக் கழுவிவிட்டால், நான்காவதாக இன்னொரு பகையற்றவன் மலர்ந்த முகத்துடன் சிறிதும்

வேறுபாடின்றி எதிராளியின் காதைப்பிடித்துத் திருகிவிடுவான் என்றெல்லாம் எண்ணிக்கொள்வதில் தவறில்லை.

சமூக அளவில் சத்தியாக்கிரகம் செய்தல்

காந்திபடிகளிடம் இருந்த அஹிம்சை அல்லது அவர் செய்த சத்தியாக்கிரகத்தில் காணப்பட்ட சிறப்பு, ஏகநாத சுவாமிகள் முதலியோர் இதை சொந்த விஷயத்தில் மட்டும் உபயோகித்திருக்க, காந்திபடிகள் சமூகத்தில் பிரயோகித்ததே என்று சொல்லலாம். இந்த வேறுபாடு சரிதான். ஆனால் இதற்குப் பெரிதும் காரணமாயிருந்தது இவர்கள் வாழ்ந்த காலமும், இவர்கள் காலத்தில் நிலவிய வேறுபட்ட நிலை-களுமே என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு காலத்திலும் ஒரு தனித்தேவை எழுகிறது. ஒருகாலத்தில் செய்ய முடிந்தது இன்னொன்றில் செய்ய முடியாமல் போகிறது. அதற்கேற்ப அந்தந்தக் காலத்தில்—யுகத்தில் தோன்றிய மகான்களுக்கு ஒவ்வொன்றைச் செய்யவும் தோன்றுகிறது.

இதைத்தவிர, உலகெங்கும் பயன்படுத்தப்படும் பெரிய பெரிய சக்திகளும் முதலில் சோதனைச் சாலையில் சோதனை செய்துபார்த்து வெற்றிகண்டபிறகே பேரளவில், சமூகமெங்கும் பயன்படுத்துவது என்பது விஞ்ஞான முறை. விஞ்ஞானிகள் இதுவரையில் செய்துள்ள கண்டுபிடிப்புகளெல்லாம் அவர்கள் முதலில் தம் சோதனைச் சாலையில் கண்டுபிடித்தவையே. அதன்பிறகுதான் அவை உலகெங்கும் பரவி மக்களின் உபயோகத்திற்கு வருகின்றன. சோதனைச் சாலையில் செய்து பார்த்த பிறகுதான் அது உலகிற்குப் பயன்படுவது சாத்திய-மாகிறது. இந்த முறையில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சிற்றளவில், சோதனைச் சாலையில் செய்ததை வெளியே கொண்டுவந்து எல்லோரும் செய்யத் தொடங்குகை-யில் அதற்குரிய பாதுகாப்புகளை, வரம்புகளை உணர்ந்து செய்தால் போதும் என்று நினைக்கிறோம். முதலில் கரும்

பலகையில் இழுத்த சிறுகோடுகளிலும் வைத்த சிறு புள்ளிகளிலும் தொடங்கியது இறுதியில் இயல்பான முறையில் கன பூமிதி (Solid Geomatry) யாகப் பேருரு எடுப்பதும் இதே வகையில்தான்.

ஆகையால் ஒரு மனிதன் தன் சொந்த விஷயத்தில் செய்யும் சோதனைக்கும் அவனேயோ வேருெருவனே சமூகத்தில் பேரளவில் செய்வதற்கும் தத்துவ ரீதியாக வேற்றுமை எதுவும் இருப்பதாக எண்ணுவதற்கு அவசியம் இல்லை. நிலைமையில் மாற்றம் காரணமாக சமூக முறையில் எதிர்ப்புச் செய்யும் எண்ணம் ஏகநாத சுவாமிகளுக்குத் தோன்ற இடமே இல்லை. அவரிடம் எவரேனும் தோண்டித்தோண்டிக் கேட்டிருந்தாலும், 'சமூகப் பாதுகாப்புக்காக சத்திரிய முறையில் எதிர்ப்புச் செய்யலாம்' என்றும் அவர் சொல்லி நிறுத்தியிருப்பார் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. அதிகம் சொல்லுவானேன்? ஒருசமயம் ஜனார்த்தன சுவாமிகள் தியானத்தில் ஆழ்ந்திருக்கையில் பகைவரின் படை அவரை நோக்கி விரைந்துவந்ததாகவும் அதைக்கண்ட ஏகநாதரே குதிரையில் ஏறிச்சென்று அப்படையை எதிர்த்து அடித்து விரட்டியதாகவும்கூட கதை இருக்கிறது. இந்தக் கதை ஏகநாத சுவாமிகளைப்பற்றியதாய் இல்லாமல் அவர் காலத்தில் வாழ்ந்த கடமையில் பற்றுள்ள வேருெரு பெரியவரைப்பற்றியதாகையில் நாம் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை. ஏகநாத சுவாமிகளின் வரலாற்றிலுள்ள சிறப்பு அவரது சத்தியாக்கிரகத்திலேயே அமைந்திருக்கிறது. அந்த அம்சத்தில்தான் லோக மான்ய திலகர் போன்ற பெரியோரும் மற்றவர்களும் கவனம் செலுத்தியிருக்கிருர்கள்.

ஏகநாத சுவாமிகளுக்கு சத்தியாக்கிரகம் என்ற சொல் தெரியாது. ஆனல் அவரது வாழ்க்கை முழுவதிலும், அவர் மனத்தின் அமைப்பிலும் சத்தியாக்கிரகத் தத்துவம் பரவி, ஊறியிருந்திருக்கிறது.

" ஆபுலீச தாரா | ஜரீ டேரீக வியபிசாரா |
க்ரோதாசாத்ரா | அந்தரீ நயே ||" (147)

"உன் மனைவியே விபசாரம் செய்யப் புகுந்தாலும் உன் சித்தத்தில் கோபம் தோன்றக் கூடாது" என்பது போன்ற மன அமைதியின் எல்லையைக் காட்டும் நிலையை அவர் வர்ணித்திருப்பதைப் பார்க்கையில் நமக்கு வியப்புண்டாக வில்லை. மகான்கள் எல்லோருமே அமைதியுள்ளவர்களாய்த்-தான் இருக்கிறார்கள். ஆயினும் மகான்கள் அனைவரிலும் ஏகநாத சுவாமிகளிடம் காணப்பட்ட மன அமைதியைக்கருதி "கொடைக்கு கர்ணன்" என்பதுபோல "அமைதிக்கு ஏக நாதர்" என்ற உலக வழக்கே இருந்து வருகிறது. ஞான-தேவருக்கு ஒரு சமயம் கோபம் வந்துவிட்ட போது "**தாடீ உகடா ஞானேச்வரா**" — 'ஞானேஸ்வரா, திற கதவை' என்று கூச்சலிட்டு முக்தாபாய் அவருக்கே அறிவு புகட்ட வேண்டி வந்திருக்கிறது. இதைப் பார்க்கையில் அமைதியின் உச்ச நிலையை எய்தியவரைக் குறிப்பிட வேண்டுமென்றால் ஏகநாதரைத்தான் கூற வேண்டியிருக்கும்.

இந்த விஷயத்தில் ஏகநாதர் ஒரு சில சொற்களில் தமது அனுபவத்தை வெளியிட்டிருப்பது எந்த சாதகனின் கவனத்தையும் கவராதிராது. அவர்,

தேஹீம் வாடே ஜோ ஜோ சாந்தி | தோ தோ விரக்தி
அங்கீகாரணே | ஐயா ஆஹே அனுபவ ....|| "

'உடலில் அமைதி வளர வளர அகத்தில் வைராக்கியம் புகுந்து பெருகுகிறது என்பது அனுபவம்' என்கிறார். ஆனால் வைராக்கிய சீலர்களிடம் ஒருவகையான கடுமையும், பிறரோடு பழகுவதில் ஒரு கரகரப்பும் இருக்குமென்றே பொதுவில் எண்ணப்படுகிறது. ஆனால் ஏகநாத சுவாமிகள் சொல்லுவதோ இதற்கு நேர்மாறாய் இருக்கிறது. அவர் விரக்தியையும் சாந்தியையும் வெவ்வேறென்று எண்ணாமல் ஒன்றாகவே கருதுகிறார் என்று ஆகிறது.

இதுதான் உண்மையும், அனைத்தையும் தன்னுள் அடக்கிய பொது நோக்குமாகும். இல்லையேல் மக்கள் கருதுகிறபடி வறட்டு வைராக்கியம் இழிந்த பைத்தியக்காரத் தனமாய் ஆகிவிடவும், அதன் குறைகளை அகற்றுவதற்காக விவேகம் அல்லது பகுத்தறிவின் உதவியைப் பெற்று, அதை முழுமை எய்தச் செய்ய வேண்டியிருக்கும். ஏகநாத சுவாமிகளோ தமது அனுபவத்தைக் கொண்டு இந்த எல்லாத் தொந்தரவுகளையும் அகற்றிவிட்டார். வைராக்கியத்தின் உதவியினுல் கர்மயோகத்தையும், தியானயோகத்தையும், சிந்தனுயோகத்தையும் கரை கண்டுவிட்ட சாதகனையே நொண்டி, முடங்களாகவும், பித்தர்களாகவும் எண்ணுவதானல் சாதகனுக்கு கடைத்தேற வழிதான் எங்கே இருக்கும்? இதனுல் ஏகநாதசுவாமிகள் எவ்வகையில் பார்த்தாலும் நமக்கு மிகவும் சரியான வழியைக்காட்டியிருக்கிருர் என்பதை சாதகர்களாகிய நாம் ஒரு பொழுதும் மறக்கக்கூடாது.

''சந்த சுரபி''

———o———

3. சத்தியாக்கிரக சாஸ்திரம்

அந்தராத்மாவைத் தட்டியெழுப்பும் முறை

சமுதாயத்தில் கருணை இருந்து வருகிறது. ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டேயிருந்தாலும் பொருளுள்ளவர்கள் இல்லாதவர்களுக்குத் தந்து உதவலாமே என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இந்த கருணை அல்லது தயை மட்டும் இருந்தால் போதாது. இன்று சமத்துவமும் அவசியமாகும். அதைத் தோற்றுவிக்கக்கருதியே பூதானயக்ஞ இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. துவேஷமற்ற எதிர்ப்பு அல்லது சத்தியாக்கிரகத்தின் ஓர் அங்கமேயாகும் இது. நான் ஓயாது சுற்றிக்கொண்டிருக்கிறேன்; மழையிலும் சுற்றுவதை நிறுத்துவதில்லை. மக்களிடம் தம் உடமையில் ஆறில் ஒரு பகுதி அளிக்கும்படி கேட்கிறேன். எவரேனும் குறைத்துக் கொடுத்தால் வேண்டாமென்று சொல்லி விடுகிறேன். இதெல்லாம் சத்தியாக்கிரகமே அன்றி வேறல்ல. சிலர் என்னிடம், 'நீங்கள் செய்யும் இதனாலெல்லாம் ஒன்றும் ஆகாவிட்டால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டதற்கு, நான், 'இவ்வகையில் எண்ணுவதே இல்லை. சத்தியாக்கிரகம் என்பது ஒரு மாபெரும் சாஸ்திரம்! அதற்குமுன் எதுவும் நிற்கமுடியாது; காரணம், அதிலேயே பகையின்மை, எதிர்ப்பு என்ற இரண்டும் சேர்ந்திருப்பதால் அதன் சக்தி பெருகிவிடுவதுதான். இன்று நான் செய்துவருவது அடக்கமான சத்தியாக்கிரகம். 'இதுவே போகப் போக கடுமையான சத்தியாக்கிரகமாய் ஆகிவிடலாம்' என்று பதில் சொல்லியிருக்கிறேன். நான் இவ்வாறு சொல்லுவதைக் கேட்கும் சிலர், 'ஏது, நீங்கள் பூச்சாண்டி காட்ட ஆரம்பித்துவிட்டீர்கள்!' என்கிறார்கள். ஆனால் குடித்துவரும் தன் தகப்பனிடம் அவன் மகன், 'நீங்கள் குடிப்பதை நிறுத்தாவிட்டால் நான் சாப்பிட மாட்டேன்' என்று சொல்லுவது அவன் தன் தகப்பனுக்கு பூச்சாண்டி காட்டியதாகுமா? தன் மகன் செய்து வந்த

தவற்றை நிறுத்தச் செய்யவேண்டி தாய் பட்டினி கிடந்தால் அதை அவள் தன் மகனுக்குப் பூச்சாண்டி காட்டியதாகச் சொல்லலாமா?

பகையின்மையும் எதிர்ப்பும் ஒன்ருய்ச் சேர்ந்து நிரம்பித் ததும்பும் இடத்தில் அச்சுறுத்துவதற்கு அவசியமே இராது. அது தட்டியெழிப்புவதேயன்றி அச்சுறுத்துவதோ, பூச்சாண்டி காட்டுவதோ ஆகாது. வீடுகளில் குழந்தைகளைக் காலையில் எப்படி எழுப்பிவிடுகிருர்கள்? தாய் குழந்தையிடம் வந்து ''குழந்தாய் எழுந்திரு, எழுந்திரு'' என்று இரண்டு மூன்று முறை சொல்லுகிருள். அவன் எழவில்லையென்ருல் அவன் உடலை இலேசாக உலுக்கி விடுகிருள். இவ்வாறு ஒன்றை யடுத்து ஒன்ருக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முதலில் வாயால் சொன்னது பயன்படாதபோது கையால் தொட்டு உலுக்கியது அச்சுறுத்தியதோ இம்சை புரிந்ததோ அன்றி, அன்பினல் தீண்டியதேயாகும். சிற்றுருவில் அன்பு பயனளிக் காத போது அதுவே பேருருவாகிவிடுகிறது. 5 ரூபாயில் ஆகாத காரியத்திற்கு பத்து ரூபாய் செலவழிக்கப்பட்டால் செய்த காரியம் என்னவோ ஒன்றே அன்றிவேருய் ஆகிவிடாது. ஐந்து ரூபாயில் காரியம் நிறைவேறவில்லையென்று ஐந்தாறு அடிகொடுத்து அதை நிறைவேற்றப்பார்த்தால் அது அச்சுறுத்துவதாகும். ஐந்து ரூபாய்க்குப் பதிலாக ஆறு ரூபாயோ பத்துரூபாயோ கொடுப்பது அச்சுறுத்துவதோ, அதட்டுவதோ ஆகாது; முந்திய வழியிலேயே இன்னும் சிறிது முன்னே செல்லுவதாகும். ஜடத்தன்மையை அல்லது உயிரின்மையைப் போக்குவதற்கு உயிரைமேலும் அதிகமாகப் புகுத்த வேண்டும், அவ்வளவுதான். எதிராளியிடமுள்ள ஜடத்தன்மையின் அளவு அதிகமாகவாக நமது அறிவு அல்லது சைதன்யமும் அதிகமாக வேண்டியிருக்கிறது. எதிரேயுள்ள இருளுக்கு ஒத்து அதை அகற்ற முற்படும் ஒளியின் சக்தியும் இருக்கவேண்டியதாகிறது. நம் மனதில் பிறரிடமுள்ளதைப் பறிக்கும் எண்ணமோ, அச்சுறுத்தும் கருத்தோ சிறிதும் இல்லை என்பது தெளிவு. நாம் அந்தராத்மாவைத் தட்டியெழுப்பவே

பார்க்கிறோம். அதன் பொருட்டு ஊர் ஊராய்ச் சுற்றவும், எல்லோரிடமும் யாசிக்கவும், விஷயத்தை விளக்கவேண்டி கூட்டங்களில் பேசவும் வேண்டியிருக்கிறது. இதன் பொருட்டு சத்தியாக்கிரகம் செய்ய நேர்ந்தால் அதுவும் மக்களைத் தட்டி-யெழுப்புவதற்காகவே உள்ளதாகையால் அதையும் செய்-வோம்.

சத்தியாக்கிரகம் அன்பின் செயல்முறையாகும். இதனால் எவரை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப்படு-கிறதோ அவரே நமக்குக் கடமைப்பட்டவராவார். தன் பிள்ளையின் நலன் கருதி அவன் திருந்த வேண்டுமென்று தாய் பட்டினி இருந்தால் பிள்ளை தாய் தன் நலன் கருதியே உபவாசம் இருந்ததாகத்தானே நினைப்பான்? இதேபோல எதிராளி நாம் சத்தியாக்கிரகம் செய்தால் நாம் அவனை அச்சுறுத்துவதாக நினைக்கமாட்டான். நமது சத்தியாக்-கிரகம் அவனது அச்சத்திற்குக் காரணமாகுமானால் நாம் செய்தது உண்மையான சத்தியாக்கிரகமல்ல என்று எண்ணிக்கொண்டு விடலாம். எதிராளி சத்தியாக்கிரகத்தை அச்சுறுத்துவதாக எண்ணாமல், நமக்கு அவனிடமுள்ள பேரன்பே இவ்வகையில் வெளியாகியிருப்பதாக அவனுக்குத் தோன்றும்போதுதான் அது உண்மையான சத்தியாக்கிரகம் எனப்படும்.

பேருசராய் (பீகார்)
1-11-1953.

தீவிரத்திலிருந்து அதிக தீவிரமல்ல, சூக்குமத்தி-லிருந்து அதிக சூக்குமம்

நாம் சத்தியாக்கிரகம் பற்றிச் சிந்திக்கையில், மனிதன் சிறிய இம்சையிலிருந்து பெரிய இம்சைக்கும், பிறகு அதைவிட மிகப் பெரிய இம்சைக்கும் போக யோசிப்பதைப் போலவே அநேகமாய் யோசிக்கிறோம். அதாவது நாம் முதலில்

அடக்கமான சத்தியாக்கிரகம் செய்வோம். அதனுல் காரியமாகாவிட்டால் அதையும்விடக் கடுமையான சத்தியாக்கிரகமும், அதுவும் பயன்தராதபோது உக்கிரமான சத்தியாக்கிரகமும் செய்வதென்று சத்தியாக்கிரகத்தின் கடுமையை மேன்மேலும் அதிகமாக்கிக்கொண்டே போவோம். ஆனுல் உண்மையில் நாம் சிந்திக்கவேண்டியது இதற்கு நேர்மாருன முறையிலாகும். அதாவது நாம் அடக்கமான சத்தியாக்கிரகம் தொடங்கினேம்; அதனுல் காரியம் ஆகாதென்று தெரியும்போது அதன் சக்தியைப் பெருக்கவேண்டி இன்னும் அடக்கமான சத்தியாக்கிரகத்தைத் தேடவேண்டும்; அதனுலும் காரியமாகாதபோது சக்தியை மேலும் கூட்டக்கருதி அதையும்விட அடக்கமான சத்தியாக்கிரகத்தைக் கண்டு கையாளவேண்டும்.

ஹோமியோபதி வைத்திய முறையில் மருந்தின் அளவு மிகவும் குறைவாய் இருக்கவேண்டுமென்றும், ஆனுல் அதன் சக்தியை, ஆற்றலைப் பெருக்குவதற்காக அதை மேன்மேலும் அதிகமாக அரைக்க வேண்டுமென்றும் சொல்லித்தரப்படுவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதாவது பாவனையின் அளவு கூடக் கூட பொருளின் அளவு குறைந்து கொண்டே போனுல் விளையும் பயன் அதிகமாகிக் கொண்டே போகும். இம்சைத் துறையில் சாதாரண ஆயுதத்தினுல் பயன் விளையாதபொழுது கடுமையான ஆயுதத்திற்குச் சக்தி அதிகமிருக்குமாகையால் முதலில் ஆகாத காரியம் இப்போது ஆகிவிடுமென்று எண்ணப் படுகிறது. ஆனுல் இங்கோ நாம் கையாளும் முறை அதற்கு நேர்மாருய் இருக்க வேண்டும். ஒரு வழியில் செல்லுகையில் வேலையாகவில்லையென்ருல் நமது அடக்கம் போதாது; அடக்கத்தை அதிகமாக்கினுல் காரியம் நிறைவேறிவிடு மென்று அறிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் சத்தியாக்கிரகத்தின் தன்மை இதுவே யாகும். இது வரையில் சுயராஜ்யத்திற்காக நடந்த சத்தியாக்கிரகத்தில் ஆங்கிலேயரை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கி

ஆங்கிலேயர் ஆட்சியை இங்கிருந்து அகற்றுதலென்ற எதிர்-மறைச்செயல் முறையே கையாளப்பட்டது. அந்தக் காலத்தில் கையில் ஆயுதமில்லாமையினுல் என்ன செய்வ-தென்று தெரியாது இந்தியா திகைத்துக் கொண்டிருந்தது பித்து பிடித்தது போல் இங்குமங்குமாக சிறிய பெரிய கொலைகள் செய்யவோ, அல்லது தமக்குள்ளேயே இம்சைகள் புரிந்து திருப்திப்படவோ அல்லது தன்னுல் எதுவுமே ஆகா-தென்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கவோ செய்தது. அந்த நிலையில் இந்த அஹிம்சைக் கருத்து மக்களிடையே தோன்றவே மக்கள் அதை தமக்குப் புரிந்த, தெரிந்த அளவில் ஏற்றுக்கொரண்டார்கள். இவ்வாறு அந்தக் காலத்தில் கையானப்பட்ட சத்தியாக்கிரக முறையை முழுமையானது என்று எண்ணக் கூடாது. அது ஒரு விசேஷமான நிலைமையில் கையாளப்பட்ட அரைகுறையான சத்தியாக்கிரக முறையாகும். ஆனுல் சுயராஜ்யம் அடைந்த இன்ரு நடந்துவரும் ஜனநாயக ஆட்சியைக் கருதியும், உலகெங்கிலுல் இயங்கி வரும் சக்திகளை நுணுக்கமாய் உணருகையினும் நாம் சத்தியாக்கிரகத்தின் அளவை, தன்மையை மேன்மேலும் அடக்கமானதாய் ஆக்க வேண்டி-வேண்டியிருக்கும். அடக்கம், மேலும் அடக்கம், மேன்மேலும் அடக்கமென்று சத்தியாக்கிரகம் வளர்ந்து கொண்டே போனுல் அது ஒன்றைவிட ஒன்று அதிக ஆற்றலும் சக்தியும் உள்ளதாய் அமையும்.

அனுமானின் அறிவு நமக்கு வேண்டும்

துளசீ ராமாயணத்தில் சுரசா என்ற ஒரு ராட்சதியின் கதை வருகிறது. **''சுரசா நாம அஹினகீ மாதா''**- சுரசா என்று பாம்புகளின் தாய் ஒருத்தி. அவள் அனுமாரின் எதிரில் வந்து நின்ருள். அவள் தன் வாயை ஒரு யோசனை அளவிற்கு விரித்தாள். அதைக் கண்டதும் அனுமான் தம் உடலை இரண்டு யோசனை அளவிற்குப் பெருக்கிக் கொண்டார்.

அவள் தன் வாயை இரண்டு யோசனை அளவிற்கு விரிக்கவே, அனுமான் நான்கு யோசனை அளவிற்கு தம் உடலைப் பெரி-தாக்கிக் கொண்டார். இதைக் கண்ட சுரசா எட்டு யோசனை அளவிற்குத் தன் உடலை விரித்துக் கொண்டாள். அதைக் கண்ட அனுமார் 16 யோசனை அளவிற்குத் தம் உடலை விரித்துக் கொண்டார். அதைக்கண்ட சுரசா 32 யோசனை அளவு உடலுள்ளவளாக ஆகிவிட்டாள். அப்போது அனுமான் 'நாம் நம் உடலை விரித்துக் கொண்டே போனல் இவளை நம்மால் வெல்ல முடியாது. 32 யோசனை அளவு விரிந்துள்ள தன்வாயை இவள் 64 யோசனைக்கும் பிறகு 128 யோசனைக்கு-மாக விரித்துக் கொண்டே போனல் அதற்கு முடிவேது? ஆகையால் நாம் இவளை நம் உடலை மேன்மேலும் குறுக்கிக் கொண்டே போய்த்தான் வெல்ல வேண்டுமென்பதைக் கண்டார். "அதி லகு ரூப தரேவு ஹனுமானு" — அனுமான் தம் உருவை மிகவும் நுண்ணியதாய் ஆக்கிக் கொண்டார். அந்தச் சிற்றுருவுடன் அவள் வாயில் புகுந்து நாசித்துவாரம் வழியாக வெளியிலும் வந்துவிட்டார். இலங்கைக்குப் போகாது அவர் வழியை மறித்துக் கொண்டிருந்த சுரசாவை அவர் இந்த யுக்தியினல் வென்று இலங்கையில் புகுந்தார்.

இப்போது இம்சை, வன்முறையென்ற கொடிய சுரசா அணுகுண்டென்றும் நீரகக் குண்டென்றும் பல்வேறு உருக்-களில் தன் வாயைப் பிளந்து கொண்டு நம் எதிரில் நிற்கை-யில் நாம் மிகவும் சூக்குமமான சத்தியாக்கிரக யுக்தியினல் அதன் வாய் வழியே உள்ளே புகுந்து, அதன் நாசி வழியே வெளியேறிவிட வேண்டும். இப்பொழுதைய நிலையில், தற் சமயம் நடப்பவைகளைப் பார்க்கையில் எனக்கு இந்த யோசனை தான் தோன்றுகிறது.

பூரி, 27 3-1955

—o—

4. அணுயுகத்தில் எழுந்துள்ள பிரச்சினை

போர்க்களத்தில் போய் அசையாது நின்று மார்பில் எதிரிகளின் குண்டுகளை ஏற்று அஹிம்சா ரீதியான எதிர்ப்பு முறைறைக் கையாளக் கூடிய சக்தி ஒன்றைத்தோற்றுவிக்க முடியுமா என்பதே பிரச்சனை. இந்த பிரயோகத்தைச் செய்வது எப்போது, எப்போது இதைச் செய்யக்கூடாது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

பண்டைய துறவி, முனிவர்களின் வாழ்க்கையில் இது, நேரடியாகச் செய்து பார்க்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ இடங்களில் மகான்கள் எதிரியின் அடியை வாங்கிக்கொண்டே-யிருந்து வெற்றி பெற்றிருக்கிறுர்கள். பலவிடங்களில் அவர்களில் பலர் அடியைப் பெற்றுக் கொண்டேயிருந்து, இறந்தும் போயிருக்கிறுர்கள். இவ்வாறு இறந்தும் அவர்கள் இறக்காமல் வாழ்ந்தும் வெற்றியோடும் விளங்கியிருக்கிறுர்கள். சின்னஞ் சிறு சமுதாயங்கள் ஒத்துழையாமை செய்ததற்கும் உதாரணங்கள் இருக்கின்றன. நம் நாட்டிலோ ஒரு ராஜ்யமே, நம் நாடு முழுதுமே ஒத்துழையாமையைக் கடைப்பிடித்து வெற்றி பெற்றிருக்கிறது. இந்த அணுயுகத்திலோ இவற்றிற் கெல்லாம் நேர்மாருன உதாரணங்கள் நம் கண்முன் வர வேண்டும்.

ஆயுதங்களை மேன் மேலும் பெருக்குவதில் பல ஆயிரமாண்டுகளாக எத்தனையோ விஞ்ஞானிகளும், வீரர்களும், அரசியல் ஞானிகளுமாகத் தம் அறிவையும் உயிரையும் பயன்படுத்திப் பாடுபட்டிருக்கிறுர்கள். அஹிம்சையை வளர்ப்பதிலோ எத்தனையோ மகான்கள் பண்டைக்காலத்தில் சிந்தனை புரிந்து இம்சையைக் கட்டிப்படுத்துவதற்காகச் சொந்த முறையில் பரிசோதனைகள் செய்திருக்கிறுர்கள். இம்சை புரிவதற்குக் குறிப்பிட்ட ஓர் இனத்தாருக்கு மட்டுமே உரிமை இருக்க

வேண்டும், மற்றவர்கள் அந்தப்பக்கமே எட்டிப்பார்க்கக்கூடா தென்ற ஒரு சமுதாய விதியே செய்யப்பட்டது. இம்சையைக் கட்டுப்படுத்துவதற்கான இந்தச் சோதனை பல்வேறு இடங்களில் நடந்திருக்கிறது. அந்தச் சோதனைகள் நாட்டின் பழைய அனுபவங்களென்ற சொத்தாகச் சேமிக்கப்பட்டு இருந்து வருகிறது. ஆனால் இன்றைய நிலையில் எடுத்துப் படுத்தக்கூடியதாக அதில் எதையுமே காணோம்.

தீமையை நன்மையைக் கொண்டு அழி

முகம்மது நபியின் வரலாற்றில் ஒரு செய்தி வருகிறது. அவருக்கு ஒரு கருத்துத் தோன்றிற்று. அவர் அதை மக்களுக்கு எடுத்துச் சொல்லலானார். அவர் எவ்வளவோ துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். அவரிடமிருந்த ஒரு சில சீடர்களும் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்க நேர்த்தது. அவர் என்ன வந்தாலும் அனுபவிப்பது என்று முடிவு செய்துகொண்டு, அந்த முடிவைச் சிறிதும் தளர்த்தாமலே நடந்துவந்தார். ஆனால் மிகவும் துன்புறுத்தப்பட்டபோது தம் சீடர்களில் பலரின் தெம்பு குறைந்து, அவர்கள் பயந்து போனதைக் கண்டதும் அவர்களுக்கு ஆயுதம் தாங்கி எதிர்க்க அனுமதியளித்து விட்டார். அதன் விளைவு என்னவாயிற்று என்று வரலாறு கூறுகிறது. இப்போது நாம் அதில் புக வேண்டியதில்லை. இதைக் கொண்டு அந்தக்காலத்தில் அவர் இவ்வாறு செய்தது பெரிய தவறென்று நாம் தீர்ப்புக் கூறுவோமானால் அது பிழையாகிவிடும். அந்தக் காலத்தின் நிலையைக் கருதி அவருக்கு எது சரியென்று தோன்றிற்றோ அதைச் செய்தார் என்று எண்ணுவதே நம் பணிவையும் நாம் அறிவுள்ளவர்கள் என்பதையும் காட்டும். இன்றைய நிலையைக் கருத்தில் கொண்டு நாம் செய்யும் முடிவையே அவர்களும் செய்திருக்க வேண்டுமென்று நினைப்பது சரியல்ல. பாவத்தை புண்ணியத்தைக் கொண்டே எதிர்க்க வேண்டுமென்று குர்ரானில் போதிக்கப்பட்டிருக்கிறது; தீமையைப்போக்க வேண்டுமானால் அதை நன்மையைக் கொண்டுதான் போக்க முடியும்.

"தீமையை அகற்ற நன்மையைப் பயன் படுத்துவதே நல்லது" என்பது

குர்ரானிலுள்ள ஒரு பிரசித்தமான வாக்கியம். ஆனால் அது சாத்தியமில்லாது போகையில் நீ தப்புவதற்குத்தேவையான அளவு, மனத்தில் பகைமை சிறிதுமின்றி, ஆயுதங்கொண்டு எதிர்ப்பது மன்னிக்கப்படும். அவர் எடுத்தது இத்தகைய நடவடிக்கையே தாம் அஹிம்சையினின்று வழுவாது இருந்து கொண்டேதான் அவர் இம்சையைக் கையாண்டார். தமது அடிப்படைக் கொள்கையான 'நன்மையைக் கொண்டே தீமையை ஒழிக்க வேண்டும்;' 'தீமையை நன்மையினால் எதிர்த்து நில்' என்பதில் உறுதியாய் இருந்து கொண்டே சங்கடமான அனுபவநிலையில் இதைச் செய்யாவிட்டால் இன்னும் அதிகமான சிரமம் நேரும் என்ற கருத்திலேயே அவர் அதைச்செய்தார். அவர் இவ்வாறு செய்த முடிவில் பிழை இருந்திருக்கலாம். ஆனால் நாம் இவ்வாறு தீர்ப்புக் கூறுவது சரியல்ல. அவர் இருந்த நிலையில் அவர் செய்தது சரியென்றே கருதவேண்டும்.

தன்யாஷ்டகம்; சாபாஷ்டகம்

இங்கே இயேசு பெருமானின் நிலை என்னவென்று பார்ப்போம். அவர் "Resist not evil" அதாவது 'தீங்கை எதிர்க்காதே' என்று சொன்னார். ஆனால், அவரே "Woe unto you, woe unto you" 'நீ அழிவாய், நீ அழிவாய்' என்று மிகவும் கடுமையான சொற்களில் சாபம் அளித்திருக்கிறார். மத்தேயுவின் விவிலியத்தில் ஒரு பகுதிக்கு "எட்டு சாபங்கள்" என்ற பெயரே இட்டிருக்கிறார்கள். நான் அதை "சாபாஷ்டகம்" என்று அழைத்திருக்கிறேன். இதேபோல 'Blessed are the poor in spirit'—"பணிவுள்ளவர்கள் வாழ்வார்" என்பதுபோன்ற எட்டு வாக்கியங்களும் வந்திருக்கின்றன. அதற்கு நான் "தன்-

யாஷ்டகம்''— வாழ்த்து எட்டு என்று பெயரிட்டிருக்கிறேன். நான் இயேசு பெருமான் மிகவும் கடுமையான சொற்களைக் கையாண்டிருக்கிறாரென்று கூறினால், அது அதிகப்பிரசங்கம் ஆகும். அவ்வாறின்றி நான் இதிலுள்ள நியாயத்தை விசாரிக்கப் புகுந்து இயேசு பெருமான் இதைவிட இன்னும் அடக்கமாகச் சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும் என்றாலோ அது பெரிய தவறும், என் ஆணவத்தைக் காட்டுவதுமாய் ஆகிவிடும். அக்கால நிலையில் இந்தச் சொற்கள் அவரது கருணை ததும்பும், புண்பட்ட உள்ளத்திலிருந்து வெளிவந்த சொற்களேயாகும். இந்தச் சொற்கள் அப்போது தேவைப் பட்டன. ஆனால் இதனாலேயே பிற்கால சமுதாயம் அவரிடம் கோபமுற்று, அவரை சிலுவையில் அறைந்துவிட்டது. இதை நாம் அவரது தோல்வியாகக் கருதாமல் வெற்றியென்றே கொள்ளவேண்டும்.

கடுமையான போக்கு இம்சையே

இயேசு பெருமானின் இந்த மொழிகள் அவரது தாயுள்ளம் உற்ற வேதனையின் விளைவாகும். ஆனால் நான் என்னையே கவனிக்கையில் என் வாயிலிருந்தோ அல்லது உங்கள் வாயி-லிருந்தோ இவ்வகையான சொற்கள் வருமானால், 'ஐயா, நீங்கள் இவ்வாறு சொல்லுவது சரியல்ல' என்றே சொல்லு-வேன். இதுவரையில் பெற்றுள்ள அனுபவத்தைக்கொண்டு முன்னேறவேண்டும். இராமச்சந்திரன் கையில் வில் ஏந்தியத-னால் கிருஷ்ணன் தானும் வில்லே பிடிக்கவேண்டுமென்று எண்ணவில்லை. அவர் குழல் ஊதலானார். புத்தரோ தமக்கு குழலும் தேவையில்லை என்ற எண்ணத்தில் மௌனத்தை விரும்பினார். நம் முன்னோர்கள் செய்ததையே நாமும் செய்து கொண்டிருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. நாம் அதன் சாரத்தை, உட்பொருளைப் புரிந்துகொள்ளவேண்டும். சில ஆண்டுகளுக்குமுன் நான் இதே விஷயத்தை இந்தக்காலத்தில் சத்தியாக்கிரகம் அடக்கமானதாகவும், மேலும் அடக்கமான-

தாகவும் ஆகிக்கொண்டே போகுமென்று சொன்னேன். நாம் அடக்கத்திலிருந்து கடுமைக்கும், அதிலிருந்து அதிகக் கடுமைக்கும், பிறகு அதையும் பார்க்கக் கடுமைக்கும் போய்க் கொண்டிருந்தால் இம்சைக்கும் அஹிம்சைக்கும் இடையிலுள்ள கோட்டிற்கு வந்துவிடவும், அங்கிருந்து ஒரு அடி அப்பால் சென்றதும் இம்சையில் போய் காலே வைத்துவிடுவோம். ஆகையால் கடுமையான போக்கு என்ருல் அது அஹிம்சை-யாய் இராது.

அஹிம்சைப்போர் அகத்தில் நடத்தப்படுவது

இம்சை முறையில் ஒரு சோதனே நடத்தி அதில் வெற்றி வராவிட்டால் மேலும் கடுமையான சோதனே செய்யப் படுகிறது. அதிலும் வெற்றி வராதபோது இன்னும் கடுமை-யான சோதனே செய்யப்படுகிறது. இம்சையின் வழியாகும் இது. இதற்கு மாருக அஹிம்சை முறையில் ஒரு சோதனே செய்து அதற்குத் தக்க பயன் விளேயாவிட்டால் அதே சோதனேயை இன்னும் அடக்கமான முறையில் செய்ய வேண்டியிருக்கும். அஹிம்சைப் போராட்டம் வெளியே, போர்க்களத்தில் நடப்பதல்ல. அது நடப்பது எதிராளியின் உள்ளத்திலும் நம் உள்ளத்திலுமாகும்.

சொல்லின் ஆற்றல் குறையும்போது ஆயுதங்களின் அவசியம் அதிகமாகிவிடுகிறதென்று நான் சொல்லியிருக்கி-றேன். சொல்லுக்கு வரும் ஆற்றல் சிந்தனேயிலிருந்தாகும். அதன்பொருட்டு வெளிநடவடிக்கைகளே அதிகமாக்கவேண்டிய அவசியமில்லே. உள்ளத்தை, கருத்தை தூய்மையாக்கிஞல் போதும். காந்தியடிகள், 'ஒரேயொரு சத்தியாக்கிரகி இருந்தாலே போதும்; அவன் உலகின் துயரையெல்லாம் துடைத்துவிடுவான்' என்று சொன்ஞர். அவருக்கு இந்தக் கருத்து தோன்றியது அவரது பேரறிவிலிருந்து ஆகும். இந்தப் பேரறிவு ''பாவஸம் சுத்தி'' அல்லது கருத்துத்

தூய்மையிலிருந்து வருவது. கருத்துத் தூய்மை பெற்றுள்ள ஒருவர் வாயிலிருந்து வரும் சொற்கள் தனித்திறன்பெற்று விளங்கும். ஆகையால் நாம் இத்துறையில் பரிசோதனைகள் செய்யவேண்டும்.

ஒரு சமயம், 'தாய் தன் குழந்தைக்கு பாலூட்டுவதைப் பார்க்கையில் நமக்கு மகிழ்ச்சியுண்டாகிறது; நம் கண்முன் தாயன்பின் சித்திரம் வந்து நிற்கிறது. அதைக்கண்டு மகிழாதவர் இருக்கமாட்டார்' என்று சொன்னேன். ஒருவர் துன்புற்ற கொடிய நோயாளி ஒருவருக்குப் பணிவிடையும் சிகிச்சையும் செய்ததில் அவரது நோய் நீங்கிக் குணமானர் என்று சொல்லக் கேட்டதும் நம் சித்தம் மகிழ்கிறது. கருணைச் செயல், அன்பான பணிவிடை, தாய் செய்வதுபோன்ற உதவிகள் ஆகியவை நடந்ததாகக் கேட்டதுமே எல்லோருக்கும் காது குளிருகிறது. இதேபோல ஏதோ ஓர் இடத்தில் சத்தியாக்கிரகம்நடப்பதாகச் செய்திவந்ததும் எல்லோருக்குமே காது குளிரவேண்டும். வங்காளி மொழியில் "**கோரதோ சுந்தர், கோரதோசுந்தர்**"— (எவ்வளவு அழகு எவ்வளவு அழகு) என்கிருர்கள். இதேபோல சத்தியாக்கிரகம் நடப்பதாகக் கேள்விப்பட்டதும் நம் வாயிலிருந்தும், 'எவ்வளவு நல்ல, எவ்வளவு இனிய, போற்றத்தக்க காரியம்!' என்ற சொற்கள் வரவேண்டும்.

நல்ல கருத்துக்கு அஹிம்சா முறையில் உதவி

சித்தம் பல்வேறு வகையினதாய் இருப்பது. ஒருவனது சித்தம் மோகத்தில், ஆசா பாசங்களில் சிக்கியிருப்பதனல் மிகவும் நல்ல, போற்றத்தக்க காரியம் அவனுக்கு வெறுக்கத் தக்கதாய்த் தோன்றுகிறது. ஆயினும் சாதாரண மனிதன் எவனுக்கும் சத்தியாக்கிரகம் என்ற சொல்லைக் கேட்டதும் குளிர்ச்சியாகவே இருக்கவேண்டும். நான் இப்பொழுதுதான் இயேசுபெருமான் Resist not evil—தீமையை எதிர்க்காதே என்று சொல்லி நிறுத்திவிட்டார், அது சரியே என்றேன்

ஆனால் நான் அதற்கு Resist not evil with evil— தீமையை தீமையைக்கொண்டு எதிர்க்காதே என்றே பொருள் கொண்டேன். காந்தியடிகளும் இவ்வாறுதான் பொருள் கொண்டார். அவர் செய்தது சரியே. ஆனால் இன்று உலகம் உள்ள நிலையில், கருத்துக்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதைப் பார்க்கையில் ஆவேசத்தோடுமட்டுமல்லாமல் ஒரு கருத்து இன்னொரு கருத்தைத் தாக்குவதையும், அதன்பொருட்டு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதையும் கருதுகையில் Resist not evil என்பதோடு வாக்கியத்தை முடிக்கவேண்டுமென்றுதான் தோன்றுகிறது. Non-violent resistance (சாத்துவிக எதிர்ப்பு) என்பதற்குப்பதிலாக நாம் Non-violent assistance in right thinking – சரியான சிந்தனைக்கு அஹிம்சா ரீதியாக உதவவே பார்க்கவேண்டும். நாம் வாழும் நாட்டிலும் அதன் அண்டை அயலிலுள்ள நாடுகளிலும் சரியான முறையில், சிந்தனை நடக்க உதவ வேண்டும். சரியான முறையில் முழுமையாக சிந்தனை நடப்பதற்கு உதவுகையில் நாம் சில சமயங்களில் வெளியே எதிர்க்கவும், ஒத்துழைக்க மறுக்கவும் நேர்ந்தாலும் அவற்றின் தன்மையெல்லாம் non-violent assistance in right thinking — சரியான சிந்தனைக்கு அஹிம்சா முறையில் உதவுவதாகவே இருக்கவேண்டும். நம் சித்தத்தில் உதவும் எண்ணம் இருக்கவும், எதிராளிக்கும் நாம் உதவுவது தெரியவும் வேண்டும்.

நான் இப்போது சொல்லுவது தனிமனிதனைப் பற்றியல்ல, சமூகத்தைப் பற்றியாகும். இவையனைத்திற்கும் இன்றைய விவகாரங்களெல்லாம் பெரும்பாலும் இம்சை கலந்தவையாய் இருக்குமளவுக்கு அவைகளில் கொடுமை காணப்படவில்லை என்பதே பொருளாகும். இன்றைய போர்களில் மிகுதியாக இம்சை நடக்கிறது. ஆனால் பழைய காலத்திய போர்களைப் போன்ற இம்சைப் போர்களென்று இவற்றைச் சொல்லுவதற்கில்லை. இருவர் கையில் வாள்களுடன் வெட்டி மடிய முனைவதில் உள்ள இம்சை குறைவு,

ஆனல் கொடுமை அதிகம். ஆனல் இன்ரே உத்தரவு வந்ததும் தொலேவிலிருந்தே vallistic weapons வீசு கணைகளை ஏவி விடுகிருர்கள். இது முற்றிலும் கணக்குப்படி செய்யப்படுகிறதே தவிர இதைச்செய்வோருக்கு ஆத்திரமோ ஆவேசமோ சிறிதும் வருவதில்லே. ஆவேசம் வந்துவிட்டால் ஒரு திக்கில் ஏவ வேண்டிய கணையை இன்னெரு திசையில் ஏவிவிட்டு விடுவார்கள்; அப்போது காரியமே கெட்டுப்போகும். ஆனல் இப்பொழுதுபோல் அமைதியாய், சிறிதும் பதருமல் தாக்குகையிலோ அழிவு அதிகமாகிறது. ஆன்மீக ரீதியாகக் கருதுகையில் ஆத்திரத்திலும் ஆவேசத்திலும் வாளேந்தி வெட்டி மடிவதிலுள்ள அளவு கொடியதென்று இதைக் கண்டிப்பதற்கில்லே. இவ்வாறு கருதுகையில் இது நன்கு சிந்தித்து செய்யப்படுவதாகையால் இதை எதிர்த்து எடுக்கும் நடவடிக்கையும் நன்கு சிந்தித்தே எடுக்கப்பட வேண்டு மென்பது தெளிவு.

ஆரும் பாக்
(மேற்கு வங்காளம்)
29-4-1963,

5. ஜனநாயகமும் சத்தியாக்கிரகமும்

எதிர்மறை சத்தியாக்கிரகத்திற்கு வரம்பு

இந்த நாட்டில் சத்தியாக்கிரகம் என்று சொன்னதும் பலருக்குப் பயம் உண்டாகிவிடுவது நமக்கு கவலையளிக்கும் விஷயமாயுள்ளது. ஏனெனில் நாம் இந்தப்புதிய மந்திரத்தைக் கற்று, இது உலகைக் கடைத்தேற்றும் என்றும் எண்ணுகிரும். மேலும் மானிடனின் முழு வரலாறு இதுவரையில் பெறப் பட்டுள்ள அனுபவத்தின் வாயிலாக இந்த சமுதாய சத்தியாக் கிரக மந்திரம் கிடைத்திருப்பதாகவும் சொல்லுகிருேம். இப்போது இதனல் அஹிம்சை வலுப்பெறும். ஆனல் இந்தக் காலத்திலோ சத்தியாக்கிரகம் என்று சொல்லக் கேட்டதுமே எல்லோரும் பயந்து நடுங்க ஆரம்பித்துவிடுகிருர்களே.

பலர் ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்திற்கு இட மில்லை என்று வேறு சொல்ல ஆரம்பித்திருக்கிருர்கள். ஆனல் உண்மையில் எந்த ஆட்சியில் எல்லா முடிவுகளும் மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தின்படி செய்யப்படுகின்றனவோ அதில்தான் சத்தியாக்கிரகத்திற்கு இடமிராது. எந்தக் காரி-யத்தையும் எல்லோரும் சேர்ந்து முடிவு செய்து நடத்தும் சமூக ஏற்பாட்டில் தனியே சமூக சத்தியாக்கிரகம் செய்வதற்கு அவசியமிராது. அங்கு மகனை எதிர்த்துத் தாயும், தாயை எதிர்த்து மகனும், இதைப்போல அக்கம் பக்கத்தவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்தும் சத்தியாக்கிரகம் செய்வதா யிருக்கலாம். ஆனல் சமூகம் முழுவதும் சேர்ந்து சத்தியாக் கிரகம் செய்வதற்கு இடமில்லை என்பது புரிகிறது.

இதனலேயே இந்த ஜனநாயகத்தில் ஏதோ கோளாறு இருப்பதாக நான் திரும்பத்திரும்பச் சொல்லுகிறேன். இதனல் தான் இதில் அஹிம்சையை ஓரளவே பயன் படுத்த முடிகிறது. இதனல் நாம் செய்யும் எல்லா முடிவுகளையும் எல்லோரும்

சேர்ந்து, ஏகோபித்துச் செய்வதற்கு நாம் சித்தமாகவேண்டும். ஆனால் இதுபற்றி எனது சகாக்களே என்னிடம் 'ஐயா, இது நடக்கக்கூடியதாயில்லையே. நீர் சொல்லுவதை யார் கேட்கப் போகிருர்கள் ?' என்கிருர்கள். எனவே இந்த விஷயமே சிறிது புதியதுபோல்தான் காண்கிறது. இது குறித்து நாம் அதிகம் யோசித்தாகவேண்டும். ஏகோபித்த அபிப்பிராயத்தின்படி காரியம் நடக்கையிலேயே நாம் நம் வாழ்க்கையையும் அறிவையும் முன்னேற்றத்திற்கு உதவக் கூடியவையாய் ஆக்கிக் கொள்ளவேண்டும். காரியம் கெடாத வகையில் எல்லோருடனும் சேர்ந்து எப்படி வேலை செய்வது என்பதை சமூகம் யோசிக்கவும், கற்றுக் கொள்ளவும் வேண்டும். இதையெல்லாம் செய்துதான் ஆகவேண்டும். இதில் சிரமங்கள் சில நிச்சயமாய் உண்டு. ஆனால் இதைக் கருதி நாம் சிந்திக்காமலே இருந்துவிட்டால் ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்திற்கு இடமே இல்லையென்ற இந்தப் புதிய கருத்து, அஹிம்சைக்கே ஆபத்தாக ஆகிவிடும். இந்த விஷயத்தில் நாம் ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும்.

வைணவாஸ்திரம்

சத்தியாக்கிரகம் என்றதும் பலர் பயப்படுவதற்குள்ள ஒரு காரணம் இதன் எதிர்மறையான விளக்கம் மக்கள் மனதில் பதிந்து விட்டதாகும். இதுவும் அஹிம்சைக்கு ஆபத்துதான். இதுவரையில் மக்கள் மனதில் சத்தியாக்கிரகம் என்ருல் தடை செய்வதற்கு நிர்ப்பந்தப் படுத்துவதற்குள்ள ஒரு வழி, இதை மிகவும் தவருனதென்று சொல்லுவதற்கில்லை என்ற கருத்தே, விளக்கமே பதிந்திருக்கிறது. இதனலேயே சிலருக்கு இது மிகவும் பிடிக்கவும் செய்கிறது. சத்தியாக்கிரகம் என்ற சொல்லைக் கேட்டால் நமக்கு ஒருபுறம் பயமாய் இருந்தால், மறுபுறத்தில் அது நம்மைக் கவரவும் செய்கிறது. பலர் என்னிடம், 'பாபா எவ்வளவு காலத்திற்குத்தான் நிலம் தரும்படி பிச்சை கேட்டுக்கொண்டேயிருக்கப் போகிறீர்கள் ?

அந்த வைணவாஸ்திரத்தை எடுத்து வீசப் போகிறீர்களா, இல்லையா?' என்று அடிக்கடி கேட்கிறார்கள். இவ்வாறு கேட்பதிலிருந்து பிரம்மாஸ்திரம் பாசுபதாஸ்திரம் முதலியவை இம்சை புரியும் ஆயுதங்களாயிருக்க வைணவாஸ்திரம் விஷ்ணுவின் கையிலிலுள்ளதாகயைால் அது அஹிம்சை முறையில் இயங்கக்கூடிய ராமபாணமென்று அவர்கள் எண்ணுவதாய்த் தெரிகிறது. நான் அவர்களுக்கு, 'இப்போது நாம் செய்து வருகிறோமே, நடந்து வருகிறதே இதுவே சத்தியாக்கிரகத்தில் ஒரு வகைதான், வைணவாஸ்திர சோதனை தான் என்று கூறி விளக்க வேண்டி வருகிறது.

நாம் காந்தியடிகளின் காலத்தில் நடத்தப்பட்டதையே தலைசிறந்த சத்தியாக்கிரகமென்று நினைத்து அதையே செய்யப்பார்த்தால் அது தவறாகிவிடும். அவர் இருந்த காலம் வேறு; அப்பொழுதைய நிலையே வேறு. அந்த நிலையில் அவர் எடுத்த நடவடிக்கை எதிர்மறையானதாய் (negative) தான் இருக்க வேண்டியிருந்தது. ஆயினும் அவர் அதை மட்டும் செய்து நிறுத்தாமல் அதோடு எத்தனையோ நிர்மாண வேலைகளையும், ஆக்கப்பணிகளையும் இணைத்து விட்டார். எதிர்மறைச் செயல்களைச் செய்யும் போதே அவற்றோடு ஆக்கப்பணிகளையும் இணைத்துவிட்டார். எதிர்மறைச் செயல்களைச் செய்யும் போதே அவற்றோடு ஆக்கப்பணிகளையும் சேர்த்துச் செய்யாவிட்டால் எதிர்மறைச் செயல்கள் வெற்றி பெறுகையில் அதோடு இன்னும் பல ஆபத்துக்கள் தலையெடுத்துவிடும் என்ற விஷயம் அவருடைய பேரறிவுக்கு எப்படியோ புலனாகிவிட்டது.

ஆக்கமுறையில் சத்தியாக்கிரகம்

ஆயினும் அந்தக்காலம் எல்லோருமே எதிர்ப்புக் காரியங்களை, எதிர்மறைச் செயல்களைப் புரிவதற்கு அனுகூலமாய் இருந்த காலம். இதனால் அந்தக் காலத்தில்

நடந்த சத்தியாக்கிரகமே தலைசிறந்தது என்று நாம் எண்ணி விடக்கூடாது. ஜனநாயக ஆட்சி வந்த பிறகும் சத்தியாக்கிர கத்திற்கு இடமுண்டென்று நினைப்பதானுல் அதன் உருவமே வேறுவகையினதாய், அதன் தன்மையே வேருய் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜன நாயகத்தில் சத்தியாக்கிரகத்திற்கு இடமே இல்லையென்று எண்ணுவது தவறு. இதே போல அந்தக்காலத்தில் நடந்த எதிர்மறை அல்லது எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தை இந்த ஜனநாயக காலத்தில் இன்னும் நன்ருய் நடத்தலாம், நடத்-திஞல் அதற்கு மேலும் சிறந்த பயன் ஏற்படும் என்று எண்ணு வதும் தவருகும். ஜனநாயகத்தில் ஆக்கத்தன்மை பொருந்திய சத்தியாக்கிரகமே பயன்படும். நாம் நடத்திவரும் இயக்கத்தை இவ்வகையிலும் நோக்க வேண்டும். பூதானயக்க வேலையை நாம் நடத்தி வரும் முறையும் ஓர் அஹிம்சை முறையே. ஆனுல் அஹிம்சையை இந்த ஒருவகையில்தான் நடத்தலாம் என்பதும் அல்ல, அதை இன்னும் பல வகைகளில் நடத்தவும் இடமிருக்கிறது. இதைவிட இன்னும் அதிக வலுவான முறைகளும் உள்ளன; நாம் அவைகளைக் கையாளுவதிலும் தவறில்லை. இன்று நிலதானம் கேட்கும், மக்களுக்கு விஷயத்தை விளக்கிக் கூறியும், ஏழைகளிடமிருந்தும் நிலம் கோரிப் பெற்றும் நடத்தி வரும் சத்தியாக்கிரகம் முழுதும் ஒரு பரந்த நிர்மாண சத்தியாக்கிரகமாகும். அனுல் இனிமேல் இதைவிட அதிகப்பயனளிக்கும், ஆற்றல் வாய்ந்த சத்தியாக்கிரக முறையொன்று உண்டா இல்லையா வென்பதை சோதனை செய்து பார்த்து அறியவும், இதில் நம் சக்தி முழுவதையும் செலுத்தி, சிறிது காலத்திலேயே அதன் விளைவு என்னவாகிறது என்பதைப் பார்க்கவும் சந்தர்ப்பம் வரலாம்.

பூரி, 23. 3. 1955.

ஆக்கமுறையில் பல்கிப் பெருகும் சத்தியாக்கிரகத்தைக் கண்டுபிடியுங்கள்

சத்தியாக்கிரகம் என்ற சொல் மிகவும் ஆழ்ந்த பொருள் உள்ளது. பத்து, பன்னிரண்டாண்டுகளாக நான் இதைப் பற்றிச் சிந்தித்து வருகிறேன். எத்தனையோ கருத்துக்கள் தோன்றுகின்றன. சத்தியாக்கிரகத்தைவிடச் சிறந்ததாய், உலகிற்கு விடுதலை வாங்கித் தரக்கூடிய ஆயுதமொன்று இல்லையென்பது, என் நம்பிக்கை. ஆனால் இன்றோ சத்தியாக்கிரகமென்றால் அது பிறரை அச்சுறுத்துவது, பயமுறுத்தி காரியத்தை சாதிக்கும் சாதனம், வழியென்று பலர் எண்ணத் தொடங்கிவிட்டார்கள். இதனால் அது இப்போது ஆக்கப் பணிக்கு உதவும் சக்தியாக இருக்கவில்லை. இது ஒரு முக்கிய மான ஆழ்ந்த விஷயம். நாம் இதை ஆராய்ந்தறிய வேண்டும் என்பது என் விருப்பம். இது மிகவும் ஆழ்ந்த விஷயமாகையால் இதைப்பற்றி சுருக்கமாக, நாலு வார்த்தை களில் சொல்லிவிட முடியாது.

பாபூ, 'சாத்தியாக்கிரக சாஸ்திரத்தை நான் எழுதுவதற் கில்லை. அது போகப்போகத்தான் மெல்ல மெல்ல மலர்ந்து விரியும். அந்த சாஸ்திரத்தை நாம் வளர்க்க வேண்டும்' என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். நாமோ அதை வளர்ப்பதைவிட்டு, காந்தியடிகள் அதை தம் காலத்தில் எப்படிக் கையாண்டாரோ அந்த அளவில்கூட இன்றி மிகவும் மட்டமான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது வருந்தத்தக்க-தாகும்.

காந்தியடிகள் காலத்தில் சுயராஜ்யம் பெறுவதற்காக அவர் எடுத்தது எதிர்மறை நடவடிக்கையாய் இருந்திருக்க இன்றோ நாம் அவ்வாறு எதுவும் செய்யவேண்டியிருக்கவில்லை. இன்று நாம் நம் நாட்டு மக்களின் வாழ்க்கைக்கே புத்துரு அளிக்கவேண்டியிருக்கிறது. பாபூ எப்பொழுதுமே End or mend — திருத்தப்பார் முடியாவிட்டால் ஒழித்துவிடு —

என்ற வகையில் பேசிக்கொண்டிருந்தார். நாமும் அவர் பேசிய முறையிலேயே பேசுவதற்கில்லை. அவர் ஆங்கிலேயரிடம், 'இந்தியாவைவிட்டு வெளியேறு' (Quit India) என்று சொன்னாரென்றால் அது சரியே. ஆனால் நாமும் வியாபாரிகளிடமும், ஜமீன்தார்களிடமும், பெரிய முதலாளிகளிடமும், 'எல்லோரும் வெளியே போங்கள்' என்று சொல்லலாமா? கூடாது. நாம் எல்லோருமே இங்கே இருக்கவேண்டியவர்கள்; எவரும் இங்கிருந்து வெளியேறமாட்டார். இதனால் நாம் எல்லோரும் சேர்ந்து சுமுகமாக வாழ்ந்து வருவதற்கு உதவும் ஒரு வழியை, யுக்தியைக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த நிலையில் நாளுக்குநாள் பல்கிப் பெருகக்கூடிய சத்தியாக்கிரகம் ஒன்றை நாம் கண்டு உபயோகிக்க வேண்டும்.

இவ்வாறு எதுவும் செய்யப்படாமையால், இப்போது நடப்பதைப் பார்த்து பலர், 'ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்திற்கே இடமில்லை' என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். ஜனநாயகத்தில் ராணுவம் இருக்கவேண்டியது தான், ஆனால் சத்தியாக்கிரகம் கூடாது என்பது வேடிக்கை தான். இவ்வாறு நினைப்பது முற்றிலும் தவறு. ஆனால் பெரியவர்கள் பலர் கூட இவ்வாறுதான் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். நிலைமை இவ்வாறு இருப்பதால் நமக்கு மிகவும் பெரிய பொறுப்பு வந்துள்ளது. நாம் சத்தியாக்கிரகத்தையும் அதன் தத்துவத்தையும் விரிவாக்கி வளர்த்தாக வேண்டும்.

காஞ்சீபுரம்
28-5-1956

---

6 சத்தியாக்கிரகம் என்ருல் இனிக்க வேண்டும்

சத்தியாக்கிரகத்திற்கு எதிர்ப்புத்தோன்றுவது ஏன்?

சத்தியாக்கிரகம் என்ற சொல்லைக் கேட்டதும் எல்லோருக்கும் அதில் கவர்ச்சியுண்டாவதற்கு பதில், ஏனே வெறுப்பு தோன்றுகிறது. ஒருவர் உபவாசம் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அது தெரிந்ததும் என்மனத்தில் அவரிடம் அன்பும் அனுதாபமும் உண்டாக வேண்டியிருக்க, எடுத்ததுமே அவர் செய்திருப்பது தவறு என்றே தோன்றக்கூடாது என்ருலும் அப்படித்தான் தோன்றுகிறது. பிறகு விவரம் முழுவதும் தெரியவந்ததும் உபவாசம் செய்தது சரியென்று தோன்ற, ஆனல் முதலில், 'இவர் எதற்கு உபவாசம் இருக்கிருர்? இவர் ஏன் இப்படி செய்கிருர்?' என்ற எண்ணமே என் மனத்தில் எழுகிறது. எனக்கே இவ்வாறு தோன்றினல் சமுதாயத்தின் போக்கிற்கு சிறிதும் தடையேற்படக்கூடாது என்று நினைப்பவர்களுக்கும் இதே வகையில் தோன்ருதா என்பது நினைத்துப் பார்க்கவேண்டிய ஒன்று. ஆட்சியாளர் Law and order (சட்டமும் ஒழுங்குமே) முக்கியமென்று எண்ணுகிருர்கள். அவர்கள் மற்றவற்றைப்பற்றியெல்லாம் யோசிப்பது பிறகுதான். இவை இல்லாவிட்டால் அவர்களால் ஒரு அடிகூட மேலே எடுத்துவைக்கமுடிவதில்லை. எனவே ஆட்சிப்பொறுப்பு ஏற்றுள்ளவர்களின் மனத்தில் ஒருவர் உபவாசம் இருக்கிருர் என்ற செய்தி கேட்டதும் விபரீதமான எண்ணங்கள் எழுந்தால் அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

சிந்தனையைத் தூண்டுவதே சத்தியாக்கிரகத்தின் சரியான காரியம்

நாம் சத்தியாக்கிரகத்திற்கு ஒரு சக்தி இருப்பதாக நம்புகிருேம். அதன் மூலம் எதிராளியின் விரோதத்தின்

பலத்தையே ஒழித்துவிட (disarm) முடிகிறது. சூரியன் உதித்ததும் இருள் மறைந்து போவதைப் போல சத்தியாக் கிரக சக்தி எழுந்ததும் அதுவரையில் சிந்திக்கவே விரும்பாத-வரும், சிந்தித்தாலும் விபரீதமாகச் சிந்தித்தவருமான எதிராளி சிந்திக்கத் தொடங்குகிறார். அவர் மிகவும் தூய முறையிலும் சிந்திக்கிறார். அவரது அறிவின் மீது விழுந்-திருந்த திரை விலகுகிறது; மோகப் போர்வை ஒதுங்கிப் போகிறது. அவர் மனப்போக்கு நமக்கு அனுகூலமாக மாறத் தொடங்குகிறது. இவையெல்லாம் நிகழுமிடத்தில் தான் சத்தியாக்கிரகம் நடப்பதாகக் கொள்ள வேண்டும். இவற்றுள் எதுவும் நிகழாமல் ஏதோவொரு வகை நிர்ப்பந்தம் நடக்குமானால் அந்த அளவுக்கு சத்தியாக்கிரக சக்தி குன்றிப் போகிறது. கிராமதானத்தில் ஒரு சிறிது நிர்ப்பந்தம் புகுந்து விட்டாலும், நான் இப்போது அதை பாதுகாப்பு நடவடிக்கை யென்று அழைக்கிறேனே அவ்வாறு அழைக்க மாட்டேன். ஆனால் சத்தியாக்கிரகப் பிரச்சினை எழுந்தாலும் மக்களை அணுகி கிராமதானக் கருத்தை விளக்க நேரும்போது— அவ்வாறு விளக்குவதும் சத்தியாக்கிரகத்தின் ஒரு அம்சமே யாகையால் — அதில் ஒரு சிறிது நிர்ப்பந்தம் புகுந்து விட்டாலும் எனக்கு அது பொறுக்காது. ஏனெனில் அந்த அளவுக்கு அதன் பலம் குன்றும்.

நான் ஒரு உதாரணம் சொல்லுவதுண்டு. இது ஒரு பெரிய விஷயம். இதுபற்றி பாபுவுக்கும் எனக்கும் எவ்வளவோ முறை விவாதம் நடந்திருக்கிறது. பாபு communal award (சாதிவாரி பிரதிநிதித்துவ தீர்ப்பை) எதிர்த்து உபவாசம் இருந்தபோது டாக்டர் அம்பேத்கருடன் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. உபவாசம் விரைவில் முடிய வேண்டு மென்று எல்லோருமே விரும்பினார்கள். அந்த சமயத்தில் ரவீந்திரநாத்தாகூர் அங்கே வந்து சேர்ந்தார். பாபுவின் உபவாசத்தினால் அவர் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருந்தமை யால் பூனா ஒப்பந்தத்தை அவர் மனப்பூர்வமாய் ஆதரியா-திருந்தும் அப்போது அதற்கு சம்மதம் தெரிவித்ததாக பிறகு

நடந்தவைகளை கவனிக்கும்போது சொல்ல வேண்டி வருகிறது. ஏனெனில் அதனால் வங்காளத்திற்கு தீங்கு இழைக்கப் பட்டதாகக் கூறி அவர் பிறகு வருந்தியிருக்கிறார். நான் அப்போது நடந்தவைகளையெல்லாம் விவரிக்க விரும்ப வில்லை; அதனால் உண்மையில் வங்காளத்திற்குத் தீங்கு நேர்ந்ததா என்று ஆராயவும் போவதில்லை. ஆனால் அந்த உபவாசத்தினால் ரவீந்திரநாதரைப் போன்ற மிகவும் பெரிய மனிதரின் கருத்தும் இயல்பான வழியில் இயங்க முடியாமல் தடுக்கப்பட்டது என்பது தெளிவு. ஆகையால் அந்த சத்தியாக்கிரகத்தில் குறைபாடு இருந்திருப்பது தெரிகிறது. நீங்கள், 'மகாத்மா செய்த சத்தியாக்கிரகத்திலேயே குறை இருந்ததாகச் சொல்லும் இவர் நாம் குற்றங்குறையற்ற சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது ஆச்சரியந்தான். அதாவது குற்றங்கலந்த சத்தியாக் கிரகத்திற்கு காந்தியடிகள் செய்த உபவாசத்தையே உதாரணமாகக் காட்டும் இவர் நாம் செய்யும் எந்த உபவாசத்திலும் குறைகளுக்கு இடம் இருக்கக்கூடாது என்கிறாரே இது வேடிக்கைதான்' என்று சொல்லுவீர்கள்.

காலத்தின் கோரிக்கை

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இரவின் கொடிய இருள் விலகி பொழுதுவிடியத்தொடங்கும்போது, சூரியனும் கொளுத்தாமல் இதமாய்த்தான் இருக்கிறது. காலைச் சூரியனைப்பார்க்கையில் சந்திரனுக்கும் அதற்கும் அதிக வித்தியாசம் தெரிவதில்லை. ஆனால் பகல் பொழுது ஏறயேற சூரியன் வானத்தில் எழுந்துகொண்டே போகையில், அதன் வெப்பம் அதிகமாகி வெயில் தாங்கமுடியாததாகி விடுகிறது.

காந்தியடிகளின் காலத்தில் சத்தியாக்கிரக சூரியன் உதயமாயிற்று. அது அப்போது சிறிதும் கொடுமையற்ற-

தாய்க் காணப்பட்டது. இப்போது அந்தக்காலமில்லை. ஜனநாயக ஆட்சி வந்திருக்கிறது. இதனால் இயல்பாகவே இந்த ஜனநாயக ஆட்சியிலும் சத்தியாக்கிரகத்திற்கு இடம் உண்டா என்ற கேள்வி எழுகிறது. எழும் இந்தக் கேள்வியை நாம் தட்டிக் கழிப்பதற்கில்லை.

எல்லாரிடமும் சென்று கருத்துக்களை விளக்கிச் சொல்லுவதற்கு உங்களுக்கு முழு சுதந்திரம் இருந்துவரும் இந்தக் காலத்தில் சத்தியாக்கிரகம் செய்வதற்கு இடமுண்டா என்பது யோசிக்கவேண்டிய விஷயம். இடமில்லையென்பது சிலர் கருத்து. இன்னும் பலரோ இடமுண்டு, ஆனால் முன்பு போல் அவ்வளவு இல்லையென்கிறார்கள். இவ்வாறு சொல்லுவோர் மிகுதியாக இருக்கிறார்கள். முன்பு என்றால் இவ்வாறு எண்ணியிருக்கமாட்டார்கள். இப்போது நிலைமை மாறி விட்டமையால் அவர்கள் இவ்வாறு எண்ணுகிறார்கள். நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது; ஜனநாயக ஆட்சி வந்திருக்கிறது. கருத்துக்களை எவரும் தாராளமாய் எடுத்துச் சொல்லவும், எங்கும் பரப்பவும் எல்லா வாய்ப்புக்களும் இருக்கின்றன. இந்நிலையில் முன்புபோல எவரேனும் எதிர்மறை சத்தியாக்கிரகம் செய்தால், 'காந்தியடிகள் செய்த சத்தியாக்கிரகத்திலேயே குறைகள் இருந்திருக்கையில் சிறிய மனிதர்களாகிய நாம் செய்வதில் குறையில்லாதிருக்குமா?' என்று கேட்டு தப்பமுடியாது.

நமது காலத்தில் உள்ள ஒரு சத்தியாக்கிரகியும் காந்திக்குக் குறைந்தவரல்ல; அவரைவிடப் பெரியவரே என்று நான் சொல்லவிரும்புகிறேன். அதாவது அவர் தாமே பெரியவராயில்லாவிட்டாலும் காலம் அவரைப் பெரியவராக்கிவிட்டது. சுதந்திரம் வந்துள்ள இந்தக் காலத்தில் போல் ஓட்டுரிமை முதலிய வசதிகளின் பின்புலம் காந்தியடிகளின் காலத்தில் இருந்ததில்லை. இதனால் காந்தியடிகள் தலையாய சத்தியாக்கிரகியாயிருந்தும் அப்போது அதற்கு இருந்த பல்வேறு தடைகள் காரணமாக அவரது

மிகச் சீரிய ஒளியும் மங்கிக் காணப்பட்டது. நீங்கள் சிறியவர்கள்தாம். ஆனால் நீங்கள் பெற்றுள்ள பரம்பரைச் சொத்து மிகவும் பெரியது. இவ்வாறு கருதுகையில் உங்கள் பொறுப்பும் அதிகமாகி விடுகிறது.

ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகமுறை பிறருக்கு உதவுவதாயிருக்க வேண்டும்

சத்தியாக்கிரகத்தை ஆராய்ச்சிக் கண்ணுடன் கருதிச் சிந்திக்கையில் நமக்குள்ள தடைகள், நமது பலவீனம் ஆகியவைகளின் விளைவாக நாம் செய்யும் சத்தியாக்கிரகம் சரியென்று என்னால் சொல்ல முடியவில்லை. நீங்கள் தம்மை பலவீனரென்று உணர்ந்தால் உங்களுக்கு சத்தியாக்கிரகம் செய்யவே தகுதியில்லையென்று ஆகிவிடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அடங்கி, அமைதியாய் இருந்து விடுங்கள். உங்களுக்கு சத்தியாக்கிரகம் செய்ய உரிமை வேண்டுமென்றால் இப்பொழுதைய நிலையில் சத்தியாக்கிரகத்திற்கு வந்துள்ள பொறுப்பை சத்தியாக்கிரகிக்குத்தான் பொறுப்பு உண்டே, ஆனால் சத்தியாக்கிரகத்திற்கும் தன் பெயரைச் சொல்லக் கேட்டதும் எவருக்கும் பயமுண்டாகா திருக்கச் செய்யும் பொறுப்பை-சமாளித்தேயாகவேண்டும்.

நாளை முதல் சத்தியாக்கிரகம் செய்யப் போகிறேன் என்று நான் சொன்னதுமே என்மீது மக்களுக்கு ஆயிரம் மடங்கு அனுதாபம் உண்டாகவும், என்னிடம் அவர்களுக்கு இருந்த விரோதம் குறையவும் வேண்டும். சத்தியாக்கிரகம் என்ற சொல்லை காதால் கேட்பதற்கே இவ்வளவு மகிமை இருக்க வேண்டும். பிறகு சத்தியாக்கிரகம் செய்யும் போதோ மேலும் சிறந்த விளைவுகள் உண்டாகும். சத்தியாக்கிரகம் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் எல்லோருக்கும் மிகவும் நல்ல காரியம் நடப்பதாகப்படவேண்டும். ஒருவர் இன்னொருவரிடம் அன்பு காட்டுகையிலோ அல்லது கருணை யைப் பொழிகையிலோ கருணையும் அன்பும் தயையும் மிகவும்

நல்லது, இவற்றைச் செய்வோர் நல்ல காரியம் செய்கிறார்கள் என்றே சொல்லுகிறோம். செய்தி கேட்டதும் காதில் அமுதம் பொழிந்ததுபோல் இருக்கிறது. அவரது தகுதி முதலியவைகளை நாம் பிறகுதான் கணித்து மதிப்பிடுகிறோம். இதற்கு மாறாக, ஓரிடத்தில் கொலை நடந்தது என்றால் அதை கேட்கவே எவருக்கும் பிடிப்பதில்லை. செய்தி காதில் விழுந்ததும் காதைப் பொத்திக் கொள்ளத் தோன்றுகிறது. அன்பைக் குறிக்கும் செய்தி கேட்டதும் எல்லோரும் ஒரே வகையில் மனம் மகிழ்வதைப் போல சத்தியாக்கிரகம் என்று கேட்டதும் நல்ல காரியமென்பதை எல்லோரும் ஒரே வகையில் ஒத்துக் கொள்ள வேண்டும்; நல்ல காரியம் நடந்திருப்பதாக எல்லோருக்கும் தோன்ற வேண்டும்; உலகம் முழுவதற்குமே அது திருப்தியளிப்பதாய், மகிழ்ச்சியூட்டுவதாய் இருக்க வேண்டும். இந்த சக்தியுள்ள சத்தியாக்கிரகமே சத்தியாக் கிரகம் எனப்படும். அதற்குத்தான் ஜனநாயகத்தில் இட முண்டு. பழைய காலத்தில் நடந்த சத்தியாக்கிரகத்திற்கு ஜனநாயகத்தில் சிறிதும் இடமில்லை.

காலடி (கேரளம்)
12–5–57.

———o———

7. அதிக சிந்தனை தேவை

நாம் ஒரு கருத்துடன், அதன் தன்மையைக் கூட்டவோ குறைக்கவோ கருதி அடை மொழியொன்றைச் சேர்த்துச் சொல்லுகையில் அந்தக்கருத்தின் தன்மையே மாறிவிடுகிறது. இந்த சத்தியாக்கிரக தத்துவத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். இதை சிலர் காந்தி தத்துவமென்று அழைக்கிருர்கள். காந்தியடிகள் ஒரு மனிதராயிருக்க தத்துவமோ விரிந்து பரந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மனிதர் எவ்வளவு பெரியவராய் ஆக முயன்ருலும் அவரால் தத்துவத்தின் அளவுக்கு உயரமுடியாது. இதனுல் நாம் ஒரு கருத்தை அல்லது தத்துவத்தை காந்தி தத்துவமென்று சொன்னவுடனே அது குறுகி விரும்பத்தகாததாக ஆகிவிடுகிறது. இதனுல் இவ்வாறு செய்வதை விட அதை அடைமொழி எதுவுமின்றி தன் தூய பரிசுத்தமான, மாசு மறுவற்ற உருவிலேயே இருக்கவிட்டு அதைப்பற்றிக் கலந்து பேசுவது நல்லது.

'சத்தியாக்கிரகம்' என்ற சொல் ஏற்கெனவே வழங்கி வருகையில் நான் 'சத்தியக்கிராகி' (உண்மையை ஏற்பவன்) என்ற புதிய சொல்லை உருவாக்கியிருக்கிறேன். பலர் தமக்கு சத்தியத்தின் பட்டயமே கிடைத்து விட்டதாக, அதன் முழு உரிமையும் தமக்கு வந்துவிட்டதாக எண்ணுகிருர்கள். இப்போது அதில் பிடிவாதமாய், உறுதியோடிருப்பதையே நாம் செய்யவேண்டும். சத்தியம் ஏற்கப்பட்டாயிற்று. அது நம்மிடம் இருந்து வருகிறது. ஆனுல் சத்தியமென்பது எங்கும் பரந்திருக்கும் பொருள். அதை ஓரிடத்தில் வைத்துப் பூட்டி வைக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்வோமாக. அது காணப்படுமிடமெல்லாம் சென்று அதை ஏற்றுக் கொள்வதிலேயே சத்தியக் கிராகி கருத்தாய் இருக்க வேண்டும். அவன் சததியத்தை மட்டுமே நாடவேண்டும். அது எவ்வுருவில் காணப்பட்டாலும் ஏற்க மறுக்கக்கூடாது.

நான் சத்தியாக்கிரகத்தின் முனையை மழுக்கி விடவில்லை

தற்பயிற்சி — உரை நிகழ்த்துதல் என்பதற்கு வழி வழியாய் வந்துள்ள முறையில் கல்வி பயின்று கொண்டே, கல்வியைப் பரப்புதல் என்று அர்த்தமில்லை. நான் சொல்லுவது இதற்கு நேர்மாருகும். கருத்துக்களைக் கடைந்தெடுக்க வேண்டும். நாம் மிகவும் பெரிய இயக்கம் நடத்தவிருப்பதால் அதில் ஒன்றையடுத்து ஒன்ருகக் கருத்துக்கள் இடையருது பீறிட்டுப் பெருகிக்கொண்டே யிருக்கின்றன. அவை குறித்து நாம் கலந்து பேசவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

சத்தியாக்கிரகத்தின் செயல் முறை எவ்வாறு இருக்க வேண்டும்

சிலர் அடக்கம், மேலும் அடக்கம், மேலும் அதிக அடக்கமென்ற செயல் முறையைக் குறிப்பிட்டு பாபா சத்தியாக்கிரக தத்துவத்தையே காற்று வாக்கில் விட்டு விட்டார் என்று சொல்லுகிருர்கள். ஆனல் ஜனநாயகத்தில் கருத்துப் பிரசாரத்திற்கு முழுச் சுதந்திரம், முழு உரிமை இருக்கையில் இந்தச் சுதந்திரம் உள்ள நாடுகளில் முதலாவதாக இங்கிலாந்தும், அதற்கு அடுத்தபடியில் இந்தியாவும் இருந்துவருவதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கருத்துப்பிரசாரத்திற்கு இவ்வளவு சுதந்திரம் அளிக்கப் பட்டிருக்கும் சூழ்நிலையில் நாம் சத்தியாக்கிரகச் செயல் முறை பற்றிக் கட்டாயம் சித்திக்கவும் அதை அலசி ஆராய்ந்து பார்க்கவும் வேண்டும்.

இரண்டாவது அணுசக்தி வந்துள்ள இந்த விஞ்ஞான காலத்தில் ஆயுதங்களின் உருவம் மாறிக் கொண்டே போவதைப்போல சத்தியாக்கிரகத்தின் உருவமும் மாறுமா

மாருதா ? காந்தியடிகள் மிகுந்த கருணையுள்ளம் படைத்தவர். நிலைமைக்கொத்து வளைந்து நெளிந்து கொடுக்கும் தன்மை அவருடையது. எனவே உலக அரங்கில் நாம் செய்யக் கூடியதென்னவென்றும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

இந்த விஷயத்தில் முடிவு கூறும் அதிகாரம் என் கையிலிருப்பதாக என் கைக்கு வந்து விட்டதாக நான் சொல்ல விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவது, இது குறித்து நடுவு நிலைமையிலிருந்து கொண்டு சிந்திக்க வேண்டு மென்பதுதான். சத்தியாக்கிரகத் தத்துவத்தையே விநோபா களைந்தெறிந்து விட்டாரென்று எவரும் எண்ணிக் கொள்ள வேண்டாம். என் நோக்கம் சத்தியாக்கிரகத் தத்துவம் நன்கு ஆராயப்பட வேண்டு மென்பதுதான். அதன் சக்தி சிறிதும் குன்றுதிருக்க வேண்டி, அதை நன்கு பரிசீலித்து ஆராய வேண்டுமென்பதே என் எண்ணம்.

படையெடுப்பவனை எப்படி சமாளிப்பது?

அத்யயனம் அல்லது புத்தகங்களை ஓதுவதுபற்றிச் சொல்லும்போது சார்பற்ற, சுதந்திர சிந்தனை நடக்கவேண்டு மென்பது என்விருப்பம். அதற்குச் சத்தியாக்கிரகச் செயல் முறையை உதாரணமாகச் சொன்னேன். இவ்விஷயத்தில் சரியான தன்மை நம் கருத்தில் இருக்கவேண்டும். உலக அரங்கில் சண்டை மூளும்போது, குழப்பம் தோன்றும்போது நாம் செய்யவேண்டியது என்ன என்று தெரிந்துகொள்ள காந்தியடிகளின் வாழ்க்கையில் தேடினுல் நமக்கு விளக்கம் எதுவும் கிட்டாது. அதை நீங்களேதான் யோசித்துக் காண வேண்டும். அதற்கு மேலெழுந்தவாரியாகச் சிந்தித்தால் போதாது. புதுமுறையில் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியிருக்கும். நான் அதனுள்ளே புகுந்து என்ன செய்யவேண்டுமென்று பார்க்கப்போவதில்லை. அது பலர் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஒருவன் படையெடுத்துவந்தால் நான்

அவனிடம், 'நீ அன்புடன் வா; நாம் இருவரும் கலந்து பேசுவோம். எனது குழந்தைகளும் சகோதரிகளும் கூட உன்னைக் கண்டு அஞ்சாமல் உன்னோடு பேச வருவார்கள். நாங்கள் உன்னை அன்புடன் வரவேற்போம். ஆனால் நீ எங்களை விரும்பத்தகாத தவறான காரியங்கள் செய்யச் சொன்னால் எங்கள் உயிரே போனாலும் அதைச் செய்ய மாட்டோம்' என்று தெளிவாகச் சொல்லிவிடுவோம் என்பேன்.

ஆக்க சத்தியாக்கிரகம்

இதுவும் ஒரு முறையே. இது எதிர்மறையான (negative) சத்தியாக்கிரகமல்ல, ஆக்க முறையில் அமைந்த (positive) சத்தியாக்கிரகமாகும். தீய காரியங்களில் கலந்து கொள்ள மறுப்பதை (Resistence) - எதிர்ப்பு எனல் தவறு; அது assistance (முழுதும் உதவுவது) எதிராளிக்கு சிந்திக்க முழுதும் உதவுவதேயாகும். ஆயினும் அவன், 'பெட்ரோல் எண்ணெய் கொணர்ந்து எதிரேயுள்ள வீட்டில் ஊற்றி, தீ வை'யென்றால் நான், 'முடியாது' என்று சொல்லிவிடுவேன். 'அதனால் உனக்கும் எனக்கும், அந்த வீட்டாருக்கும் நஷ்டமே தவிர, சிறிதும் லாபமில்லை. ஆகையால் நீ அதைப்பற்றி நினைக்கவே கூடாது' என்று எடுத்துச் சொல்லுவேன். இவ்வாறு சொல்லுவது எதிர்ப்பு அல்லது மறுப்பு ஆகாது. எதிர்ப்புச் செய்வதற்குரிய காரியமே அல்ல இது. எனக்கோ Resist not evil தீமையை எதிர்க்காதே என்ற இயேசு பெருமானின் வாக்கே நினைவுக்கு வருகிறது. சிலர் இந்த வாக்கியத்திற்கு Resist not evil with evil அதாவது தீமையை இன்னொரு தீமை கொண்டு எதிர்க்காதேயென்று விளக்கமளித்திருக்கிறார்கள். ஆனால் எனக்கோ அதில் எதையும் கூட்டவோ அதிலிருந்து எதையும் எடுக்கவோ செய்யாமல் அப்படியே வைத்துக் கொள்வதுதான் பிடிக்கிறது. ஏனெனில் நாம் தீமையை எதிர்க்கப் புகுந்ததும் அது நம்மிடத்திலும் வந்து ஒட்டிக் கொள்ளுகிறது-நம் உள்ளேயும் புகுந்து கொள்ளுகிறது.

எனவே நான் மேலே கூறியுள்ள உதாரணம் எதிர்ப்பைக் குறிப்பதே அல்ல. ஆனால் மக்களுக்கு அதை எதிர்ப்பென்று அழைக்க வேண்டுமென்று தோன்றினால் அவ்வாறே அழைத்துக் கொள்ளட்டும். ஆனால் இதிலுள்ள பிரச்சினை சொல்லைப் பற்றியதல்ல, மனப்போக்கைப் பற்றியது. நாம் உலகிற்கு நன்மையைக் கோருகிறோம், எல்லோரும் நன்றா யிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். எதிராளியின் நன்மையில் நாட்டங்கொண்டு காரியம் செய்ய முற்படுகையில் நாம் உள்ளத்தில் புகுந்தேயாக வேண்டும். அப்போது இது நிர்மாண சத்தியாக்கிரக இனத்தில் சேர்ந்ததாகி விடுகிறது. இதை ஓர் உதாரணத்திற்காகவே சொன்னேன்.

கோபுரி, வர்தா,
8-5-65.

8 சத்தியாக்கிரகத்தின் தூய்மை

சர்வோதய தத்துவத்தில் சத்தியாக்கிரகத்தின் தன்மையை நாம் கண்டுகொண்டதிலிருந்து அதில் இருந்த தையல்களெல்லாம், மூட்டுக்களெல்லாம் விலகி, அதன் பாவும் ஊடையும் ஒன்ருகி ஒரே ஓட்டமான உடைபோல் ஆகி விட்டது. சத்தியாக்கிரகத்தில் ஞானியும் வீரனும் ஒன்ருகி விடுகிருர்கள் — இருவரும் கலந்து போகிருர்கள். இருவரையும் சேர்த்து இணைக்க, தைக்கப்படுவதில்லை. சத்தியாக்கிரகத்திலுள்ள சிறப்பு இதுவே. இது நம் நாட்டின் தனி அம்சமாகும். நீண்ட கால அனுபவத்தின் விளைவால், காந்தியடிகளின் முயற்சிகளினுல் இதன் ஒரு பகுதியைக் கண்டோம். இந்த சக்தியை நாம் மேலும் வளர்க்கவேண்டும்.

கடைத்தேற்றும் சக்தி

இந்தக்காலத்தில் இந்தியாவின் நிலைமை மிகவும் விசித்திரமாய் இருக்கிறது. எல்லோரும் அவரவருக்குத் தோன்றிய விதத்தில் சிந்தித்துக்கொண்டு போகிருர்கள். ஆழ்ந்த சிந்தனையே நடக்கக் காணேம். நடத்தையிலும் அடக்கமில்லை. பழைய, விழுமிய உறுதிப்பாடுகள் எல்லாம் தளர்ந்துவிட்டன. பழைய பற்றுக்கள் நிலைக்க மறுக்கின்றன; புதிய பற்றுக்கோடுகளையும் காணேம். இதன் விளைவாக எப்போது எங்கே என்ன உற்பாதம் நேருமோ என்று சொல்ல முடியாதிருக்கிறது. இந்த ஆபத்தான நிலையிலிருந்து நம்மைக் காக்கக்கூடிய சக்தி சத்தியாக்கிரகம் ஒன்ருய்த்தான் இருக்கமுடியும்.

சத்தியாக்கிரகம் என்பதன் உண்மைப் பொருள்

இன்று எல்லோரும் சத்தியாக்கிரகம் என்பதற்கு முற்றிலும் தவருன பொருளே கொண்டு வருகிருர்கள்; அது

பிறரை அச்சுறுத்துவதற்கு உதவும் ஒரு சாதனமாய் ஆகி விட்டது. ஓரிடத்தில் சத்தியாக்கிரகம் நடப்பதாகக் கேள்விப் பட்டதும் எல்லோருக்கும் அதனால் நன்மை விளையும் என்று தோன்றவேண்டியதுபோய், அதனால் என்னவாகுமோ என்ற பயமே உண்டாகிறது. சத்தியாக்கிரகமென்றால் கட்டாயப் படுத்தும் நடவடிக்கையென்றே கொள்ளப்படுகிறது. உண்மையில் பலவகையான நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி அவதிப்படும் சமுதாயத்தை அவற்றிலிருந்து விடுவிக்கவே சத்தியாக்கிரகம் வந்திருக்கிறது. மனிதன் உள்ளத்தில் பல வகையான நிர்ப்பந்தங்கள் இருந்துவருவதால் அவனால் சுதந்திரமாய் சிந்திக்கவே முடியவில்லை. பல்வேறு நிலைமைகள் காரணமாக அறிவை வந்து அமுக்கும் பளுக்களை அகற்று-வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையே சத்தியாக்கிரகம் என்பது. ஏற்கனவே 50 நிர்ப்பந்தங்கள் உள்ள இடத்தில் இன்னும் ஒரு நிர்ப்பந்தத்தைச் சேர்த்து 51-ஆக ஆக்கினால் அது சத்தியாக்கிரகம் ஆகாது. அறிவை, புத்தியை விடு-விக்கவே, அதன் மீதுள்ள பளுக்களை அகற்றவே சத்தியாக் கிரகம் முயலுகிறது. அதற்குள்ள பல உபாயங்களில் ஒன்று இடையறாது உதவி வருவதும், இன்னொன்று தன்னை ஓயாது தூயதாக்கிக் கொள்வதுமாகும். இத்தகைய சத்தியாக்கிரகம் தோன்றும் இடத்தில் எல்லோருக்கும் நிம்மதியுண்டாகும்; அவர்களின் உள்ளங்களை மூடிக்கொண்டிருக்கும் திரைகள் விலகும். அறிவை மறைக்கும் மூடியை அகற்றுவதற்காகத் தான் சத்தியாகக்கிரகம் பயன்படுத்தப்படுகிறது. கருத்தை, தத்துவத்தை விளக்கிக் கூறுதல், அதற்குத் தேவையான பணிகள் புரிதல், நட்புறவைத் தோற்றுவித்தல், எதிராளியின் உள்ளத்தில் சிறிதும் பயம் தோன்றாது பார்த்துக்கொள்ளுதல் ஆகிய இவை சேர்ந்து அமைவதே சத்தியாக்கிரகம்.

சத்தியாக்கிரக சுத்திக்கு உதவுபவை

1) **தர்ம தத்துவம் எல்லோருக்கும் பொருந்தும்,** பாபா நிலம் கோரிப் பெறத்தொடங்கிய போது முதலில்

சில விசித்திரமான அனுபவங்கள் ஏற்பட்டன. ஒரு புறம் பலரும் தாராளமாய் நிலம் தரத்தொடங்கியிருக்க, மறுபுறத்தில் சிலர் இதைக்கண்டு அஞ்சவும் ஆரம்பித்தார்கள். சில விடங்களில் பாபா தம் கிராமத்திற்கு வரப்போகிறார் என்று தெரிந்ததும் அங்கிருந்தவர்கள் தம் கிராமத்தை விட்டு வெளியேறி தலைமறைவாய் இருக்க ஆரம்பித்தார்கள்; தமது நிலவுடமை பறிபோய்விடுமோவென்று அவர்களுக்கு பயமாகி விட்டது; திருடர்களையும் கம்யூனிஸ்டுகளையும் கண்டு பயப்படுவதைப் போலவே பாபாவிடம் பயந்தார்கள். நான், ‘அண்ணன் தம்பிமார்களே, நீங்கள் பாபாவுக்கு பயந்து எங்கே போகப் போகிறீர்கள்?’ என்று கேட்டேன்.

இவர்களுக்கு ஏன் என்னிடம் பயமென்று யோசிக்கலானேன். இவர்களிடம் நிலமிருக்கிறது; சொத்து இருக்கிறது. எனவே அதனிடம் பற்றிருக்கிறது என்பது சரி. குற்றமுள்ள நெஞ்சு என்று இதற்கு காரணம் சொன்னாலும் அந்தக் குற்றத்தில் பாபாவுக்கும் சிறிது பங்கு இருக்க வேண்டுமே. நான் எல்லோரையும் அணுகி நிலமில்லாமையால் துன்புற்றுத் தவிக்கும் ஏழைகளுக்காக நிலம் தாருங்களென்று கேட்கிறேன். நான் இவ்வாறு கேட்பது நிலம் வைத்திருக்கும் சமுதாயத்தின் ஒரு பகுதிக்கே பொருந்தும். ஆனால் தர்மமென்றால் அது சமுதாயம் முழுவதற்கும் பொருந்துவதாய் இருக்கவேண்டும். உண்மை பேசுதல் என்ற தர்மம் எல்லோருக்கும் உள்ளதே தவிர, சமுதாயத்தில் ஒரு சிலருக்கு மட்டுமே உள்ளதல்ல. அன்பு காட்டுவதும் கருணை புரிவதும் ஒரு சிலருக்கே ஏற்பட்ட தர்மமாய், கடமையாய் இருப்பதற்கில்லை. எல்லோருமே அன்பு காட்டுவதும் கருணை புரிவவுமே வேண்டும். ஆகையால் நான் நிலமில்லாதவர்களுக்காகவென்று நிலம் கோருவது தர்ம தத்துவமாகாது. இதில் கருணையிருப்பதென்னவோ உண்மை; காரல்மார்க்ஸும் கருணையினால்தான் பொதுவுடமை முறையை வகுத்தார். அவர் வேறு எந்த வழியிலும் காரியமாகாவிட்டால் கத்திக் கொண்டு தனவந்தர்களின் தலையைச்சீவி, ஏழைகளைச் கை தூக்கி விடலாமென்று

சொன்னதற்குக் காரணம் அவர் உள்ளத்திலிருந்த கருணையே. ஆனால் அதில் முழுமையான தத்துவம் இல்லாமையால் அதை தர்மமென்று கொள்ள முடியவில்லை. ஆகையால் எல்லோருக்குமே பொருந்தக் கூடிய தத்துவத்தைத்தான் நாம் மக்களின் முன்னே இடவேண்டும்.

2) எல்லோருமே ஏதோ கொடுக்கலாம்: நான் பிறகு, கொடுப்பதற்கு எதுவுமே வைத்திராதவர்களும் இருப்பார்களாவென்று யோசித்துப் பார்த்தபோது இருக்க மாட்டார்களென்று தெரிய வந்தது. கடவுள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதோவொன்றைச் கொடுத்தேயிருக்கிறார். அந்தக் கருணைக்கடல் இந்த விஷயத்தில் எவரையும் வஞ்சிக்கவில்லை. ஒருவரிடம் உழைப்புச் சக்தி இருந்தால் வேறு ஒருவரிடம் அறிவும், இன்னொருவரிடம் பணமும், இன்னொருவரிடம் நிலமும் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் இருக்க வேண்டும், எல்லோரும் ஒருவரைப்போல் இருக்கக் கூடாது என்ற கருத்திலேயே பகவான் இவ்வாறு செய்திருக்கிறார். அவர் எல்லோருக்கும் ஒன்றையே அளித்திருந்தால் எங்கு திரும்பினாலும் எல்லோரும் ஓரே அச்சில் வார்த்தெடுத்தது போல் இருப்பார்கள். அதனால் காரியம் கெட்டுப்போகும். 'ஸ' என்ற ஒரே சுரத்தைக் கொண்டு இசை அமையாது. இசைக்கு 'ஸரிகம' முதலிய பல்வேறு சுரங்கள் தேவைப்படுகின்றன. அதோடு இந்த சுரங்களிடையே பொருத்தமும் இருக்க வேண்டியுள்ளது. கடவுள் ஒரு மனிதனுடைய கையை உறுதியுள்ளதாய் அமைந்திருந்தால் இன்னொருவனுக்கு கூரிய அறிவு அளித்திருக்கிறார். ஆகையால் எல்லோருமே தன்னிடமுள்ளதை, பகவான் தனக்கு அளித்திருப்பதை சமுதாயத்திற்கு அர்ப்பணிக்க விட வேண்டும்.

கிராமத்திலுள்ள எல்லாம் கிராமக் குடும்பத்திற்கு

ஒரு கிராமத்திலுள்ள நிலம் முழுவதும் தானமளிக்கப் பட்டாலும் அதை முழுமையான கிராமதானமென்று சொல்ல

முடியாது. நிலமுள்ளவர்கள் தம் எல்லா நிலத்தையும், உழைப்பாளிகள் தம் உழைப்பு முழுவதையும், அறிவாளிகள் தமது அறிவு முழுமையையும் மற்றவர்கள் தம் ஆற்றலையும் கிராமத்திற்கு அளித்து விடும்போதுதான் கிராமதானம் முழுமை பெற்றதாகும். இப்போது நிலமுள்ளவன் தன் நிலத்தின் வருவாயை தன் குடும்பத்திறகு அளிக்கிறன்; உடலால் உழைக்கும் தொழிலாளியும் தான் பெறும் ஊதியத்தை தன்குடும்பத்தில் செலவிடுகிறன். கிராமதானத்திலோ கிராமத்திலுள்ள எல்லா நிலமும், அனைவரது உழைப்பும், செல்வமும், அறிவும்-எல்லாமே கிரா மக்கள் அனைவருக்குமாக, கிராமமென்ற பெருங்குடும்பத்திற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படும் போதுதான் முழு கிராமதானம் நடந்தேறியதாகும். ஆகையால் பாபாவைக்கண்டு அஞ்சக் காரணமே இல்லை. பயந்தால் எல்லோருமே பாபாவிடம் பயப்படவேண்டும்; இல்லையேல் எவருமே பயப்படத் தேவையில்லை. இந்தக் கருத்து உதித்தபோது பாபாவின் சத்தியாக்கிரகம் தூய்மை பெற்றுவிட்டது.

மைசூர்
26-9-56

உண்மையில் உறுதியாய் இருப்பவருக்கு சிரமமே தோன்ருது

சத்தியாக்கிரகத்தின் பொருளை நாம் பெரும்பாலும் சரிவரப் புரிந்துகொள்வதில்லை. உண்மையின்பால் உறுதியாய் இருப்பதுதான் சத்தியாக்கிரகம். தம் வாழ்வு முழுவதிலும் சத்தியத்தில் உறுதியோடு, அதிலேயே பிடிவாதமாய் இருப்பதும், எவ்வளவு இன்னல்கள் நேர்ந்தாலும் நாம் உண்மையென்று கருதுவதினின்றும் சிறிதும் வழுவாது நடந்து வருதலுமே சத்தியாக்கிரகம் என்பது. இதற்காக நாம் ஏதோ கஷ்டங்களுக்கு உள்ளாவதாகவே நமக்குத் தோன்றக் கூடாது. உண்மையைக் கடைப்பிடிப்பவனுக்கு அம் முயற்சியில் இன்பமே தோன்ற வேண்டும்; இன்பத்தைத்

Gandhian Study Circle,
Govt. Arts College,
DHARMAPURI.

தவிர அவனுக்கு வேறு எதுவும் இராது. இடையில் நேரும் துன்பங்கள் துன்பமாகவே தோன்ரு. புண்ணியத்தலே யாத்திரை செல்லுகையில் பலவிடங்களில் மலேகளில் ஏற நேரும்போது கால் நோகிறது; இறங்க சுலபமாய் இருக்கிறது. ஆனால் யாத்திரிகன் அந்த ஏற்ற இறக்கங்களேப் பொருட் படுத்துவதே இல்லே. அவன் கருத்து முழுவதும்தான் போய்ச் சேரவேண்டிய கோயிலிலேயே இருக்கிறது; நான் காசிக்குப் போகப் போகிறேன், இடையில் எத்தனே கஷ்டங்கள் நேர்ந்தாலும் பாதகமில்லே என்றே அவன் சொல்லுகிருன். அதே போல வாழ்க்கையில் உண்மையிடம் உறுதியாய் இருக்க விரும்புவோனுக்கு இடையில்வரும் கஷ்டங்கள் கஷ்டங்களாகவே தோன்றுவதில்லே.

பள்ளிகளிலும் சத்தியாக்கிரக போதனே அவசியம்

சுருங்கச் சொன்னுல் எத்தனே கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும் மக்களுக்கு உண்மையிடம் உறுதியாய் இருக்கும் சக்தி இருக்க வேண்டும். இந்த ஒரு சக்தியினுல்தான் உலகம் இம்சையினின்று தப்ப இயலும். சமுதாயத்தில் எழும் பிரச்சினேகளேத் தீர்க்க இந்த சக்தி உதவும். மாணவர்களிடையிலும் சத்தியாக்கிரக மனப்பாங்கு உருவாக வேண்டும். பிள்ளேப் பிராயத்தில் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஒரு சுலோகம் எனக்கு எப்பொழுதும் நினேவுக்கு வந்துகொண்டே இருக்கிறது. அதில் பிரகலாதனுக்கு எவ்வளவு இன்னல்கள் இழைக்கப்பட்டபோதும் அவன் 'நாராயண,' 'நாராயண' என்று சொல்லுவதைமட்டும் நிறுத்தவில்லே என்று சொல்லி இருக்கிறது. இதே வகையில் சமுதாயத்திலும், பள்ளியிலும் நடக்கும் போதனேயிலும் சத்தியாக்கிரகம் முக்கிய இடம் பெற வேண்டும்.

கட்டுப்பாடும் கருத்துச் சுதந்திரமும்

நானும் ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியமென்றுதான் கருதுகிறேன். ஆனுல் அது நம் செயல்களில் இடம்பெற

வேண்டும். கருத்திலோ முழு சுதந்திரம் இருக்க வேண்டும். சம்ஸ்கிருத மொழியில் காணப்படுமளவுக்கு சுதந்திரச் செல்வம் வேறு எந்த மொழியிலும் இல்லை. சம்ஸ்கிருதத்தில் ஆறு ஆஸ்திக தத்துவ சாஸ்திரங்கள் இருந்தால் ஆறு நாஸ்திக தத்துவ சாஸ்திரங்களும் உள்ளன. ஆபினும் இவற்றுள் எதையும் தர்மத்திற்குப்புறம்பானது என்று சொல்லும் எண்ணமே இல்லை. கபில மகா முனிவர் ஒரு நாத்திகர். ஆயினும் அவரிடம் நடத்தைச் சிறப்பு இருந்ததனால் அவர் இந்துவாகவே கருதப்பட்டார். ஒருவன் நன்னடத்தையின் விதிகளுக்கு அடங்கி நடந்து தனக்கு கடவுளிடம் நம்பிக்கை இல்லையென்று சொல்லிக் கொண்டிருந்தால் அவ்வாறு சொல்லவும் அவனுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. பதஞ்சலி கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருந்தாரென்றால் அவருக்கு அதற்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இந்து சமயத்தில் பலவிதமான கொள்கைகள் நிலவின. அவை ஒன்றோடொன்று முரண்பட்டதும் உண்டு; தத்துவ ஆராய்ச்சியும் நடந்துவந்தது. அதேபோல இப்பொழுதும் கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும்.

அனுஷ்டானம் அல்லது நடைமுறை என்பது வேறு. நாம் நடைமுறைக்கென சில நியமங்கள் அமைத்துக்கொண்டு அவற்றின்படி நடக்கவேண்டும். அவ்வாறு நடந்தாலும் அவரவர் மனம்போல் சிந்திப்பதில் தவறென்ன? நாம் எவரிடமும், 'எனது நம்பிக்கையை நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொல்லுவதுதான் கூடாது. ஆகையால் ஒரே வீட்டில் பல சமயங்களை பின் பற்றுவோர் இருந்தாலும் அதையும் ஏற்க நாம் நம் மனத்தை சித்தமாக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய முடிந்தால்தான் சத்தியாக்கிரக் கருத்து வளம் பெறும். எனக்கு உண்மையிடம் உறுதியிருந்தால் அதை பிறரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் நினைப்பதற்கில்லை. இன்னொருவரும் தாம் உண்மையென்று நம்புவதை என்மீது திணிப்பதற்கு நான் உடன்பட மாட்டேன். நாம் ஒருவர் மற்றவருக்கு தம் கருத்தை எடுத்துச்

சொல்லி அவரை நம் வழிக்குத் திருப்ப முயற்சி செய்யலாம். நமக்கு அவர் கருத்துப் பிடித்தால் அதை ஏற்றுக்கொள்வோம்; இல்லையேல் நம் கருத்திலேயே உறுதியாய் இருப்போம். இத்தகைய கருத்துச் சுதந்திரம் எல்லோருக்குமே இருத்தல் வேண்டும்.

வைக்கம்,
(கோட்டயம், கேரளம்)
4-4-1957

9. சத்தியாக்கிரகத்தின் உட்பொருள்

காந்தியடிகளின் தனிச்சிறப்பு

காந்தியடிகளின் காலத்திய சத்தியாக்கிரகத்தை பாபா வெகுவாக விரித்துப் பெருக்கியிருப்பதாக பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். காந்தியடிகளின் சத்தியாக்கிரகக் கருத்து எதிர்மறை (Negative) தன்மையதாய் இருந்திருக்க, பாபா அதற்கு ஆக்க (Positive) உரு அளித்திருப்பதாகவும் பலர் நினைக்கிறார்கள். ஆனால் பாபாவுக்கு அத்தகைய எண்ணம் எதுவுமே இல்லை; பாபா அவ்வாறு உரிமை எதுவும் கொண்டாடவில்லை. காந்தியடிகளின் கருத்தை, கற்பனையை எதிர்மறையானதென்றும் நான் சொல்லமாட்டேன். அவரது கற்பனை அவ்வாறு இருந்திருந்தால் அவர் அதோடு நிர்மாண வேலைகளை, பல்வேறு மக்கள் பணிகளைச் சேர்ந்திருக்க மாட்டார். அப்போது சத்தியாக்கிரகி என்று குறிப்பிட்டு நாட்டின்முன் என்னை நிறுத்துவதிலும் அர்த்தம் இருந்திராது. மக்களுக்கு என்னையே தெரியாது. என் மூலமாக குறிப்பிடத் தக்க அரசியல் வேலை எதுவும் நடந்திருக்கவில்லை. ஆயினும் அவர் என்னிடம் வேறு என்ன குணங்கள் இருப்பதாக நினைத்தாரோ, நினைக்க வில்லையோ தெரியாது. 'இவன் நிர்மாணமுறையில் இயங்குவது; ஆக்க வேலைகளிலேயே இவன் அறிவு செல்லுகிறது. அழிப்பு வேலை (Distructive) இவனுக்குப் பிடிக்காது' என்பதைக் கண்டுகொண்டார். இதிலிருந்து எந்த சத்தியாக்கிரகியும் நிர்மாண வேலைகள் செய்வது அவசியம் என்று அவர் கருதியது நன்கு தெரிகிறது. நிர்மாண வேலைகள் முழுவதையும் செய்து விடுகையில் வேறு சத்தியாக்கிரகம் என்று எதையும் செய்ய வேண்டியிருப்பதில்லை என்று கூட அவர் சொல்லி வந்தார்; இவ்வாறு அவர் நம்பினார். நமக்கும் அதே நம்பிக்கை இருந்தாலும் இல்லா விட்டாலும் அவர் நிர்மாண வேலைகளுக்கு அளித்து வந்துள்ள

முக்கியத்துவத்திலிருந்து அவர் சத்தியாக்கிரகத்தை எதிர் மறையானது என்று எண்ணவில்லை என்பது தெளிவு.

இது பற்றி பாபூவுடன் நான் பலமுறை பேசியிருக்கிறேன். அவர் காலத்தில் நடந்த சத்தியாக்கிரகங்கள் வேறு தன்மை-யவையாய் இருந்ததாக எனக்குத் தெரிய வந்ததும் அதை அவரிடம் தெரிவித்திருக்கிறேன். எனக்கு அவரிடம் கேட்டு விளக்கம் பெற வேண்டுமென்று தோன்றிய போது நான் அவரை அணுகி பணிவுடன் என் ஐயங்களைத் தெரிவித்திருக் கிறேன். பல சத்தியாக்கிரகங்களில் அவர் தாம் பிழை செய்து விட்டதாக அறிவித்திருக்கிறார்; ராஜகோட் சத்தியாக்-கிரகத்திலும் அஹமதாபாதில் நடந்த ஆலைத்தொழிலாளர் சத்தியாக்கிரகத்திலும் சிறிது நிர்ப்பந்தம் புகுந்து விட்டதாய் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அம்பேட்கர் சம்பந்தமான விவகாரத்தில்தான் எனக்கு அவருடன் அதிகமாய்ப் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ''சாதிவாரிபிரிநிதித்துவத் தீர்ப்பு'' (Commual Award) அளிக்கப்பட்டதை ஒட்டி அதை எதிர்த்து பாபு இருந்த உபவாசத்தைத்தான் சொல்கிறேன்.

ரவீத்திரநாததாகூர் தம்மை எவரும் காரணமில்லாமல் நிர்ப்பந்தப்படுத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடியவரல்ல. அவர் இந்தியநாட்டின் காவலாளி போல் (Sentinel) இருந் தவர். நான் சாந்தி நிகேதனத்திற்குச் சென்றபோது அவரை நினைத்த மாத்திரத்தில் என் கண்களிலிருந்து நீர் பெருக ஆரம்பித்துவிட்டது அவர் இந்தியாவை எந்தெந்த சந்தர்ப்பங்களில் எப்படி யெப்படியெல்லாம் காத்திருக்கிறார் என்பதை எண்ணுகையில் பெருகி வந்த கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை. நமது இயக்கங்கள் கட்டு மீறி, தலை தெறிக்க ஓடத்தொடங்கிய போதெல்லாம்—அதை நடத்தியவர் அரவிந்தரோ, மகாத்மா காந்தியோ அவர் யாராயிருந்தாலும் —துணிந்து எதிர்த்து நாட்டை குறுகிய தேசாபிமானத் தினின்று விடுவிக்க, காக்க முயன்றிருக்கிறார். அவர்

இவ்வளவு பெரியவர். ஆயினும் பாபுவைப் போன்ற மாமனிதனின் உயிரைப் போக விடக்கூடாது, என்ற மோகம், ஆசை அவரையும் பற்றிக் கொண்டு விட்டது. அவர் அறிவுக்கு சரியென்று படாத இதை அவர் ஒளியாமல் மறைக்காமல் சொன்னர்.

இதிலிருந்து பாபுவின் அந்த உபவாசம் சரியல்ல, தவருனது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. அதில் எதிரியின் மனத்தை மாற்றுவதற்காக என்று எடுக்கப்படும் நடவடிக்கையின் முனை மழுங்கி விட்டது. அஹிம்சைப் பரிசோதனை என்ருல் அதை யாரும் செய்யலாம், தவறு எதுவும் நேராது என்பதல்ல. அவைகளிலும் ஏதோ பிழைகள், தவறுகள் நேரவே செய்யும். எனவே பாபுவின் பரிசோதனைகள் சிலவற்றிலும் குறைகள் சேர்ந்துகொண்டன. அவர் செய்த சில பரிசோதனைகளில் விரும்பத்தகாக நிர்ப்பந்தம் இடம் பெற்று விட்டமையால் அந்த அளவுக்கு அவை எதிர் மறைத்தன்மை பெற்று விட்டதாகச் சொல்வதில் தவறில்லை. ஆனல் அவரது சத்தியாக்கிரகக் கருத்து முழுவதுமே எதிர்மறைத்தன்மையவையாயிருந்திருக்க நான்தான் அதற்கு ஆக்க உரு அளித்தேன், என்பது முற்றிலும் தவருகும். நான் அவ்வாறு சொல்லவும் மாட்டேன்.

நான் வெறும் விளக்கம் அளிப்பவன்

நான் செய்திருப்பது பாபுவின் கருத்துக்களை விவரிக்க என சில புதிய சொற்களைக் கையாண்டு இருப்பதனல் அது குறித்து சிந்திப்பது சுலபமாகியிருக்கிறது, அதை நன்கு புரிந்து கொள்ளவும் முடிகிறது என்பதுதான். பாபுவின் சத்தியாக் கிரகக் கருத்து ஆக்கத் தன்மையதே. அவர் passive reistence (சாத்துவிக எதிர்ப்பு) என்ற சொற்ருெடரையும் அது முழுமையான அன்பைக் காட்டவில்லை என்ற காரணத்தினல் ஏற்க மறுத்து விட்டார். இதனல்தான்

அவர் 'சத்தியாகிரகம்' என்ற சொல்லையே கண்டு பிடித்தது. ஒருவன் சத்தியாக்கிரகியாய் இருப்பதற்கு சத்தியாக்கிராகியாக, உண்மையை ஏற்றுக் கொள்பவனுக இருத்தல் அவசியம். இது முதன்மையான முக்கியமான தேவையாகும். இவ்வாறில்லையேல் அவனுல் சத்தியாக்கிரகியாக ஆகவே முடியாதென்று நான் சொல்லுகிறேன். ஆனுல் காந்தியடிகளுக்கு இது அப்படி ஒன்றும் புதிய விஷயமல்ல. காந்தியடிகளிடம் சென்று இதையெல்லாம் சொன்னுல், இந்தப் புதிய சொற்களெல்லாம் வந்திருப்பது உங்களுக்குத் தெரியாதே என்று தெரிவித்தால் அவர், 'இந்தப் பிள்ளையாண்டான் விஷயத்தை நன்கு விளக்கிக்கூறும் ஆற்றல் பெற்றவன். அவன் இவ்வாறு சொல்வதனுல் எல்லோரும் கருத்தை நன்கு புரிந்து கொள்ள முடிவதாக எண்ணினுல் எனக்கு என்ன நஷ்டம்? என்றே நினைப்பார்.

அதாவது நான் காந்தியடிகள் கூறிய எதிலும் எதையும் புதிதாகச்சேர்த்து அதை வளர்த்து விடவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அதை உங்களிடமும் நிச்சயமாய்ச் சொல்லியிருப்பேன். என்னிடம் அத்தகைய விசேஷ ஆற்றல் இருந்தால் அதை வெளியிடாது மறைக்க வேண்டுமென்று நினைக்கும் அளவுக்கு அர்த்தமில்லாத பணிவு எனக்கில்லை. உண்மையில் என் அகத்தில் கருத்தைச் செலுத்திப் பார்க்கையில் ஓரளவு பணிவின்மை இருப்பதையே நான் காண்கிறேன். பணிவு என்பதோ, அதிலும் காரணமில்லாத பொய்ப்பணிவோ எனக்குக் கிடையாது. நான் புதிதாக எதையேனும் கண்டு பிடித்திருந்தால் பாபுவுக்கே தட்டுப்படாத ஒன்று எனக்குக் கிடைத்தது என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருப்பேன். சத்தியாக்கிரகத் தத்துவம் முழுக்க முழுக்க காந்தியடிகளுடையது; அது அவருடைய கண்டுபிடிப்பு. நான் அதை இம்மியளவும் மாற்றவோ, வளர்க்கவோ, தூய்மையாக்கவோ இல்லை; அதற்கு விளக்கம் மட்டுமே அளித்திருக்கிறேன்.

விளக்கம் வழிவழியாக அளிக்கப்பட்டு வருவதே

இந்திய வரலாறு முழுவதிலுமே கொள்கைகளுக்கு, தத்துவங்களுக்கு பலரும் அவரவர் காலங்களில் விளக்கம் அளிக்க முயன்று வந்திருப்பதைக் காண்கிறோம். வாமதேவர் காலந்தொட்டு ரவீந்திரநாதர் காலம் வரையில் வழிவழியாக இது நடந்து வந்திருக்கிறது. ரிக்வேதத்தில் வந்துள்ள ஒரு குறிப்பிட்ட சொல் உபநிடதங்களில் வேறு பொருளிலும், அதுவே பிற்காலத்திய பௌத்த நூல்களில் இன்னொருக் கருத்தைத் தாங்கியும் பயின்றிருக்கிறது. பிற்காலத்தில் ராம் மோகன் ராயின் நூல்களிலும், ரவீந்திரநாதரின் படைப்புகளிலும் அது வேறு உருதாங்கி வந்திருப்பதைப் பார்க்கிறோம். தரைப்படத்தில் கங்கையாறு மெல்லிய கோடாக முதலில் இருப்பது இறுதியில் தடித்த கோடாக மாறுவதைப் போலவே இந்தச் சொற்களும் உருமாறி இருப்பதைக் காண்கிறோம். எனக்கென்னவோ சொற்கள் என் முன்வந்து நிற்பதாகவும், அவற்றை அவை இதுவரை தாங்கி வந்துள்ள பல்வேறு உருவங்களிலும் என்னால் காண முடிவதாகவும் தோன்றுகிறது. சில சமயங்களில் ஒவ்வொருவர் அளிக்கும் விளக்கம் மிகவும் புதியதாய் (fresh) இருப்பது தெரியும் போது அந்தச் சொற்களே புத்துருவுடன் விளங்குவதைக் காண்கையில் அதிலேயே என் கருத்தைப் பறி கொடுத்து விடுகிறேன். அதனாலேயே எனக்கும் புதிய சொல் ஒன்று தோன்றுவதாகத் தெரிகிறது. உண்மை என்னவென்றால் அந்தச் சொற்களே மிகவும் அழகிய கருத்துக்களைத் தம்முள் அடக்கிக் கொண்டுள்ளவையாகையால் எனக்குப் புதிய பொருளேதோ அதிலிருந்து வெளிப்பட்டதாகத் தோன்றுகிறது. முன்னால் மீனுருவில் இருந்த தவளை, பிறகு கைகால்களோடு தரையில் தத்திச் செல்லுவதைக் காணும் விஞ்ஞானிகளுக்கு இது நன்றாகத் தெரியும். ஒரே தவளைதான், ஆனால் அதுவே நிலமை வேறுபாட்டினால், அதன்பிராயம் முதிருகையில் அதன் உருவமே மாறிவிடுகிறது.

இயேசு பெருமான், 'நான் என் முன்னே வாழ்ந்துள்ள மகான்களின் கருத்துக்களைக் கண்டிக்கவல்ல, அவைகளை இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்யவே வந்திருக்கிறேன்' என்று சொல்லியிருப்பதைப் போலவும் நான் இதைச் சொல்லவில்லை. அவர் இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்ததை அவரது முன்னோரும் சீடர்களும் ஏற்கவே மறுத்துவிட்டார்கள். இதனால் அவருடைய வழி ஒரு புது வழியாக, புதிய சமயமாகவே ஆகிவிட்டது.

ஆயினும் இயேசு பெருமானுக்குப் புதிய சமயம் ஒன்றை நிறுவும் எண்ணமே இருந்ததில்லை. 'நான் யூதர்களின் சாஸ்திரங்களை செம்மைப்படுத்தி, அவற்றிற்குப் புத்துருவே அளித்து வருகிறேன்,' என்றே அவர் பணிவுடன் சொல்லி வந்தார். இவ்வாறு அவர் பணிவுடன் கூறிய போதிலும் அவர் அதில் புகுத்திய புதிய அம்சங்கள் காரணமாக அது பழைய தன்மையை முற்றிலும் இழந்து' புதிய சமயமாகக் காட்சி அளிக்கிறது. அவர் 'Love thy enemy' என்றும் 'A tooth for a tooth' என்றும் அதாவது பகைவனிடமும் நேசம் பாராட்டு; ஒருவன் உன் பல் ஒன்றை உடைத்தால் நீ அவன் பல் ஒன்றை உடைக்க வேண்டுமே தவிர 2 பற்களை உடைக்கக் கூடாது, அவ்வாறு உடைத்தல் தவறாகும், நீ இழந்த ஒரு பல்லுக்காக எதிரியின் ஒரு பல்லை உடைப்பது நியாயமான நடவடிக்கையே', என்றார். எந்த சமுதாயத்தில் ஒன்றுக்குப் பத்தாகக் கொடுமை விளைவிப்பதே வழக்கமாகி இருக்கிறதோ அதை அடக்கவே, ஓர் அளவுக்குள் கட்டுப் படுத்தவே இவ்வாறு போதிக்கப்பட்டது என்பதை நாம் மறக்கக் கூடாது.

எந்த தர்ம போதனையும் இருப்பது நம்மைத் தூண்டி விடுவதற்கின்றி நம்மை அடக்கிக் கட்டுப் படுத்தவே அமைந் திருக்கும். மனிதன் இயல்பிலேயே 'இதைச் செய்வோம், அதைச் செய்வோம்' என்று எண்ணிக்கொண்டுதான் இருக் கிறான். அந்த அவனது செயல்களின் போக்குகளை தவறான

திசையில் செல்லாமல் தடுத்து, நல்வழியில் திருப்பிவிடுவதே சாஸ்திரங்களுக்குள்ள வேலை. சங்கராச்சாரியர் "சாஸ்திரங்கள் நம்மை ஏவுபவையல்ல, நம் போக்கைத் தடுத்து நிறுத்துபவை, திருப்பிவிடுபவை" என்றார். "காரியங்கள் உலகில் தாமே நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காரியங்களை வரையறை செய்து, அந்தக்கட்டுக்கு அடங்கி நடக்கும்படி செய்வதே சாஸ்திரங்களுக்குள்ள வேலை" யென்று சொல்லியிருக்கிறார்.

'கிஸாஸ்' என்பது ஓர் அரபுச் சொல். அது கொள்கை அல்லது சித்தாந்தத்துடன் தொடர்பு உள்ளது. இந்த கிஸாஸ் அல்லது சித்தாந்தம் எதிராளி செய்த குற்றத்திற்குப் பொருந்த அவனுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்பது. இவ்வாறு செய்தே அவன் கடவுள் அருள் பெற்றான். யாரோ கடவுள் ஒருவர் நிச்சயமாய் இருக்கவேண்டும். அவர்தான் கிஸாஸை உருவாக்குகிறார்; உன்னால் அதை உருவாக்க முடியாது. ஒரு மனிதன் 10 முறை கொலை செய்தானென்றால் நீங்கள் அவனை ஒரே முறை தூக்கிலேற்றி தண்டனை அளிக்க முடியுமே தவிர 10 தடவை தூக்கிலேற்ற முடியாது. ஆகையால் இந்த விஷயத்தில் உங்களால் 'கிஸாஸ்' செய்ய முடிவதில்லை. கிஸாஸ் செய்ய கடவுள் ஒருவரால்தான் ஆகும். எஞ்சியுள்ள 9 தூக்கு தண்டனையையும் கடவுள் அவனுக்கு அளிப்பார். நான் சொல்லும் இது ஏதோ விநோதமாகத் தோன்றினாலும் கடவுள் உண்மையை விளக்கியுள்ள பெரியார்கள் இவ்வாறுதான், இந்த உதாரணத்தின் மூலம்தான் அதை விளக்கியிருக்கிறார்கள். கருணை புரிவதற்கு பரமேசுவரனும் மன்னிப்பு அளிப்பதற்கு ஜனாதிபதியும் அவசியமாயிருப்பதைப்போல முழுத்தண்டனை (அல் கிஸாஸ்) கணக்காக நியாயமான முழுத்தண்டனையளிக்கக் கடவுள் ஒருவர் இருப்பதும் அவசியம் ஆகிறது.

அதாவது, A tooth for a tooth (ஒருவன் உன் ஒரு பல்லை உடைத்தால் நீ அவன் பல் ஒன்றை உடை) என்பது

ஒரு தர்ம சித்தாந்தம்தான். ஆனால் இயேசு பெருமான் தோன்றி அதை மாற்றியதனால் அது உருத் தெரியாமல், உன் பகைவனை நேசி (Love thy enemy) என்று முழுதும் மாறிப்போய்விட்டது. இது வெறும் உருமாற்றம் அல்ல; புரட்சிகரமான மாற்றம் என்றே சொல்லக் கூடியது.

நான் சொல்லிவந்தது இயேசு பெருமான் பழைய கருத்தில் செய்துள்ள மாற்றங்களுக்கு ஒத்த அளவில் நான் பாபுவின் கருத்தில் மாற்றமெதுவும் செய்துவிடவில்லை என்பதாகும். இதனால் நான் அவர் சொல்லாத எதையோ புதிதாகச் சொல்லியிருப்பதாக எவரும் எண்ணவேண்டாம்.

மாறிய காலம்

இன்னும் ஒரு விஷயத்தையும் விளக்கவேண்டும். காந்தியடிகளின் காலத்திற்கும் அதற்குப் பிற்பட்ட காலத்திற்கு மிடையே மேலெழுந்தவாரியாக அன்றி அடிப்படையிலேயே வேற்றுமை உண்டாகியிருக்கிறதென்று சொன்னேன். இந்தியாவினுள்ளேயே தோன்றியுள்ள மாற்றங்கள்தான் இருக்கின்றனவே, இவையன்றி உலக நிலைமையிலும் வேறு பாடுகள் தோன்றியிருக்கின்றன. ஆனால் நாம் முதலில் நாட்டினுள்ளே எழுந்துள்ள வேற்றுமைகளைப் பார்ப்போம். முதலாவது மாறுதல், அந்தக் காலத்தில் நமக்கு சுதந்திரம் இல்லாதிருக்க இப்பொழுதோ சுதந்திரம் பெற்றுள்ளோம். இரண்டாவதாக, அப்போது இந்தியாவில் ஜனநாயக ஆட்சி இருந்ததில்லை; இப்போது அது நடந்து வருகிறது. இந் நிலையில் சத்தியாக்கிரகத்தின் வெளி உருவம் வேருகத்தான் இருக்கும். தத்துவ ரீதியாகக் கருதுகையிலோ அதன் அடிப் படை உருவம் அன்புமயமாய் இருக்கும். நான் இவ்வாறு சொன்னபோது ஜனநாயக ஆட்சி நடக்கையில் சத்தியாக் கிரகத்திற்கு இடமே இல்லையென்று பாபா சொன்னதாக எண்ணிக்கொண்டார்கள், சிலரது சொந்த அபிப்பிராயமும்

இவ்வாறு இருந்தது. அதனால் அவர்கள் தம் கருத்தோடு பாபாவும் அவ்வாறு சொல்லுவதாகச் சேர்த்து சொல்லலா னார்கள். ஆனால் அது சரியல்ல. சத்தியாக்கிரகம் என்பது ஒரு வாழ்க்கை முறை; ஒரு செயல் முறை. அது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கையாள வேண்டிய முறையுமாகும்.

ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்தின் இடம்

நான் உங்களுக்கு சாஸ்திர ரீதியான விளக்கமொன்றை அளிக்கிறேன். வித்தியாசம் இருப்பது எங்கேயென்று நீங்களே புரிந்துகொள்ளுங்கள். ஜனநாயகத்தில் பிரசாரம் செய்வதற்கு உங்களுக்குச் சிறிதும் தடை இல்லை. 'எங்கள் கொள்கை இது, ஆகையால் நீங்கள் எங்களைத் தேர்ந்தெடுங்கள்' என்று சொல்லுவதை யார் தடுக்கிறார்கள்? ஆயினும் அதிகார அரசியலில் இறங்குவது உங்களுக்குச் சரியென்று தோன்றாமையினால் நீங்கள் அதில் இறங்குவதில்லை. அவ்வளவுதான். இந்நிலையில் மக்களை அணுகுவதற்கு சத்தியாக்கிரகத்தைத் தவிர உங்களிடம் வேறு சாதனம் எதுவும் இல்லை; நீங்கள் விரைவில் காரியம் செய்ய விரும்பினால் அதற்கு சத்தியாக் கிரகம் ஒன்றுதான் உதவக்கூடியதாயிருக்கிறது. ஆனால் சத்தியாக்கிரகத்தின் தன்மை எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றி நான் சிறிது விளக்கமளித்திருக்கிறேன். மேலும், அரசியல் துறையில் நிலைமை மாறும்போது நாம் எவ்வாறு சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்றும் கூறியிருக்கிறேன்.

உலக அரங்கில் சத்தியாக்கிரகம் செய்தல்

உலக விவகாரங்களில் இதுவரையில் எங்கும் சத்தியாக் கிரகம் நடந்திருப்பதாக நான் கேள்விப்படவில்லை. எங்கேனும் நடந்திருக்கலாம். ஆனால் அதைப்பற்றி நமக்கு விளக்கமாக

எதுவும் தெரிய வரவில்லை. ஆகையால் உலக அரங்கில் சத்தியாக்கிரகம் நடந்ததில்லையென்றே கொள்ள வேண்டியது தான். எனவே இதுவரையில் எங்கும் நடந்திராத, எவரும் செய்திராத ஒன்றை நாம் செய்ய வேண்டியிருக்கிறது என்று கிறது. இன்னொரு விஷயம், இதுவரையிலில்லாத அணு யுகம் இப்போது தோன்றியிருப்பது.

சத்தியாக்கிரகத்தில் ஆன்ம பலமே முக்கியம்

எனது நண்பர்கள் சிலருக்கு பாபா செய்துவரும் (பூமி தான யாத்திரையை விட) மைத்ரீ யாத்ரா—நட்புயாத்திரை சிறந்த நடவடிக்கையென்று தோன்றுகிறது. அதையும் பார்க்க போர்முனைக்குச்சென்று இரு படைகளுக்கும் இடையில் நிற்பது சிறந்ததென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் எனக்கோ இந்த யோசனையே மிகவும் அசட்டுத்தனமானது (crude), அதில் விஞ்ஞானத்தின் அம்சமே இல்லையென்று தோன்றுகிறது.

சத்தியாக்கிரகத்தில் ஆன்ம சக்தி இருப்பது முக்கியமா அல்லது உடல் வலு இருந்தால் போதுமா? இராணுவத்தில் சேர விரும்புவோருக்கு நல்ல உடற்கட்டு இருக்கவேண்டு மென்று கருதப்படுகிறது. சத்தியாக்கிரகம் செய்வோருக்கும் அது அவசியமா? நல்ல உடல் வலிமையுள்ளவரால் சிறந்த முறையில் சத்தியாக்கிரகம் செய்ய முடியுமா? இமயத்தைக் கடந்து எதிரிகளைத் தாக்குவதற்கும், எதிர்த்து நிற்பதற்கும் ஜெயப்பிரகாஷ் அவர்களால் ஆகுமா? பாபாவினாலோ அல்லது தீரேந்திரபாயினாலோ தான் அதைச்செய்ய முடியுமா? கருத்தில் உறுதியும், பெரும் ஆன்ம சக்தியும் உள்ள இன்னும் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் இமயமலையில் ஏற முடியுமா? காஷ்மீரத்திலுள்ள பீர்பஞ்சாலில் ஏறினேன் அது **''பங்கும் லங்கயதே கிரிம்''**—நொண்டி மலையை

ஏறிக் கடந்ததைப் போலவே ஆயிற்று. ஆனல் இந்த நொண்டிக்கோ உடனிருந்த சகாக்களின் உதவியினல் மலையைக் கடந்த புகழ் வந்துவிட்டது. எனது யாத்திரையில் சில ஜெனரல்களும், சில கர்னல்களும், சில சிப்பாய்களும் எனக்கு முன்னும் பின்னும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாத்திரைக்கான திட்டம் முழுதும் வகுத்து ஏற்பாடுக ளெல்லாம் செய்ய தம் இருபுறமும் வந்துகொண்டிருந்த இருவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு சென்று கொண் டிருந்தேன். இவ்வளவு உடல்வலி தேவையாய் உள்ள இடத்தில் சத்தியாக்கிரகம் செய்வதென்ருல் அது எவ்வாறு இருக்கவேண்டும்? அதன் தன்மை, உரு எவ்வாறு அமைய வேண்டும்? அந்த நிலைமையில் சத்தியாக்கிரகம் செய்ய உங்க ளிடமுள்ள தலைசிறந்த மனிதர்களாலும் ஆகாது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். இத்தகைய சத்தியாக் கிரகத்தைஏற்றவர்கள் உடல்வலிமைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவிட்டார்கள். ஆனல் சத்தியாக்கிரகமோ தன்னைக் கையாளுவோருக்கு ஆன்ம சக்தியே அல்லாது உடல்வலி தேவையில்லையென்று அறுதியிட்டுச் சொல்லுகிறது.

காந்தியடிகள், 'சத்தியாக்கிரகியின் உடலில் நோய் நொடிகள் இருக்கக்கூடாது என்ருலும் அவனுக்கு உடல் கட்டு வேண்டுமென்பதில்லை' என்ருர். 'அவன் ஆன்மாவில் ஆழ்ந்து இருப்பானகையால் நோய்நொடிகளால் அவஸ்தைப் படமாட்டான் என்ருலும் அவன் உடற்கட்டு இருக்குமென்று சொல்லுவதற்கில்லை' என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிருர். சத்தியாக்கிரகியின் உடல் நல்ல வலுவுள்ளதாகவும் ஏன் இருக்கக் கூடாது என்று கேட்டு நான் பாபுவுடன் வாதாடி இருக்கிறேன். ஆனல் எவருடைய உடலில் நல்ல வலு இருக்கிறதோ, குளிரையும் மழையையும் பொருட்படுத்தாமல் எவரால் மலையில் ஏறமுடியுமோ அவருக்குத்தான் சத்தியாக் கிரகம் செய்யத் தகுதியுண்டென்று நீங்கள் சொல்லுகிறீர்களா?

உலக அரங்கில் சத்தியாக்கிரகம் செய்வதற்குள்ள முறையைக் கண்டுபிடியுங்கள்

ஆகையால் இதில் உடலின்வலிமையே முக்கியமானதாய் இருப்பதால் இதை சத்தியாக்கிரகத்தின் மிகவும் மட்டமான (crude) சாஸ்திரம், ஒவ்வாத முறையென்றே சொல்ல வேண்டியிருக்கும். நீங்கள் உலக அரங்கில் சத்தியாக்கிரகத்தைக் கையாள விரும்பினால் அதற்கு உதவும் ஆன்மீக முறையொன்றைக் கண்டுபிடிக்கவேண்டிருக்கும். அதற்கு வழியொன்றும் உங்களுக்குத் தெரியாவிட்டால் எங்களுக்கு வழி புலப்படவில்லையென்று உண்மையை ஒப்புக்கொண்டுவிட வேண்டியிருக்கும். அந்த முறை எத்தகையதாயிருந்தாலும் அதில் உடலின் வலுவுக்கு முக்கியத்துவம் இருப்பதற்கே இடமில்லை.

10 சத்தியாக்கிரக தத்துவம்

[கீழே காணப்படும் சத்தியாக்கிரகம் பற்றிய கருத்துக்கள் 1952-65க்கிடையில் பூதான - கிராமதான யாத்திரையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டவை]

சத்தியாக்கிரகத்தின் உபகரணங்கள்

கருத்தில் உறுதி, தவம், நம்பிக்கை

எனக்கு ஏதேனும் மதிப்பு இருந்தால் அது நான் ஒரு சத்தியாக்கிரகியாக இருப்பதனாலேயே ஆகும்; வேறு பெருமை எதுவும் எனக்கில்லை. ஆகையால் அவசியமானால் நான் சத்தியாக்கிரகம் செய்வேன். ஆனால் ஒரு அடி எடுத்து வைத்தால் போதும் (One step is enough) என்பது காந்தியடிகள் கையாண்ட முறை. அடுத்துச் செய்ய வேண்டியது என்னவென்று நமக்குத் தெரியாது என்பது இதன் பொருளல்ல. ஆனால் ஆரம்பம் முதலே நாம் அடுத்துச் செய்யவேண்டியதுபற்றி யோசிக்கத் தொடங்குகையில் அது நிறைவேறுமோ நிறைவேறாதோவென்ற சந்தேகம் வந்து விடுகிறது. நான் ஒரு நோயாளிக்குப் பணிவிடை செய்கையில் அவன் பிழைத்து எழாவிட்டால், உதவட்டுமென்று விறகும் தேடிக் கொணர்ந்துவைக்கமாட்டேன். நான் செய்யும் பணிவிடையினாலும் சிகிச்சையினாலும் அவன் நிச்சயமாய் நோய் நீங்கி எழுந்துவிடுவான் என்ற நம்பிக்கையிலேயே நான் அவனுக்கு எல்லாம் செய்வேன். என்ன செய்தும் பயன்படாமல்போய், அவன் இறந்துபோனால், அதன் பிறகே அமைதியாக மேலே செய்யவேண்டியவைகளை கவனிப்பேன்.

நாம் முதலாவதற்கடுத்த நடவடிக்கை பற்றி எண்ணுவதே எதனால்? மக்கள் நாம் சொல்லுவதைக் கேளாமல்

இருந்தால், நமக்கு நிலம் கொடுக்கவே எவரும் முன்வரா விட்டால் என்ன செய்வது என்ற சந்தேகத்தினுல்தான். ஆனுல் இந்த சந்தேகமே நமக்கு மக்களிடம் போதிய நம்பிக்கை இல்லாததனுல்தான் எழுகிறது. இது வேலை செய்வதற்குள்ள சரியான முறையல்ல. இதனுல் வேலையாக வேண்டியது போய் கெட்டுப் போகிறது; நமது உறுதி தளர்ந்து போகிறது. உறுதி தளர்ந்து விடுகையில் வேலை எப்படி ஆகும் ?

நான் என் மனதில் செய்து கொண்ட உறுதிகள் எதுவும் நிறைவேருது போனதில்லை என்பது என் அனுபவம். இதனுல் என் அகத்தில் வீற்றுள்ள அதே பகவான் மக்கள் உள்ளங்களிலும் எழுந்தருளியுள்ளார் என்ற உறுதியில் அவர்களை அணுகி, கருத்தை விளக்கிச் சொன்னுல் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களும் புரிந்து கொள்ளுகிருர்கள். ஒரு முறை இருமுறையல்ல, பல முறை விளக்கிச் சொல்லலாம். சங்கராச்சாரியாரிடம் தத்துவத்தை விளக்கிக் கூறுவது என்பதைத்தவிர வேறு என்ன சாதனம் இருந்தது ? எனக்கு இறுதியில் ஏதேனும் ஒன்றில் நம்பிக்கையுண்டென்ருல் அது விஷயத்தை விளக்கிக் கூறுவதற்கு எனக்குள்ள ஆற்றலில்தான் இருப்பதாகச் சொல்ல வேண்டும். குற்றவாளியை மன்னிப்பதற்கு ஓர் அளவே இல்லையென்று இயேசு பெருமான் சொல்லியிருப்பதைப் போல விஷயத்தை விளக்குவதற்கும் ஒரு கணக்கில்லை. ஆகையால் உங்களால் அதன் தன்மையை எந்த அளவுக்கு விளக்கிக்கூற முடியுமோ அந்த அளவுக்குத்தான் சத்தியாக்கிரகமும் செய்யமுடியும். அதில் பலவந்தம் புகுந்ததும் சத்தியாக்கிரகமாக இராது. தாய் தன் பிள்ளை எப்பொழுதேனும் திருந்தி விடுவான் என்ற நம்பிக்கையோடு இருக்கிருள். அதே போல சத்தியாக்கிரகியும் மக்களுக்கும் உண்மை புலனுகும், இன்றில்லாவிட்டல் நாளைக்குத் தெரிந்து கொள்வார்கள், விளக்கம் பெறத் தவறமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இவ்வாறு இதிலும் சத்தியாக்

கிரகத்திற்கு இடமுண்டு. ஆகையால் நாம் சத்தியாக்கிரகத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாதபோது அது சத்தியாக்கிரகமாய் இராமல் இம்சையாக ஆகிவிடும்.

சேவாபுரி, (வாராணசி)
13-4-1952.

இணைக்கத்தின் அவசியம்

சர்வோதயக்காரர்களாகிய, மக்கள் நலத்தில் கருத்துள்ள நாம் சத்தியாக்கிரகத்தின் அடிப்படையில் சமுதாயத்தை வலுவாக்க விரும்புகிறோம். இதைச் செய்வதற்கு நமக்கு முதலில் சத்தியாக்கிரக தத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை இருக்க வேண்டும். இரண்டாவதாக அதன் பொருட்டு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக, துன்பங்களை அனுபவிக்க நாம் சித்தமாயிருக்க வேண்டும். எவ்வளவு தியாகம் புரிய வேண்டி வந்தாலும், எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வந்தாலும் நாம் அனுபவிக்க ஒருப்பட வேண்டும். மூன்றாவது விஷயம், மக்கள் மனத்தை மாற்ற முடியுமென்ற உறுதியும் நம்பிக்கையும் வேண்டும். நம்மால் மனிதர்களின் மனத்தை மாற்ற முடியும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெய்வச்சுடர் எரிவதால் இது நம்மால் ஆகக்கூடியதே. மேலே இருள் சூழ்ந்திருந்தாலும் உள்ளே உள்ள சுடர் என்றுமே அழிவதில்லை. இவ்வாறு என்றென்றும் அழியாது எரிந்து கொண்டிருக்கும் ஆன்ம சக்தி அல்லது கடவுளின் சக்தியில் நமக்கு நம்பிக்கை இருக்கவேண்டும்.

சுருங்கச் சொன்னால் தத்துவத்தில் உறுதி, கஷ்டங்களை அனுபவிக்கத் தீர்மானம் அல்லது தவம், உள்ளத்தில் உறுதியும் கடவுளிடம் நம்பிக்கை என்ற இம்மூன்றும் இருக்குமிடத்தில் தான் அமைதியான முறையில் சமுதாயத்தில் புரட்சியைத் தோற்றுவிக்க முடியும். இதன் பொருட்டு சமுதாயத்திற்கு அவசியமாயுள்ள பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு, சமுதாய

நீதியில் அவைகளைக் கையாளவும், அதே சமயத்தில் அகத் தூய்மை கருதி உள்ளுக்குள் முயன்று வரவும் வேண்டும். சமுதாயப்பணிகளைப் புரிவதன் மூலம், அமைதி வழியில், சமுதாயத்தின் உருவை மாற்ற நம்மால் முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

சத்தியம்+அன்பு+தவம்=சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் செய்வதற்கு எதிராளியிடம் நமக்கு அன்பிருக்க வேண்டும். நாம் அவனை வெறுத்தல் தவருகும். மனதில் துவேஷம் இருக்கையிலோ அவனோடு ஆயுதங் கொண்டு போரிடுதல் நல்லது. ஆகையால் நம் மனதில் அவனிடமுள்ள துவேஷத்தை, வெறுப்பை நீக்கிக் கொள்ளு தல் நல்லது. அவ்வாறு செய்கையில்தான் நாம் செய்யும் சத்தியாக்கிரகம் வலுவுள்ளதாய் அமையும். இதனால்தான் மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் என்னும்போது அதிலேயே அன்பு அடங்கிவிட்டதாகச் சொன்னார். அது வடமொழியில் 'இடைச்சொல் தொக்கு' (மத்யம பத லோபீ சமாசம்) எனப் படும். எனவே சத்தியாக்கிரகமென்றால் சத்தியத்தின் பொருட்டு, அன்பின் மூலம் பாடுபடுதல் என்று பொருளா கிறது. நாம் சத்தியம், அன்பு என்ற இரண்டையும் ஒன்றாய் இணைக்கும்போதுதான் சமுதாயம் முன்னேறும்; பொருள்களின் உற்பத்தி பெருகும்; எழும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

விஜயவாடா (ஆந்திரா)
19-12-1955

* * *

நிலப்பிரச்சினையை வெட்டு, கொலையினாலோ, சட்டத்தைக் கொண்டோ, கருணையின் மூலமோ தீர்க்க முடியும் என்பது தெரிந்ததே. இந்த மூன்று வழிகள் இருப்பதை மக்களுக்குச் சுட்டிக்காட்டி, ஆரம்பம் முதலே நாம்

இப்போது செய்து வருவது பூதான யக்ஞத்தின் மூலம் நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியே என்று சொல்லி வந்திருக்கிறேன். நான் இவ்வாறு சொல்லும்போது இவை அல்லாமல் நான்காவதான சத்தியாக்கிரகம் ஒன்று இருக்கிறதே என்று சிலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். நான் கருணையென்னும்போது அதிலேயே சத்தியாக்கிரகமும் அடங்கிவிட்டதென்பதும், தானம் கோரி செய்யப்பட்டுவரும் இந்த யாத்திரையும் சத்தியாக்கிரகத்தில் ஒரு வகையே என்பதும் என் நம்பிக்கையாகும். இதில் கருணை, சத்தியம், தவம் என்ற மூன்றும் அடங்கியிருக்கின்றன. வேறு வகையில் தவம் இயற்ற நேர்ந்தாலும் அதிலும் கருணை இருக்கவே வேண்டியிருக்கும். எதில் சத்தியமும், கருணையும் தவமும் உண்டோ அதுதான் சத்தியாக்கிரகம் என்ற பெயர் பெறும்.

மாமண்டூர், சித்தூர் மாவட்டம்
3-5-1959.

சத்தியாக்கிரகம் பகைமையற்ற அன்புவழி

நிலப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்று வழிகள் உள்ளன. அவை 1) நிலம் வைத்துள்ளவர்களைக் கொன்று அவர்களிடமுள்ள நிலத்தை எடுத்துக்கொள்ளுதல்; 2) அவர்களிடம் நிலம் தரும்படி வேண்டி அவர்கள் தருவதைப் பெற்றுக்கொள்ளுதல்; 3) சட்டத்தின் உதவியால் நிலத்தை ஆர்ஜிதம் செய்தல். எல்லோரும் சத்தியாக்கிரகம் பற்றிப் பேசுகிறார்கள். நம்பிக்கையுடனும் தற்பெருமையில்லாமலும் நிலம் கோரிப் பெற முடிந்தால் வேறு வெளிப்படையான சத்தியாக்கிரகம் எதுவும் செய்ய வேண்டியிராதென்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஒருக்கால் சத்தியாக்கிரகத்திற்கு அவசியம் நேர்ந்தாலும் இப்போது நாம் வாய் வார்த்தையாக நிலமுள்ளவர்களிடம் கோரிவருவதனால் உருவாகும் சூழ்நிலை அதற்கும் உதவியாய் இருக்கும். ஒருக்கால் சத்தியாக்கிரகம் செய்ய நேர்ந்தாலும் நான் அதை எவருமே

எதிர்க்காத வகையில், காலம், நேரம் எல்லாம் பார்த்து அதற்குரிய முறையிலேதான் செய்வேன். அப்போது எனது அந்த சத்தியாக்கிரகத்திற்கு அனேவரது ஆதரவும் கிடைக்குமாகையால் அது வெற்றிபெறத் தவருது. 'ஸ்ரீராமன் ஒரே முறைதான் எதிரிமீது அம்பு எய்வான். அவன் ஒன்றைச் சொன்ஞல் சொன்னதுதான், அதை மாற்ற மாட்டான்'

"த்வி:சரம் நாபிஸந்தத்தே ராமோத்விர்நாபி பாஷதே"

என்று கூறப்பட்டிருக்கிறது. சத்தியாக்கிரகம் பற்றிய எனது கருத்தும், நான் அதைப்பற்றி நினைப்பதும் இவ்வகையில் தான்.

பதேக்பூர்
7-6-52

அதனுல் உலகின் உள்ளம் உருக வேண்டும்!

பிறருக்குத் துன்பமிழைக்காமல் எல்லாக் கஷ்டங்களையும் தானே ஏற்றுக்கொள்ளுவதும், அலுக்காமல் சலிக்காமல் விஷயத்தை எடுத்து விளக்குதலுமே சத்தியாக்கிரகம் என்பது. சத்தியாக்கிரகம் என்று சொல்லி நான் மக்களை அச்சுறுத்தவில்லை. சத்தியாக்கிரகம் தவருகப் பயன் படுத்தப்படலாம். இந்தக்காலத்தில் அநேகமாய் அது தவருகத்தான் பயன்படுகிறது என்பது உண்மை. ஆனுல் சத்திய வழியில் நாம் உறுதியாய் நடப்பதனுலேயே எதிராளியின் மனம் இளகிவிடவேண்டும் என்று நான் நம்புகிறேன். இதன்பொருட்டு நாம் தியாகங்களுக்குச் சித்தமாவதே சத்தியாக்கிரகம். மேலும், உண்மையான சத்தியாக்கிரகி ஒருவன் இருந்தாலே போதும், அவனுல் உலகை மாற்றிவிட முடியும். உலகின் உள்ளமே அவனைக்கண்டு உருகிப்போகும் என்பதும் என் நம்பிக்கையாகும். ஆனுல் அதற்கு அவன் உள்ளத்தில் அகில உலகினிடமும் அன்பு நிரம்பித் ததும்ப வேண்டும்.

உபவாசம் — சரியானதும் தவறுனதும்

ஆனுல் இன்ருே சில்லறைக் காரணங்களுக்காகவும் உபவாசமிருக்க ஆரம்பித்துவிடுகிருர்கள். இவ்வாறெல்லாம் செய்வது தவறு. இதனுல் நேரும் விளைவுகள் எந்த நோக்கத்திற்காக உபவாசம் ஏற்கப்பட்டதோ அதற்கு நேர்மாருய் ஆகிவிடுகின்றன. ஒருவர் தொடங்கிய உபவாசம் எல்லோர் மனத்திலும் அன்பு தோன்றக் காரணமாயிற்றென்ருல்தான் அதை உண்மையான, சரியான உபவாசமென்று சொல்லலாம். ஆனுல் ஒருவர் செய்த உபவாசத்தின் பயனுகத் துவேஷம் பெருகி, சண்டை அதிகமானுல் அந்த உபவாசம் தவறுனது என்று முடிவுசெய்துவிடலாம். எதிராளியினிடம் நம் மனத்தில் அன்பிருந்து நாம் அவனைத் திருத்தக்கருதி உபவாசம் மேற்கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு தான் செய்தது பெரிய தவறு என்பது விளங்கி, அதற்காக அவன் நாணித் தலை குனிந்தால்தான் நமது உபவாசம் சரியானதென்ருகும். நான் ஒருவனை எதிர்த்து உபவாசம் அல்லது சத்திபாக்கிரகம் செய்கையில் அவன் மனத்தில் இத்தகைய மாற்றமெதுவும் தோன்ருவிட்டால் நான் அனுபவமுள்ள சத்தியாக்கிரகியல்ல என்றேயாகும். தன்னிடம் எனக்கு அன்பிருக்கிறது, அதனுலேயே நான் சத்தியாக்கிரகம் செய்கிறேனென்ற எண்ணம் எதிராளியின் மனதில் உண்டானுல்தான் நான் உண்மையான சத்தியாக்கிரகி என்று கருதப்படுவேன். வெறும் எதிர்ப்பு சத்தியாக்கிரகம் ஆகாது.

நாரதி கஞ்ச், கயை
22-5-53

வழி தவறிய நல்லவரை எதிர்ப்பது எப்படி?

துளசிதாசர் துறவியின் கையில் தண்டம் அல்லது கொம்பு இருக்க வேண்டும், "*தண்ட ஜதின கர*" என்று சொல்லி

Gandhian Study Circle,
Govt. Arts College,
DHARMAPURI.

இருக்கிருர். இதற்கு ஞானிகள் பேரறிவாளிகள், கையிலேயே சமுதாயத்தை அடக்கி வழி துலக்கும் சக்தி இருக்கவேண்டும் என்பது பொருள். கொம்பு உயிரற்ற ஜடப்பொருளாகையால் அதற்கு, தான் எவர் கையில் இருக்க வேண்டும், எவர் கைக்குப் போகக் கூடாது என்பது ஒன்றும் தெரியாது. 'நான் துறவியின் கையில்தான் இருப்பேன்; வேறு எவரிடமும் போகமாட்டேன்' என்று சொல்ல அதற்கு அறிவில்லை.

'நான் பற்றின்றி, விருப்பு, வெறுப்பில்லாமல் மக்களை ஒழித்துத் தீர்க்க உத்திரவிடுகிறேன்' என்று ஒருவர் சொல்லுகிருர். பழைய காலத்திலென்ருல் இவ்வாறு ஒருவர் சொல்லுவதற்கு ஓரளவு இடம் இருந்தது எனலாம். ஏனெனில் அந்தக்காலத்தில் இப்பொழுதுபோல் விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்திருக்கவில்லை. இம்சையைத் தடுப்பதற்கு அந்தக் காலத்தில் அதிக சாத்தியக் கூறுகள் இருந்தன. ஆனுல் இன்ருே விஞ்ஞானம் வெகுவாய் வளர்ந்துவிட்டது. அதன் வளர்ச்சியை நம்மால் தடுக்கமுடியாது. இதனுல் நல்ல மனிதனுல்கூட நடுவு நிலையில் இருந்துகொண்டு இம்சையைக் கையாளவோ, தன் இச்சைப்படி அதை நிறுத்தவோ முடியாது போய்விட்டது. அதாவது இம்சைச் சக்தியைத் தன் வசம் வைத்துக்கொண்டு தன் இச்சைப்படி அதைப் பிரயோகிக்க எவராலும் ஆகாது போய்விட்டது.

இப்போது நம்முன் எழுந்துள்ள பிரச்சினை, இதைப் புரிந்து கொள்ளாத நிலையில், விரும்பியோ விரும்பாமலோ இம்சைக்குத் தூபம் போட்டு அதைப் பயன்படுத்திவருபவர்களை எப்படி எதிர்த்துநின்று சமாளிப்பது என்பதே. இப்போது நம்முன் எழுந்துள்ள பிரச்சினை துஷ்டர்களை, தீயோரை எப்படி எதிர்ப்பது, சமாளிப்பது என்பதல்ல, இன்பத்தில் பற்றில்லாமலும், ஆனுல் பணப்பித்தம் பிடித்துமுள்ள நல்லவர்களை எப்படி சமாளிப்பது என்பதே பிரச்சினை.

இதை நம் கருத்துத்திறன் ஒன்றைக்கொண்டுதான் சமாளிக்கமுடியும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு நமக்கு

நம் உள்ளக் கருத்தில் உறுதியிருக்க வேண்டும். கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக நம்மால் முடிந்தால்தான் இது சாத்தியமாகும். இதன்பொருட்டு நாம் ஓயாது நம் அகத்தில் ஆழ்ந்து ஆராய்ந்துவரவும், மிகுந்த பணிவுடன் அதையே கடமையாய்க் கருதி கஷ்டங்களை அனுபவிப்பதும் அவசியம் ஆகும். இதைத்தான் இந்தக்காலத்திற்குப் பொருந்தும் வகையில் நான் சத்தியாக்கிரகமென்று குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தச் சொல்லுக்கு இந்தக் காலத்தில் இப்பொருள் பொருந்துமோ பொருந்தாதோ எனக்குத் தெரியாது. ஆனால் கருத்தில் உறுதி, கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவதைத் தன் கடமையாய்க் கருதுதல் என்ற இவையிரண்டுமே சத்தியாக் கிரகம் என்ற சொல்லின் பொருள் என்பது என் கருத்து. இது மிகவும் தூய, ஆக்கத்தன்மையுள்ள, அன்புமயமான நிர்மாணத்திற்கு உதவும் சக்தியாகும். இதைப் பயன்படுத்தி, வழி தவறியவர்களென்று நாம் கருதும் நல்லவர்களையும் நம்மால் வழிக்குக் கொண்டுவர முடியும்.

கயை,
30-3-54.

சத்தியாக்கிரகம் எப்போது பொருந்தும்?

(1) காரியம் விரைவில் ஆவதற்கு சத்தியாக்கிரகம் செய்தால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் நானே சுலப கிராமதானத்தை விடச் சிறந்ததும், விரைவில் பயன் தரக் கூடியதுமான வேலைத்திட்டமொன்றை எவரேனும் சொன்னால் நான் இதை விட்டுவிட்டு அதை ஏற்றுக் கொள்வதாக சவாலே விட்டிருக்கிறேன். ஆனால் சத்தியாக்கிரகத்தின் மூலம் இந்தப் பிரச்சினை தீருமா என்பது கேள்வி. பெரும்பாலோர் உடைமையைத் துறந்து விட்டார்களா? துறக்கவில்லையென்பது தெரிந்த விஷயம். அப்போது ஒரு புறம் அரசாங்கத்தின் சட்டம் நெருக்க, மறுபுறத்தில் பெரும்பான்மையோரின்

ஆத்திரத்திற்கு ஆளாகி இதை நம்மால் செய்ய முடியுமா? அதற்கு சத்தியாக்கிரகம் என்றால் என்ன என்று நாம் செவ்வனே புரிந்துகொள்ள வேண்டும். பொது மக்கள் அபிப்பிராயம் உருவாகியிருந்தால் சத்தியாக்கிரகம் செய்யப் படலாம். அதை உருவாக்குவதற்காக மக்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லிப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அதன் பிறகும் சத்தியாக்கிரகம் செய்வதனால் அதைச் செய்வது யார், யாரை எதிர்த்துச் செய்வது, அதற்கு யாருடைய ஆதரவு இருக்க வேண்டுமென்பதும் முடிவு செய்யப்படவேண்டும்.

ஒன்றை சட்டம் ஒப்புக் கொண்டிருந்து, அதற்கு பொது மக்களின் ஆதரவும் இருந்து, அதை நிறைவேற்ற முடியாமல் இருக்கும் நிலையிலேயே சத்தியாக்கிரகம் செய்யலாம். தமிழ் நாடு, விதர்ப்பம் என்ற இரு பிரதேச ஊழியர்களுக்கும் அங்கே நிலச்சுவான்தார்கள் தம் நிலத்தைப் பயிர்செய்து வருவோரை அகற்றி வேறு ஆட்களை அமர்த்துகிறார்கள் என்று கேள்விப்பட்டதும் சத்தியாக்கிரகம் செய்ய அனுமதி கொடுத்துவிட்டேன்.

நான் இப்போது சொல்லி வருவது சத்தியாக்கிரகத்தின் நுண்ணிய பொருளை அல்ல. எனக்கு எதிர்மறையான, எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தினால் காரியம் ஆகுமென்று தோன்ற வில்லை. மாறாக, அதனால் இப்போது நமக்கு இருந்துவரும் பரந்த, பெருத்த ஆதரவையும் இழக்க நேரலாம்.

ஜூலை, 1964.

(2) நாம் சத்தியாக்கிரகம் செய்யாதது ஏன் என்று எண் ணிப் பார்க்க வேண்டும். ஒரு தத்துவத்தை எல்லோருமோ அல்லது குறைந்த பட்சம் பெரும்பான்மையோரோ ஒப்புக் கொண்டிருந்தும் மோகம் அல்லது ஆசாபாசம் காரணமாக அது அமுலாக்கப்படாதிருக்கையில் அந்த மோகத்தை அகற்றும் பொருட்டு சத்தியாக்கிரகம் செய்யப்படவேண்டும்.

ஆனால் நிலத்தை சமூக உடைமையாக ஆக்குவது என்ற கருத்தை இன்னும் எல்லோரும் ஒப்புக்கொண்டாகவில்லை. சுதந்திராக் கட்சி இதை எதிர்க்கிறது; ஜனசங்கமும் எதிர்க்கிறது. காங்கிரசும் நிறுவன ரீதியாக இதை எதிர்க்கவே செய்கிறது. பிற அரசாங்கங்கள் இதை ஆதரித்தால் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைப் போல இதற்கான சட்டமே செய்திருக்கும். ஆனால் அது அவ்வாறு செய்யவில்லை. அதிகப் பட்சமாக அது செய்திருப்பது உச்சவரம்பு ஏற்படுத்தியிருப்பது தான். அதையும் எல்லோரும் தம்மிடமுள்ள அதிக நிலங்களைப் பிரித்துக் கொண்டு விட்டார்களா என்று பார்த்து எவருக்கும் எத்தகைய சிரமும் நேராது என்று தெரிந்த பிறகே உச்சவரம்பை விதிக்கிறது. அதாவது, இது ஒரு மோசடி போலவே நடந்திருக்கிறது. எனவே எல்லோரும் இன்னும் ஒப்புக்கொள்ளாமல், பிரசாரம் செய்யப்படும் நிலையிலுள்ள ஒரு விஷயத்திற்காக எப்படி சத்தியாக்கிரகம் செய்ய முடியும்? இந்தக் காலத்தில் அடக்கமான முறையில் ஒன்றைச்செய்து காரியம் ஆகாதபோது அதை மேலும் அடக்கமாகவோ, அதுவும் பயன் தராத போது அதை இன்னும் அடக்கமாகச் செய்யவும்தான் வேண்டியிருக்கிறது. நாம் நில முதலாளி களிடம், 'நாங்கள் உங்கள் நிலத்தை உழுது பயிரிடுகிறோம். ஆனால் அதற்காக எங்களுக்கு ஊதியம் எதுவும் தரவேண்டாம்' என்று சொன்னால், 'இது என்ன பேச்சு, இது நடக்கக் கூடியதா?' என்றே அவர்கள் கேட்பார்கள். ஆகையால் இவ்வாறு சொல்லுவதற்கு அர்த்தமில்லை. அவர்கள் உங்களுக்கு நிலம் தரவேண்டும் என்பதுதானே உங்கள் விருப்பம்? இதற்கான மிகவும் அடக்கமான நடவடிக்கை என்னவென்றுதான் நீங்கள் யோசிக்கவேண்டும்.

உண்மையில் அந்த நடவடிக்கை ஏற்கனவே உங்களுக்கு தெரிந்தும் உள்ளது. கிராமதானத்தில் தொடங்கிய நாம் சுலப கிராமதானம் வரையில் வந்திருக்கிறோம். இப்போது நாம் செய்து வரும் வேலையே சத்தியாக்கிரகத்தில் ஒருவகை தான் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நாம் ஒரு

விஷயத்தையே வற்புறுத்தி, அதிலேயே முனைந்தவர்களாய், அதிலிருந்து வழுவாமல் அதையே செய்து வருகிறோமென்றால் அதுதான் சத்தியாக்கிரகம்.

'பூதானயக்ஞம்',
15-1-65

ஆலய சத்தியாக்கிரகம் செய்வது சரியா?

[தமிழ்நாட்டில் தெய்வ பக்தியுள்ள பிரபுக்கள், அரசர்கள் ஆகியோரால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய பெரிய கோவில்கள் மிகுதியாக இருப்பது யாவரும் அறிந்த விஷயம். அங்கே குக்கிராமங்களிலும் பெரிய கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களைப் பழுதுபார்க்கவும், நித்திய நைமித்தங்கள் (தினசரி பூஜை, விழாக்கள்) செய்யவும், சிப்பந்திகளின் நிர்வாகத்திற்கு உதவவும் என பழைய காலத்திலேயே ஒவ்வொரு கோயிலையும் சார்ந்து ஏராளமான நிலம் தானமளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிலமெல்லாம் அநேகமாய் காருவாரிகள் எனப்படும் ஏஜென்ட்கள் அல்லது நடுத் தரகர்களின் நிர்வாகத்தில் இருந்து வந்திருக்கின்றன. அவர்கள் அந்த நிலத்தை உழுது பயிரிடும் விவசாயிகளுக்குப் பல வகையான தொல்லைகள் கொடுத்து வந்திருக்கிறார்கள்; அந்த விவசாயிகளை உறிஞ்சி தன் வயிற்றை வளர்க்கும் அட்டைகளாகவே அவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இதனால் அந்த நிலங்களில் சரிவர விவசாயமே நடப்பதில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் நூறு கிராமங்கள் கிராமதானமான போது மேலே கூறிய கோயில்களின் நிலம், கிராமத்தில் நிலமிருந்தும் அங்கே வசிக்காமல் வெளியே நகரங்களில் இருந்து வருவோரின் நிலம் ஆகியவற்றின் பிரச்சினை எழுந்தது. ராஜ்ஜியத்தின்

முதலமைச்சரிடம் பின்வரும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டன:

1) மதுரை மாவட்டத்தில் தம் கிராமத்தில் தங்காமல் வெளியே இருந்து வரும் நில முதலாளிகளை தம் நிலம் முழுவதையும் கிராம சபையிடம் ஒப்புவிக்கச் செய்ய வேண்டும். இது செய்து முடிக்கும் வரையில் இடைக் காலத்தில் அந்த நிலங்கள் கிராம சபையிடம் குத்த கைக்கு விடப்பட வேண்டும்.

2) மடங்கள், கோயில்கள் ஆகியவற்றிற்குச் சொந்த மான நிலம் நேரே குடியானவர்களுக்கே நீண்டகாலக் குத்தகைக்குத் தரப்படவேண்டும். இவ்வாறு செய் வதனால் குடியானவர்கள் நிலத்தை நன்கு பண்படுத்தி பயிர்செய்வார்கள். பாய்ச்சல் வசதியில்லாத நிலங்களில் கிணறு தோண்டியும் வேறு வகையிலும் தண்ணீருக்கு ஏற்பாடு செய்து விளைச்சலைப் பெருக்க வகை செய் வார்கள்.

1965 மார்ச்சு 16, 17ந்தேதி விநோபா அவர்களிடம் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. இதற்கு அவர் பின்வரும் பதில் அளித்தார்.]

கிராமதானம்பற்றி நீங்கள் இரண்டு விஷயங்கள் சொல்லி இருக்கிறீர்கள். இங்கே கிராமங்களில் வசிக்காமல் வெளியே இருந்துகொண்டு கிராமங்களில் ஏராளமாக நிலம் வைத்திருப் பவர்கள் தம் நிலத்தை கிராம சபையிடம் குத்தகைக்குவிட்டு விளைச்சலில் தமக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உங்களுடைய கோரிக்கை மிகவும் நியாயமானது. இதன்பொருட்டு சத்தியாக்கிரகம் செய்யலாம் என்று நான் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. பாபா ஏதோ சத்தியாக் கிரகம் செய்யக்கூடாது என்று சொல்லுவதாகச் சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ளும்

ஷயத்தில் சத்தியாக்கிரகம் செய்யலாமென்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இவ்விஷயத்தில் நான் அரசாங்கத் டமும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதுவும் இந்தப் பிரச் னையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவது விஷயம் மடாதிபதிகளைப் பற்றியது. ன்பாக கிராமத்திடம் நிலத்தை விடுவதனால் அவர்களுக்கு வ்வித நஷ்டமும் நேராது. ஆனால் மடாதிபதிகள் மக்களை திகமாக நெருக்கி அதிகப் பங்கு பெறுவதாக என்னிடம் கார்கள் வந்திருக்கின்றன. தமிழ் நாட்டைப் பற்றி எனக்கு திகம் தெரியாது. பூரி-ஜெகந்நாதத்தைச் சேர்ந்த மடங்களின் லங்கள் விஷயமாக இத்தகைய புகார்கள் வந்தன. தை மடாதிபதிகளிடம் தெரிவித்தபோது, அவர்கள் தாம் மக்காக எதுவும் செய்யவில்லையென்றும், மடங்களில் வரவர து சன்னியாசிகளின் தொகை பெருகிவருவதால் அவர் ளுக்குச் செய்யவேண்டியுள்ள அன்னதானமென்ற புண்ணிய ரியத்திற்காகவே விவசாயிகளிடமிருந்து அதிகப் பங்கு றவேண்டி வருகிறதென்றும் சொன்னார்கள். மடாதிபதிகள் ம் செய்வது நியாயமென்பதை நிரூபிக்கவே இவ்வாறு ரணம் காட்டுகிறார்கள். சர்வோதயமண்டல் மடாதிபதி ளுடன் தொடர்பு கொண்டு, இந்த விஷயத்தை அரசாங்கத் ன் கவனத்திற்குக் கொண்டுவருவது எனக்கு மிகவும் சரி ன்று தோன்றுகிறது. இவ்விருவர் விஷயங்களிலும் மண்ட ன் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

-1-1965

———o———

11 சத்தியாக்கிரக வழி விளக்கம்

[1959 செப்டம்பர் 29, அக்டோபர் 1, 2 தேதிகளில் பூதான யாத்திரையினிடையே வினோபா அவர்களுக்கும் சர்வசேவா சங்கத்தின் தலைவரான திரு. மனமோகன் சௌத்ரி உள்ளிட்ட பிரமுகர்களுக்குமிடையே நிகழ்ந்த சத்தியாக்கிரக நடைமுறை பற்றிய உரையாடலே கீழே தரப்பட்டிருப்பது.]

பரந்த கொள்கையின்பொருட்டே சத்தியாக்கிரகம் செய்யலாம்

கேள்வி 1: நீங்கள் சத்தியாக்கிரகம் பெரிய அளவில் நடக்க வேண்டும், அணு ஆயுதங்களை எதிர்க்கக் கூடியதாய் இருக்கவேண்டுமென்கிறீர்கள். சிறிய சத்தியாக்கிரகங்களி லிருந்து பெரிய சத்தியாக்கிரகம் செய்யும் சக்தி பெறலாம் என்ற கருத்து எனக்கும் சரியென்று படவில்லை. ஆனால் எதிரில் ஏதோ அநியாயமோ, அக்கிரமமோ நடப்பது தெரிந்ததும் ஆபத்துக்கால தர்மமாகக் கருதி அதை எதிர்க்கவே வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய விவகாரங்களில் எம்மாதிரியான சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்? பரந்த, பெரிய சத்தியாக்கிரகத்திற்கு ஆயத்தம் செய்வதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, இம்மாதிரியான பிரச்சினை களில் கவனம் செலுத்துவது ஊழியர்களின் கடமை ஆகுமா?

வினோபா: உலக நோக்குடன் செய்யும் சத்தியாக் கிரகம் பரந்த அளவிலேயே செய்யப்படவேண்டுமென்பதல்ல. மிகவும் குறுகிய அளவில் செய்யப்படும் சத்தியாக்கிரகமும் பரந்த நோக்குள்ளதாயிருக்கலாம். ஒரு பெண் பலாத்காரத் திற்கு உள்ளாவதாக வைத்துக்கொள்வோம். அந்நிலையில் அதை எதிர்ப்பதற்காக, தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் சத்தியாக்கிரகத்தின் விளைவும், தன்மையும் உலகெங்கும் பரவக்கூடியதாயிருக்கலாம். காரணம், இந்தச்சிறு நிகழ்ச்சி

யோடு பிணைந்துள்ள கொள்கையின் தீவிரம் உலகம் முழுவதையும் பாதிக்கக்கூடியதாயிருப்பதுதான்.

என்னிடம், 'ஏதோவொரு இடத்தில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் அமுலாக்கப்பட்டபோது அங்கே குடியிருந்தவர்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டியிருந்தது. அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டது. அவர்களது பழைய குடியிருப்புக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கிரயம் என்னவோ சரியாயிருந்தபோதிலும் அந்தப்பணத்தைக் கொண்டு அவர்களால் புதிய வீடுகள் கட்டிக்கொள்ள முடியவில்லை. மேலும், அவர்கள் தம் வீடுகளை விற்கவேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் அவைகளிலேயே இருந்திருக்கலாம். இந்நிலையில் என்ன செய்வது?' என்று கேட்கப்பட்டது. நான் அவர்களுக்குத் தம் வீட்டைவிட்டு வெளியேறவேண்டாம் என்று யோசனை சொன்னேன். இதில் எந்தக் குடிமகனையும் அவன் இருக்குமிடத்தை விட்டு வேறு இடத்திற்கு அரசாங்கம் போகச் சொல்லுமானால் அவனுக்கு அதற்கு வேண்டிய வசதி செய்து தந்தாக வேண்டுமென்ற கொள்கை அடங்கியிருக்கிறது. அவனுக்கு அதுவரையில் இருந்துவந்த அதே வசதிகளாவது புதிய வீட்டிலும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

வங்காளத்தில் வந்த பஞ்சத்தில் 10-15 லட்சம்பேர் உணவில்லாமலே மடிந்து போனார்கள். அந்த சமயத்தில் சிலராவது தம்மிடமுள்ள உணவு தானியத்தையும், பணத்தையும் அவை இல்லாத மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டும், தம்மிடம் எதுவுமே இல்லாத நிலையில் உபவாசம் இருக்கத் தொடங்கியும் இருந்தால், அவர்கள் செய்தது மிகவும் சிறந்த சத்தியாக்கிரகமாக இருந்திருக்கும். அப்போது நாங்கள் சிறையில் இருந்தோம். ஆனால் நான் அது பற்றி இவ்வாறுதான் எண்ணிக்கொண்டிருந்தேன்.

கேள்வி 2 : அப்படியானால் எந்தச் சிறிய நிகழ்ச்சியிலும் பெரிய தத்துவமொன்று அடங்கியிருக்குமாகையால் அதைக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்யலாமென்று சொல்லுகிறீர்களா ?

வினோபா : நான் அவ்வாறு சொல்லவில்லை. எல்லா நிகழ்ச்சிகளிலுமே கொள்கை அல்லது தத்துவம் ஏதோ பொதிந்திருக்குமென்று சொல்லுவதற்கில்லை. ஓரிடத்தில் ஒரு புதிய கால்வாய் வந்து நீர்ப்பாசனத்திற்கு வசதி ஏற்பட்டதனால் அங்குள்ள வயல்களுக்கு நீர்ப்பாசனவரி விதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டதாய் வைத்துக்கொள்வோம். ஆனால் மக்கள் அந்தவரியைச் செலுத்த மறுத்தால் அது ஏதோ பெரிய கொள்கைக்காக வரி செலுத்த மறுத்ததாகாது. வரி அதிகமாயிருந்து, அதைக் குறைக்கச் செய்ய வேண்டுமானால் அதன் பொருட்டு சட்ட பூர்வமான இயக்கம் நடத்தலாமே தவிர சத்தியாக்கிரகம் செய்யக்கூடாது.

வரி ஏற்றம், விவசாயிகளை வெளியேற்றுதல் ஆகியவைகளுக்காக சத்தியாக்கிரகம்

கேள்வி 3 : மக்களின் கருத்தைக் கேளாமலே வரி விதிக்கப்படுமானால் அவ்வாறு செய்தது தவறு என்ற காரணத்திற்காக சத்தியாக்கிரகம் செய்யலாமா ?

வினோபா : ஜனநாயக ஆட்சியில் முடிவு எதையும் சட்டசபையே செய்யும்போது மக்களின் சம்மதத்துடன் எல்லாம் செய்யப்படுவதாகவே கொள்ளவேண்டும். ஆனால் வரிவிதித்தல் ஏற்கெனவேயுள்ள வரியை அதிகமாக்கும்போது அரசாங்கம் அதுபற்றி முதலில் விசாரணை நடத்தவும், விஷயமறிந்தவர்களின் கமிட்டி அமைத்து அதன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத நிலையில், அதை செய்விப்பதற்காக சட்டரீதியான நடவடிக்கை

வேண்டுமே தவிர, சத்தியாக்கிரகம் செய்யக்கூடாது. இதில் அடிப்படையான கொள்கைப் பிரச்சினை எதுவுமில்லை. இது நடைமுறை, அல்லது முடிவு எவ்வாறு செய்யவேண்டும் என்பது பற்றியதேயாகும்.

கேள்வி 4 : நில வெளியேற்றம் அல்லது அதைப் போன்ற வேறு அநியாயங்கள் நடக்குமிடங்களில் பரந்த, பெரிய வேலைத்திட்டங்களை விட்டு இந்தச் சிறிய பிரச்சினை களுக்காக ஊழியர்கள் போராடுவது சரியா, தவறு என்றே நான் கேட்டேன்.

விநோபா : நான் உத்திரப்பிரதேசத்திலும் பீகாரிலும் விவசாயிகள் தாம் பயிர் செய்து வரும் நிலத்திலிருந்து வெளி யேற்றப்படுவார்களாயின் தம் உயிர் போவதானாலும் அவர்கள் தம் நிலத்தை விடக்கூடாதென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். விவசாயிகள் தம் உயிரையும் பொருட் படுத்தாது போராடச் சித்தமாய் இருந்து, தத்துவத்தை நன்கு புரிந்து கொண்டும் நிலைமை முழுவதும் கட்டுக்கு அடங்கியும், இயக்கம் நடத்துகையில் இம்சை தலையெடுக்கா தென்று ஊழியர்களுக்கு நிச்சயமாயுமிருந்தால், அவர்கள் இதை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யலாம். ஆனால் இப் பொழுதோ நிலைமை அவர்கள் வசத்தில் அடங்கியிருப்பதாகத் தெரியவில்லை. இன்று நம் நாட்டிலும் முதலாளிகள் மலிந்த பிறநாடுகளிலும் பத்திரிகைகளுக்கு மிகுந்த சக்தியிருப்பதால் அவை ஒன்றை வேறொன்றாகத் திரித்துச் செய்திகளை வெளியிட முடிகிறது. ஒருவர் ஒரு நடவடிக்கை எடுத்து அதைப் பத்திரிகைகள் ‘கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி’ என்ற தலைப்பில் வெளியிட்டுவிட்டால் அதற்கு அதுவரையிலிருந்த ஆதரவு முழுவதும் போய்விடும். நம் கருத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல நம்மிடம் சாதனம் என்ன இருக்கிறது? பாத யாத்திரை செய்ய வேண்டும், பத்திரிகைகள், புத்தகங்கள் மூலமாக கருத்தை எங்கும் பரப்ப வேண்டுமென்று நான் சொன்னேன். இதைச் சரியாகச் செய்திருந்தால், இதற்

கான எல்லாஏற்பாடுகளும் நடந்திருந்தால் நமக்கு மக்களுடன் நேரிடையான நெருங்கிய தொடர்பு கொள்ள ஒரு வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை. சுயராஜ்யத்திற்காக இயக்கம் நடந்தபோது அதை ஆதரித்த பாவத்திற்காக சில பத்திரிகைகள் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாயின; ஆயினும் பொருட்படுத்தாமல் அவை காந்தியடிகளின் இயக்கத்தைத் தீவிரமாய் ஆதரித்துவந்தன. இப்போது நிலைமை மாறிவிட்டது.

கேள்வி 5: நிலவெளியேற்றம் போன்ற ஒரு பிரச்சினைக்காக இந்தியா முழுவதிலும் சத்தியாக்கிரகம் செய்வதனால் பயனொன்றுமில்லை என்பதைநான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஓர் ஊழியரின் கண் முன்னேயே இவ்வாறு அநியாயம் நடக்கையில் அதை எதிர்த்து நடவடிக்கை எடுத்தல் அவரது கடமையாகாதா?

விநோபா: இம்மாதிரியான சொந்த விவகாரங்கள் அல்லது நிகழ்ச்சிகளுக்காக ஒருவர் ஏதேனும் செய்ய விரும்பினால் இறுதியில் litigation அல்லது கோர்ட்டு விவகாரத்தில் சிக்குவார், கைதியாவார், வழக்கு நடக்கும். ஆகையால் இம்மாதிரியான நிகழ்ச்சிகளுக்குப் பரிகாரம் சட்டரீதியான முறைகளைக் கையாள்வதே ஆகும். பத்திரிகைளுக்கு எழுதுவது, சட்டசபை அங்கத்தினர் ஆகியோரிடம் தெரிவிப்பது ஆகிய முறைகள்தான் இருக்கின்றனவே.

கேள்வி 6: ஓர் ஊழியர் தொண்டு புரிந்துவரும் பகுதியில் அல்லது ஐந்தாறு கிராமங்களில் விவசாயிகளிடம் இருந்து நிலம் பிடுங்கப்பட்டு புதிய ஆட்களிடம் கொடுக்கப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்நிலையில் இந்தப் பிரச்னையை எடுத்துப்போட்டுக்கொள்வது ஊழியரின் கடமை ஆகாதா?

விநோபா: ஏதோவொரு நோக்கத்திற்காக, பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு நாடு முழுவதிலும் இயக்கம்

நடந்துகொண்டும், ஊழியரும் ஊரூராய்ச் சென்று மக்களுக்கு அதை விளக்கிச் சொல்லிக்கொண்டுமிருக்கையில் ஏதோ ஓர் இடத்தில் அதே பிரச்சினைக்காக சத்தியாக்கிரகம் தொடங்கப் படுமானால் அது அங்கே பயனளிக்கும். நான் ஒரிசாவுக்குப் போனதுமே எனக்கு 3000 தொண்டர்கள் வேண்டுமென்று கோரியது ஏன்? ஊழியர்கள் ஓயாது சுற்றிக் கொண்டும், மக்களோடு தொடர்புகொண்டுமிருக்கையில் அவர்களோடு ஒரு வகையான உறவு இருந்துவரும். எங்கும் இதைப்பற்றியே பேச்சாக இருக்குமாகையால் இம்மாதிரியான அக்கிரமங்கள் நடப்பது குறையும். ஒருக்கால் எங்கேனும் நிகழ்ந்தாலும் அதற்கு உடனே பரிகாரம் செய்யப்பட்டுவிடும். எங்கே என்ன நடக்கிறது என்று எல்லோருக்கும் உடனுக்குடன் தெரிந்து கொண்டிருக்குமாகையால் தப்பபிப்பிராயங்கள் பரவுவதற்கு இடமில்லாது பார்த்துக்கொள்ளப்படும். இல்லையேல் என்ன ஆகும்? சத்தியாக்கிரகம் நடத்துவோர் பிரசித்தமான தலைவர்களாய் இராராகையால் அவரைப்பற்றி இல்லாததும் பொல்லாததுமான செய்திகள் பரப்பப்படவே, அவரால் எதுவுமே செய்யமுடியாமற் போகும்.

கேள்வி 7: அப்படியானால் இயக்கத்திற்கான பரந்த ஏற்பாடு வேலைகளில் ஈடுபடவேண்டுமே தவிர இம் மாதிரியான சிறிய, நேரிடையான சத்தியாக்கிரக நடவடிக்கை களில் இறங்கக்கூடாதென்றாகிறது. பொதுவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியோ, சட்டரீதியான காரியங்கள் செய்தோ, மக்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லியோ சக்தியை வளர்ப்பதோடு நிற்கவேண்டுமென்றாகிறது. இவ்வாறு மக்கள் சக்தி வளர்ந்து, அவர்கள் தாமே எதிர்க்க முன் வருகையில் ஊழியர்கள் பின்னே இருந்துகொண்டு தம் ஆதரவையும் அனுதாபத்தையும் காட்டி வரவேண்டும்; ஆனால் தாமே முன்நின்றுகொண்டு எதுவும் செய்யக்கூடாது என்பது தானே உங்கள் கருத்து?

மூன்றுவகையான காரியங்களும் சாந்திசேனை அமைத்தலும்

விநோபா : ஆம். நீங்கள் நினைப்பது சரிதான். இந்த வேலையை மூன்று வகையில் செய்யலாம் :

(1) ஆன்ம பலம் கொண்டு செய்வது;

(2) பரந்த மக்கள் தொடர்பினால் சாதிப்பது;

(3) சட்ட ரீதியான நடவடிக்கைகளின் மூலம் நிறைவேற்றுவது.

ஆன்ம பலங்கொண்டு செய்ய பிரம்மஞானம் பற்றிச் சொல்லி வருகிறேன். பிரம்மஞானம் எல்லோருக்கும் இராது. அதைப் பயன் படுத்த எல்லோராலும் ஆகாது என்பது சரிதான். ஆனால் ஒருவர், இருவர் பிரம்மஞானிகளாய் இருந்தாலும் காரியத்தை நிறைவேற்றி விடுவார்கள். ஆனால் நான் இதோடு நிறுத்தாமல் பேரளவில் மக்கள் தொடர்பும் பெற வேண்டுமென்று சொல்லி, அதன் பொருட்டு 75 ஆயிரம் சாந்தி சைனிகர்கள் வேண்டுமென்றும் கோரியிருக்கிறேன். மூன்றாவது வழி சட்டரீதியான நடவடிக்கை. இவை மூன்றையும் தவிர வேறு நமக்கு என்னதான் வழியிருக்கிற தென்று நீங்களே சொல்லுங்களேன். ஆனால் இன்றோ நமது சிந்தனையே, கருத்துக்களே சிதறுண்டு கிடக்கின்றன. சர்வசேவா சங்கமும் இதைச் செய்யலாமா, அதைச் செய்ய லாமாவென்று பலவிதமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. மக்களோடு தொடர்பு கொண்டு பழக உதவக்கூடியது என்ற கருத்தில் நான் வீடுதோறும் சர்வோதயப்பாத்திரம் வையுங் களென்று சொன்னேன். ஆனால் அதுவும் சரியாக முன்னேறி வருவதாய்த் தெரியவில்லை. எல்லோரும் சேர்ந்து ஏதோ வொரு வேலையில் ஈடுபட்டால் அதன் மூலம் நம் சக்தி வெளியாக இடமிருக்கும். ஆனால் இன்றோ நாம் அவ்வாறு எதுவும் செய்யாமல் பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்டு,

சக்தியை விரயம் செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஊழியரும் தாம் இருந்து பாடுபடும் பகுதியில் குறைந்தது 100 சர்வோதயப் பாத்திரம் வைக்க முயலவேண்டுமென்று நான் யோசனை கூறியது ஏன்? இதன் மூலம் ஒவ்வொரு ஊழியருக்கும் அத்தனை வீட்டாருடனுவது பழக்கம் உண்டாகும் என்பதனுல் தான்.

தம் நிலத்தை பூதானமாகத் தருவதைவிட தம் வீடுகளில் சர்வோதயப்பாத்திரம் வைத்து, அதில் தினமும் தம்வீட்டுக் குழந்தையின் கையினுல் ஒரு பிடி அரிசி போடச்செய்வது எவ்வளவோ சுலபம். இதையும் விட எளிய காரியமொன்று எவருக்கேனும் தோன்றினுல் அதை ஏற்றுக் கொள்வதிலும் எனக்குத் தடை இல்லை. இதன் மூலம் மக்களின் சொந்த முயற்சியினுல் காரியம் நடக்க வேண்டுமென்ற நம் நோக்கம் நிறைவேறுகிறது. மேலும், நிர்மாணவேலைகளுக்கு அரசாங்கம் உதவ முன்வருமானுல் அதை ஏற்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் சாந்திசேனை அமைக்கிறோமே அது ஏதேனும் வேலை செய்யுமா செய்யாதா? அதனிடம் ஏதோவொரு வகையான நிர்மாண வேலை ஒப்புவிக்கவேபடும். இவ்வாறெல்லாம் யோசியாமல் நாம் நம் சக்திக்கு மீறிய பல காரியங்களை ஒரே சமயத்தில் எடுத்துப் போட்டுக் கொள்ளுகிறோம். இதனுல் நம்மால் கருத்து முழுவதையும் செலுத்தி எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாதிருக்கிறது. எதையும் ஒரு மனப்பாங்குடன் செய்தால்தான் அது வளர்ந்து பெருகும் என்பதையே நாம் உணரவில்லை.

கேள்வி 8: அதாவது, நாம் நம் சக்தியை உணராமல், அதை மீறிய காரியங்களைச் செய்யப் புகுந்திருக்கிறோம் என்கிறீர்கள்.

விநோபா: ஆணிவேர் போன்ற எந்தவொரு காரியத்தைச்செய்கையிலும் அதனுலேயே மற்ற எல்லாவேலைகளும்

தாமே நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை என்கிறேன்.

கேள்வி 9 : உதாரணமாக, சுயராஜ்ய இயக்கம் நடத்திய காலத்தில் நம்முன் எத்தனையோ பிரச்னைகள் எழுந்தும், நாம் அவைகளிலெல்லாம் கருத்தைச் செலுத்தாமல் சுயராஜ்யம் வந்துவிட்டால் அவைகளையெல்லாம் தீர்க்க வழிகள் பிறக்கும், சக்தியும் வரும் என்று எண்ணியதுபோல. அதாவது, இந்த பலவகையான பிரச்னைகள் சுயராஜ்யத்தின் அவசியத்தைக் கருதுகையில் அவ்வளவு முக்கியமல்ல என்று எண்ணி, சுயராஜ்யத்திற்காகவே பாடுபட்டதைப்போல இப்பொழுதும் இந்த (கிராமதான) வேலையில் முனைய வேண்டுமென்கிறீர்கள்.

வினோபா : ஆம் அதுவேதான்.

கேள்வி 10 : நீங்கள் ஆக்கமுறையில் செய்யும் சத்தியாக்கிரகத்தைப் பற்றிச் சொல்லுவதற்கே பலர் எதிர்ப்பு அல்லது எதிர்மறை சத்தியாக்கிரகம் என்று பொருள் செய்து கொள்ளுகிறார்களே ?

வினோபா : அதாவது தமக்கு இருந்த ஒரு வழியையும் வினோபா அடைத்துவிட்டார், நம் கையிலிருந்த ஒரு ஆயுதத்தையும் வினோபா பறித்துக்கொண்டுவிட்டார் என்கிறீர்கள். திரிலோகசந்த் அவர்கள் கிராமராஜ்ய சம்மேளனத்தில், 'வினோபாவுக்கு வெளுத்ததெல்லாம் பால், அவருக்கு எவரிடமும் ஒரு குறையும் தென்படுவதில்லை. இதனால் அவர் எவரையும் கண்டிக்கமாட்டார்' என்றார். அவர் சொன்னதன் தாத்பரியம், 'Vinoba is too good to be useful—அவர் மிகவும் நல்லவராய் இருப்பதால் அவரால் ஒரு காரியமும் செய்யமுடியாது. அவர் நமக்குப் பயன்படமாட்டார்' என்பது. இறுதியில் அங்கே இதுபற்றி வெகுவாகப் பேசப்பட்டது. எல்லோரையும், மேலும் நன்கு யோசித்துக் காரியம் செய்யு

மாறு சொல்லி இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது.

இப்போது பாபூ உயிரோடு இருந்தால் அவர் நமக்கு சத்தியாக்கிரகம் செய்ய அனுமதியளித்திருப்பாரென்று சிலர் நினைக்கிறார்கள். பாபூ இருந்திருந்தால் அவரது சிறப்பான குண விசேஷங்களினால் நிலைமையே வேறுவிதமாக மாறியிருக்கும் என்பது உண்மைதான். ஆனால் அவர் இம்மாதிரி எதற்கும் அனுமதியளித்திருப்பாரென்று எண்ணுவதே தவறாகும். அவர் தமது பழைய சகாக்களான ராஜாஜி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் எந்த இயக்கத்தையும் தொடங்கியிருப்பாரென்று என்னால் எண்ணவே முடியவில்லை. சத்தியாக்கிரகத்திற்குத்தான் அவர் எத்தனை விதமான நிர்ப்பந்தங்கள், நிபந்தனைகள் விதித்து வந்தார்! அவர் விரும்பாதது, எதிர்பாராதது ஏதேனும் நடந்துவிட்டால் போதும், உடனே இயக்கத்தை நிறுத்தி வந்தார். சிறையிலிருந்தபோது அவரது ஆசிரம உறுப்பினர் ஒருவர் வேலை செய்யவில்லை, தட்டி கழிக்கப்பார்த்தார் என்று தெரிந்ததும் பாபூ சத்தியாக்கிரக இயக்கத்தையே நிறுத்தி விட்டார். இதை அப்போது எவ்வளவுபேர் எதிர்த்தார்கள்! ஜவஹர்லால் அவர்களும் இந்த ஹரிஜன இயக்கம் வந்து நம் சக்தியையே சிதற அடித்துவிட்டது, நம்மை எதுவும் செய்ய முடியாமல் செய்துவிட்டது என்றார். பாபூ தாம் செய்யும் எதையும் தீர ஆலோசித்து, அதனால் விளையக்கூடிய லாப நஷ்டங்களை நன்கு கணக்கிட்டபிறகே செய்வார். ஆனால் நான் அவ்வாறு செய்வதில்லை. இறுதிக் காலத்தில் அவர் மனம் எவ்வாறு இயங்கிற்று, அவர் என்னென்ன எண்ணிக் கொண்டிருந்தார் என்பதைப் பியாரேலால் அவர்கள் தமது Last phase (இறுதிக்கட்டம்) என்ற புத்தகத்தில் ஒருவாறு வர்ணித்திருக்கிறார்.

கேள்வி 11 : ஆக்கமுறையில் செய்யும் சத்தியாக்கிரகத்தைப் புரிந்துகொள்ள இயலாதவர்களுக்கு அதைப் புரிய வைப்பது எப்படி?

வினோபா: நான் அடக்கமானது, மேலும் அடக்க மானது, மிகமிக அடக்கமானதென்று சத்தியாக்கிரகத்தை மூன்று வகையாகப் பகுத்துச் சொல்லியிருக்கிறேன். அதைப் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே தவிர எவரும் அதிகம் எதிர்க்கவில்லை. இம்சைப் போர் முறையில் அதைக் கடுமையாக்குவது, மேலும் கடுமையாக்குவது அதைவிடக் கடுமையாக்குவது அதாவது தடி, கம்புகளினால் காரியம் ஆகாவிட்டால் துப்பாக்கியையும், அதுவும் பயன்படாதபோது பீரங்கியையும் பிரயோகிப்பதைப்போல நாம் நம் முறையை மேன்மேலும் அடக்கமாக்குகிறோம்.

இதன் விளைவு எனக்குக் காஷ்மீரத்தில் தெரிந்தது. நான் அங்கே போனதும் காலை உணவை நிறுத்தினேன். இதனால் என்னவாகப்போகிறதென்று அப்போது என்னிடம் கேட்கப்பட்டதற்கு நான் 'செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் என்ன பயன் என்று கேட்பது மேலெழுந்தவாரியாகப் பார்ப் பவர்கள் கேட்பதாகும். நான் இதைச் செய்திருப்பது ஆன்ம சுத்தி கருதி, என்று பதில் சொன்னேன். நான் இவ்வாறு செய்ததனால் காஷ்மீர யாத்திரையில் நல்ல பயன் விளைந்ததை அனுபவத்தில் அறிந்தேன். நான் இப்போது இருப்பது காஷ்மீரத்திலாகையால் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும், சிறிதும் கவனக் குறைவு கூடாது என்பதை ஒரு கணமும் மறக்கவில்லை. இதனால் மக்கள் மனமும் மாறிவருவதை அறிந்தேன்.

பிறகு சில நாட்களுக்கெல்லாம் பீர் பஞ்சாலென்ற மலையைக் கடக்கும் பேச்சு எழுந்தது. அப்போது இரு முதலமைச்சர்களிடமிருந்தும் அந்த வழியே போகவேண்டாம் என்று எனக்கு அறிவிப்புக்கள் வந்தன. என்னுடன் வந்து கொண்டிருந்த சுமார் பத்து பேர் அடங்கிய கோஷ்டியிடம், 'நான் அவ்வழியே போகக்கூடாதென்றால் அதைக் கடவுளின் திருவுள்ளமென்று கருதி இங்கிருந்து இப்படியே பஞ்சாபுக்குத் திரும்பி விடுகிறேன்' என்றதும் பீர்பஞ்சால் வழியே போவ

தென்று முடிவாயிற்று. ஆனால் எல்லா சாமான்களையும் மற்றவர்கள் தூக்கி வந்தார்கள். நான் செய்தது குதிரை நாட்களில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு இறுதியில் வெளவாமை விரதத்தைக் கடைப்பிடித்து எங்களுடன் வந்து கொண்டிருந்த சாமான்களை மேன்மேலும் குறைப்பதென்றும் கையை வீசிக்கொண்டு நடந்தாலென்னவென்று எண்ணினேன். நாம் உடலுழைப்பை எப்பொழுதும் மிகவும் வற்புறுத்தி வருவதால், நடப்பதோடு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளை எடுத்துக்கொண்டு நடப்பதென்றும் முடிவாயிற்று.

29-9-59

காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் எதிர்ப்பு முறையில் அமைந்தது ஏன்?

கேள்வி - 12 : காந்தியடிகளின் காலத்தில் நடந்த சத்தியாக்கிரகங்கள் எதிர்ப்புத் தன்மையவையாயிருந்தன. அவற்றில் அடங்கியிருந்த அம்சங்களில் ஒன்று மக்களுக்கு எதைக்கண்டாலும் கிலியாய் இருந்ததனால் அந்தக்கிலியைப் போக்குவதற்காக ஏதேனும் செய்ய வேண்டுமென்று நினைத்த தாகும். மக்கள் மனதில் வெளியே தெரியாது இருந்து வந்த துவேஷம் எந்த சமயத்திலும் வெடித்து எழலாம் என்று அஞ்ச வேண்டிய நிலைமை அப்போது இருந்தது. அந்நிய ஆடைகளைக் கொளுத்துவதன் அவசியத்தை வற்புறுத்துவதற்கு அவர் கூறிய காரணங்களுள் ஒன்று, 'நான் அந்நிய துணிகளைக் கொளுத்தச் சொல்லி இராவிட்டால் மக்கள் அந்நியர்களையே, வெள்ளையர்களையே கொளுத்தியிருப்பார்கள்' என்பதாகும். காந்தியடிகள் மனத்தில் ஆங்கிலேயர்களிடம் மிகுந்த அன்பே இருந்தது. ஆனால் நமக்கு அத்தகைய அன்பு சிறிதும் இல்லை. இதனால் அவர் ஆக்க முறையிலமைந்த (positive) சத்தியக்கிரகத்திற்கும் எதிர்ப்பு அல்லது எதிர்மறை(negative)ப் பயனே விளைந்தது. இதைத்

தவிர அவரது சத்தியாக்கிரகத்தில் வேறு எதிர்ப்பு அம்சம் இருந்ததுண்டோ?

விநோபா: இதில் ஐந்து அம்சங்கள் அடங்கியிருக் கின்றன. அவற்றுள் இரண்டை நீங்கள் ஒன்ருய் இணைத்து விட்டீர்கள். முதல் விஷயம் நம் மக்களுக்கு கிலி பிடித்திருந் தமையால் அந்தக்கிலியை அகற்றி அவர்களை அஞ்சாநெஞ்சர் களாக ஆக்கும். அதே சமயத்தில் பெரிய வீரர்களாக ஆக்கு வதும் நடக்கக் கூடியதல்ல. இதனுல் இடையிலுள்ள எதிர் மறை சத்தியாக்கிரக வழி ஒன்று கிடைத்தது நல்லதாயிற்று. இரண்டாவது, நாட்டில் terrorists என்ற பயங்கரவாதிகள் வேறு இருந்தார்கள். அவர்கள் உண்மையான தேசபக்தர் களாகையால் அவர்களை சரியான வழிக்குத் திருப்பும் வேலை யும் இருந்தது. நீங்கள் மனிதர்களை எரிப்பது பற்றிச் சொன் னீர்களே அதை இந்த பயங்கரவாதிகள்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் இவை இரண்டையும் ஒன்ருய்ச் சேர்த்து விட்டீர்கள்.

மூன்ருவது அம்சம் அவர், மருந்தோடு பத்தியத்தை இணைப்பதைப் போல சத்தியாக்கிரகத்தோடு நிர்மாண வேலைத்திட்டத்தைச் சேர்த்ததாகும். அவர் அடிக்கடி நாம் நிர்மாண வேலைத்திட்டத்தை மட்டும் நிறைவேற்றிவிட்டால் சத்தியாக்கிரகத்திற்கே அவசியமிராது என்று சொல்லி வந்தார். இது தொல்லைகளுக்குத்தப்பும் வழியாய் அமைந் தது.

நான்காவது அம்சம், சுயராஜ்யம் பெற்ருகவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். சுய ராஜ்யம் பெறும் பொருட்டு ஆயுதம் தாங்கிப் போர் புரிவதிலும் தவறில்லையென்று எண்ணப்பட்டுவந்தது. இதனுல் ஆயுதப் போருக்குப் பதிலாக எதிர்மறை சத்தியாக்கிரகமென்ற ஒரு வழி கிடைத்தபோது அது ஆயுதப்போரைவிட எவ்வளவோ சிறந்தது என்று எண்ண முடிந்தது.

ஐந்தாவது அம்சம் அவருக்கு ஆங்கிலேயரிடம் நம்பிக்கை இருந்தும் அவர்கள் நடத்திய ஆட்சியில், அந்த ஆட்சியை நடத்தி வந்தோரிடம் நம்பிக்கை போய்விட்டது. தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்தில் அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் புகழ் மாலே சூட்டி வந்தார். இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு 1916-17ல் கிடைத்த சீர்திருந்தத்தை அவர் disappointing - ஏமாற்றமளிப்பது என்று சொல்லவே சம்மதிக்கவில்லே. அவர், 'எனக்கு இது ஏமாற்றமளிப்பதாயிருந்தால் நான் இதோடு ஒத்துழைக்க மறுக்க வேண்டியிருக்கும்' என்று சொல்லி இராணுவத்திற்கு ஆட்களேத் திரட்ட முற்பட்டார்.

இந்த மூன்று காரியங்களிலும் லோகமான்ய திலகருக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமை உண்டாயிற்று. திலகர் காந்தியடிகளிடம், 'நீங்கள் நான் விதிக்கும் நிபந்தனேயின்படி இராணுவத்தில் ஒரேயொரு ஆளேச் சேர்க்க முடிந்துவிட்டாலும் உங்கள் இஷ்டம் போல், செலவு செய்ய நான் 10,000 ரூபாய் தருகிறேன், என்று பணயம் வைத்து சவால் விட்டார். திலகர் விதித்த நிபந்தனே நமது இந்திய சிப்பாய்களுக்கும் வெள்ளேயர்களுக்குக் கொடுப்பது போலவே இராணுவத்தில் உயர்ந்த பதவிகள் கொடுக்கப்பட வேண்டுமென்பது. காந்தியடிகள், இவ்வாறு நிபந்தனேகள் விதிப்பது சரியல்ல. நாம் ஒரு சிலரே நிபந்தனே எதுவுமின்றி அரசாங்கத்திற்கு உதவ முன்வந்தாலும் அதிலிருந்து நம் சக்தி வளரும் என்று வாதித்தார்.

ஆனல் ஜாலியன் வாலாபாக் படுகொலே நடந்ததும் காந்தியடிகளுக்கும் அரசாங்கத்தின் மீது அதுவரை இருந்த நம்பிக்கை போய்விட்டது. அதிகாரிகளின் நேர்மையை நம்ப மறுக்கலானுர். இதற்கு முன்போ பூரண சுயராஜ்யம் வேண்டுமென்று சொல்லவும் அவர் தயங்கினுர். அதிகாரிகளிடம், ஆட்சியாளரிடம், அவர்களின் நேர்மையில் அவருக்கு நம்பிக்கை நீங்காதிருந்தால் அவர் வேறு வகையில் வேலே

செய்திருப்பார். அவர் ஒருசமயம் என்னிடமே, 'அவ்வாறு ஆகியிருந்தால் நான் சம்பரானில் செய்ததைப் போல நிச்சயமாய் அநியாயமென்று தெரியும் கொடுமைகளை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்திருப்பேன். அதை ஆங்கிலேயரும். ஆட்சேபித்திருக்க முடியாது' என்ருர். ஆனுல் அவ்வாறு நடவாமையால் அவர் வேறு வழியில் சென்ருர். அதில் அவருக்குப்போதுமான வெற்றியும் கிடைத்தது. எதற்கும் அஞ்சிக் கொண்டிருந்த மக்கள் சட்ட ரீதியான எதிர்ப்புச்செய்ய முன் வந்தார்கள்.

இதற்கு முன்பு முகம்மது நபியும் மக்களின் கோழைத் தனத்தை நீக்க சோதனைகள் செய்ததுண்டு. தொடக்கத்தில் அவர் படையெடுப்பை எதிர்க்க ஆயுதம் தாங்கிப் போரிட அனுமதிக்கவில்லை. ஆனுல் தமது சீடர்கள் அடி பொறுக்காது ஓடுவதைக் கண்டதும், தற்காப்புக்காக ஆயுதம் தாங்குவதை அனுமதித்துவிட்டார். பிறகு அதை வைத்துக்கொண்டு சமயத்தைப் பரப்பவும், பாதுகாக்கவும் (defensive), படையெடுக்சவும் (offensive) இறுதியில் புதிய நாடுகளைப் பிடிக்கவும் என்று போர்கள் பல நடத்தப்பட்டன. எதிர் மறையான சத்தியாக்கிரகத்தோடு நின்றிருந்தால் இவ்வாறெல்லாம் நடக்கவாவது இடமில்லாது போயிருக்கும்.

இரண்டாம் விஷயத்திலும் அவர் ஓரளவுக்கு வெற்றி பெற்ருர். அதாவது பயங்கரவாதிகளும் அவர் வழிக்கு வர ஆரம்பித்தார்கள். அவர்களில் பலர் தம்மால் எதுவும் செய்ய முடியாதிருந்த நிலையிலும் காந்தியடிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்போமென்றே தாம் எதுவும் செய்யாதிருப்பதாகத் தம்மையே தேற்றிக்கொண்டார்கள். எஞ்சிய பயங்கரவாதிகள் 1947-ல் நடந்த சமயப் பூசலின்போது தம் உண்மை சொரூபத்தைக் காட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். அப்போது அவர்களின் சமயப்பித்தமும் வெளியாயிற்று.

ஆட்சியாளரிடமே அவநம்பிக்கையே தவிர, ஆங்கிலேயரிடமல்ல

கேள்வி 13 : காந்தியடிகளுக்கு ஆங்கிலேயஆட்சியாள ரிடம் நம்பிக்கை இல்லையே தவிர ஆங்கிலேயரை நம்பவே செய்தார் என்று சொல்லப்படுவதை நன்கு விளக்குங்கள்.

விநோபா : அவர் முதலில் ஏகாதிபத்தியவாதிகளிடம் நம்பிக்கை கொண்டிருந்தார்; ஆட்சியாளர்கள் சரியாக நடந்துகொள்வார்கள் என்றும் நம்பினர். ஆனால் இந்த நம்பிக்கை போனதும் அவர்கருத்து மாறிவிட்டது. அவர் 'the Englishmen has the power of self-deception- ஆங்கிலேயனுக்குத் தன்னையே ஏமாற்றிக்கொள்ளும் சக்தி இருக்கிறது' என்றார். அரசாங்கத்தின் நேர்மையிலும், காங்கிரசின் நேர்மையிலும் எனக்குள்ள நம்பிக்கைபோய் பண்டித நேருவுக்கும் ஏழைகளுக்கு நன்மை செய்வதில் கருத் தில்லை என்று புரிந்து, நிலச்சீர்திருத்தம் போன்ற அவர் எடுத்துவரும் எல்லா நடவடிக்கைகளுமே வெறும் மோசடி என்று விளங்கி, நில முதலாளிகளின் நியாய புத்தியில் அவ நம்பிக்கையுண்டாகி, அவர்கள் நிலத்தின்மீது வைத்திருக்கும் பிடிப்பைத் தாமாக விடமாட்டார்கள் என்று தெரியவந்து விட்டால், நான் அரசாங்கத்தை எதிர்த்து எதிர்மறை சத்தி யாக்கிரகம் செய்யச் சித்தமாகிவிடுவேன். ஆனால் இவ்வாறு கோடிக்கணக்கான மக்களின் நேர்மையிலேயே ஒருவருக்கு நம்பிக்கை போய்விட்டது என்பதற்கு மனிதத்தன்மை என்பதே இல்லையென்று ஆகிவிட்டது என்றுதான் அர்த்தம். ஆகையால் எங்கும், எவரிடமும் நேர்மை, யோக்கியப் பொறுப்பு என்பதே இல்லை என்று நிச்சயமாகும்வரையில் எல்லோரிடமும் நம்பிக்கையுடன்தான் நான் வேலைசெய்து கொண்டு போகவேண்டும்.

கேள்வி 14 : காந்தியடிகள் முதலில் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை ஒரு நல்ல அமைப்பு என்றே எண்ணிக்கொண்டு

இருந்தார். பிறகுதான் அவருக்கு அது பிறரைச் சுரண்டுவதற்காகவுள்ளது என்று தெரியவந்தது. அவரது கருத்துக்கள் வளர்ந்து பக்குவம்பெற்ற நிலையில் அவருக்கு இந்த உண்மை விளங்கிற்று. ஏகாதிபத்தியமே பிறரைச் சுரண்டுவதற்காக இருப்பது என்று எண்ணுவதில் அவநம்பிக்கைப்பிரச்சனைக்கு இடமேது? ஏகாதிபத்தியத்தை நடத்தியவர்கள் வேஷம் எதுவும் போடவில்லையே. 'நாங்கள் ஏகாதிபத்தியத்தை நடத்தவே செய்கிறோம்' என்றுதானே அவர்கள் ஒளிவு மறைவின்றி சொல்லிவந்தார்கள்.

வினோபா : விக்டோரியா மகாராணியின் காலத் தொட்டே ஆங்கிலேயர் 'நாங்கள் இந்தியாவை சுயஆட்சிக்குத் தகுதி பெறச்செய்து, ஆட்சிப்பொறுப்பை இந்தியர்கள் வசம் விட்டுவிடப் போகிறோம்' என்றுதான் அறிவித்து வந்தார்கள். இன்னும் இங்கிலாந்தின் வரலாற்றில், 'நாங்கள் இந்தியாவுக்குச் சென்றதும் ஆட்சி புரிவதற்காக அன்று, வாணிபம் செய்யும் பொருட்டே. ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பளித்து அங்கே அமைதி நிலவச் செய்யவே நாங்கள் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்க வேண்டியதாயிற்று. நாங்கள் அவர்களுக்குத் தகுதி வரச் செய்தோம். பிறகு ஒரு தேதி குறிப்பிட்டு ஆட்சியை அவர்கள் கையில் விட்டு வந்து விட்டோம். பிறகு இந்தியர்களேதான் மௌன்ட்பாட்டன் பிரபுவை மேலும் ஆறுமாதத்திற்கு தங்கிச் செல்லும்படி கேட்டுக் கொண்டார்கள்' என்றுதான் எழுதப்படும். இவ்வாறு எழுதப் பட்டால் நாமும் அதைப் பேரளவுக்குச் சரியென்று ஏற்றுக் கொள்ளவே வேண்டியிருக்கும். ஏனெனில் மௌன்ட்பாட்டன் பிரபுவை மேலும் ஆறுமாதத்திற்கு இருக்கும்படி நாமேதான் கேட்டுக் கொண்டோம். ஜவஹர்லால் அவர்களைப் போன்ற தலைவர் மட்டுமல்லாது காந்தியடிகளைப் போன்ற மகாத்மாவும் அவரை இன்னும் ஆறுமாதத்திற்கு இருக்க வேண்டுமென்று தான் வேண்டிக்கொண்டார்கள். எந்த பண்டித நேரு லாகூர் காங்கிரசில் பூரண சுயராஜ்யம் கோரும் தீர்மானம் கொண்டு வந்தாரோ, எந்தத் தீர்மானத்தை காந்தியடிகளும் ஆதரித்

தாரோ, அதே நேருதான் அதிலுள்ள சௌகரியத்தைக் கருதி இந்தியாவை இங்கிலாந்து கூட்டமைப்பில் (கூட்டமைப்பு) ஓர் உறுப்பு நாடாக ஆக்க சம்மதித்தார். இப்போது காமன் வெல்த் எனப்படும் அதே அந்தஸ்தில்தான் அந்தக்காலத்தில் ஏகாதிபத்தியமும் இருந்தது. கூட்டமைப்பில் காமன்வெல்த் தில் நாம் சேர்ந்திருந்தால் நமக்கு உலக நாடுகளுடன் தொடர்பு நீடித்திருக்குமென்று காந்தியடிகள் எண்ணினார். ஆங்கிலேயர் நம்மைத் தகுதி பெறச் செய்து ஆட்சிப் பொறுப்பை நம்மிடமே ஒப்புவித்துவிட்டு போகப் போவதாய் சொல்லுகிறபடியே செய்வார்களென்று அவர் நம்பினார். இன்று ராஜாஜிக்கும் இன்னும் சிலருக்கும் ஆங்கிலமொழி யிடம், அதன் மூலமாக நமக்கு வெளி உலகுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்ற ஓர் ஆசையும் பாசமும் இருப்பதைப் போலவே காந்தியடிகளுக்கும் காமன்வெல்த் கூட்டமைப்பு நமக்கு இவ்வகையில் உதவுமென்ற எண்ணம் இருந்தது.

ஒரே நாளில் நிலப்புரட்சி :

கேள்வி 15 : நீங்கள் நாடு முழுவதிலும் நிலப்புரட்சி ஒரே நாளில் நடந்தேறி விட வேண்டும். அதற்கு 2 நாட்கள் ஆனாலும் நடந்தது புரட்சியாகாது என்கிறீர்கள். இதற்கு தோன்றும் நிலைமை அல்லது எடுக்கப்படும் நடவடிக்கை காரணமாக நில முதலாளிகளுக்கு தாம் இது வரையில் செய்திருந்த தவறை இனியும்செய்து கொண்டிருக்கக்கூடாது, அதை உடனே திருத்திக்கொண்டு விடவேண்டும் என்று தானேதோன்றும் என்றும் நாடு முழுவதும் இம்மாதிரியான கருத்தலை ஒன்று வீதம் என்றும் நான் பொருள் கொள்ளு கிறேன். ஆனால் வேறு சிலரோ, 'நீங்கள் எதை எதிர் மறைச்செயல் என்று சொல்லுவீர்களோ அதுதான் இதுவும், அதாவது நில முதலாளிகளை, ஒரு விசேஷ நிலைமையை தோற்றுவித்தோ அல்லது ஆட்களின் பெருந்தொகையைக் கொண்டே அவர்கள் விரும்பாதபோதே இவ்வாறு செய்ய

வேண்டிய நிர்பந்தம் உண்டாக்கிவிடுமோவென்ருல் இதுவும் எதிர்மறையானதுதானே? என்கிருர்கள்.

விஞேபா: ஆம். ஆனல் கோரா அவர்களும் இப்போது கட்சி ரீதியாக நடக்கும் அரசியலேயும் எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப்போகிறேன் என்கிருர். இவ்வாறு அவர் நிஃனப்பதில் ஹிம்சையின் அம்சம் சேருகிறது. நான் இவ்வாறு சொல்வதைக் குறிப்பிட்டு அவர் என்னிடம் 'நீங்கள் என் விஷயத்தில் கடின சித்தம் காட்டியிருக்கிறீர்கள்' என்ருர். ஆனல் உண்மையில் நான் அப்படி ஒன்றும் செய்யவில்லே. அவரது கருத்தில் ஹிம்மை கலந்திருப்பது மட்டுமல்லாமல் முட்டாள்தனமும் சேர்ந்திருக்கிறது. இவ்வாறு செய்வதற்கு தென்பிருந்தால் அது வேறு விஷயமாய் ஆகியிருக்கும். ஆனல் அத்தகைய தென்பு இப்போது எங்கே இருக்கிறது?

காஷ்மீரத்தில் நான் ஒரு வேடிக்கையான விஷயம் சொன்னேன். அது பத்திரிகையில் வெளிவந்தபோது மற்ற செய்திகளின் அடியில் அமுங்கிப் போயிற்று. அதைத்தனியே எடுத்துக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருந்தால் அதை எல்லோரும் கவனித்திருப்பார்கள். நான் அங்கே சொன்னது காஷ்மீரத்தில் நடந்திருக்கும் விஷயங்கள் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. அவற்றுள் ஒன்று, இவ்விடத்திய அரசாங்கம் நில உடைமைக்கு உச்சவரம்பு விதித்து சட்டம் செய்து நஷ்டஈடு தராமலே நிலங்கஃள ஆர்ஜிதம் (பிரித்தொதிக்கி உரிமை) செய்ததாகும். 2 வது விஷயம் சட்டம் வருவது தெரிந்ததும் நிலமுள்ளவர்கள் எல்லோரும் தம் அண்ணன் தம்பிகளுக்கும், பிள்ஃளகளுக்கும், மருமகன்களுக்கும், சகோதர சகோதரிகளின் பின் சகாக்களுக்குமாக நிலத்தை வினியோகம் செய்து அரசாங்கத்தின் கைக்கு ஒரு குழி நிலம் கூட வராது செய்து விட்டதாகும். இவ்வாறு நடந்திராவிட்டால் எனக்கு மிகுந்த ஏமாற்றமாயிருக்கும். அப்போது இங்கே உள்ளவர்களுக்கு அறிவே நிருபணமாகி இருக்குமாகையால் இத்தகைய மக்கள் வாழும் நாட்டின் எதிர்காலம் (எப்படியிருக்குமோவென்று

பயமாகியிருக்கும்) என்பது. நான் இவ்வாறு மீது அமர மறுத்து நடந்தே சென்றதுதான். இரண்டு மூன்று சொன்னதைக் கேட்ட கூட்டத்தில் இருந்தவர்கள் 'கொல்' என்று சிரித்தார்கள். ஆனால் உண்மையில் இன்றைய நிலையே அப்படித்தான் இருக்கிறது. பலவந்தமாக நாம் ஒன்றைச் செய்விக்கத் தொடங்குகையில் விளைவு இவ்வாறு தான் ஆகிறது.

சத்தியாக்கிரகி அல்ல, சத்தியாக்கிராகி :

கேள்வி 16 : ஆக்க முறையில் செய்யும் நிர்மாண சத்தியாக்கிரகத்தில் 2 விஷயங்கள் எதிர்ப்பட்டன. ஒன்று அடக்கமாய், மேலும் அடக்கமாய், ஓயாது நடந்து கொண்டே யிருக்கும் செயல் முறை. இன்று நாம் 2-வதான அதிக அடக்கமான சத்தியாக்கிரகத்திலேயே நின்று கொண்டு இருக்கிறோம். அதனால் ஒன்றும் ஆகாது போய் அகத்தில் நோக்கைச் செலுத்துகையில் மேலும் அடக்கமான சத்தியாக் கிரகம் நமக்குத் தெரியவரவும் அதுவே நம் கருவியாக ஆகி விடும். சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றை மேன்மேலும் கோபம் இல்லாமலும் தூய்மையுறவும் செய்வதற்கு வேண்டிய சாதனை தொடர்ந்து நடைபெறும். ஆனால் அவ்வப்பொழுது மக்களின் கருத்தைத்தூண்டி செயல்படுத்துவதற்காக **நைமித் திகமான** (2-ம் பட்சமான) நடவடிக்கையும் எடுக்க வேண்டி யிருக்குமல்லவா ?

வினோபா : மேலும் அடக்கமானதும், மிகமிக அடக்க மானதுமான காரியங்கள் எப்பொழுதும் நடக்கக் கூடியவை யல்ல. ஏனெனில் மனிதனால் மிகமிக அடக்கமான மூன்றாம் நிலையைப் போய்ப் பிடிக்கவே முடியாது. அவன் எப்பொழுதும் முதல் நிலையில்தான் இருந்து வருவான். இப்போது அவன் மேலும் அடக்கமானது ஒன்று எங்கே இருக்கிறது? மனிதனுக்கு மேலும் அடக்கமான நடவடிக்கை எடுக்கும் எண்ணம் திடீரென்று தோன்றுது. நான் முதலில் பூதானத்தைப்

பற்றித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். இதில் நிலம் அளிப்பார் சிலரும் அதைப் பெறுவோர் சிலரும் இருந்தார்கள். ஆனால் பிறகு இவ்வாறு ஒரு சார்பான தர்மம் செய்வது சரியல்ல, எந்த தர்மமும் எல்லோரும் செய்யக்கூடியதாய் இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவே நிலம் இல்லாதவர்களிடமும் பிறருக்குக் கொடுக்க உழைப்புச் சக்தி இருக்கிறதே அதைக் கொடுக்கச் சொல்லலாமே என்று தோன்றிற்று.

நான் முதலில் பூதானம் கோரிவந்தபோது நிலம் உள்ளவர்கள் கூட்டத்திற்கு வரவே பயந்தார்கள். இதைப் பற்றி நான் வேடிக்கையாக, 'எனக்குப் பயந்து ஊரை விட்டு ஓடுகிறவர்கள் என் கருத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்று ஆவதால் அவர்கள் நிலம் என்வசமாகி விட்டது.' என்று சொல்லி வந்தேன். ஆனால், 'நிலமுள்ளவர்களுக்கு ஏன் பயம் தோன்ற வேண்டும்? என்ற எண்ணம் மட்டும் என் கருத்தில் எழுந்து, என் சிந்தனையைத் தூண்டிக்கொண்டிருந்தது. பிறகு எல்லோரிடமிருந்தும் நிலமோ உழைப்போ ஏதோ ஒன்றைக் கேட்டுப் பெறுவது என்று வந்ததும் தர்மம் முழுமை பெற்று விடவே, முதலில் சிலருக்குத் தோன்றிய பயம் நீங்கி விட்டது. இவ்வாறுதான் அனுபவத்திலிருந்து நமக்குப் புதியக் கருத்துக்கள் தோன்றுகின்றன.

காஷ்மீரத்தில் நான் ஒருவேளை உணவை நிறுத்துவது என்று முடிவு செய்தது ஆன்மசுத்தி கருதிச் செய்ததேயன்றி மக்களை நிர்ப்பந்தப்படுத்தும் எண்ணத்திலல்ல. அங்கே வாழ்வோரில் பெரும்பாலோர் **முஸல்மான்கள்**. நான் சொல்லுபவை அவர்களுக்குப் புரியுமோ புரியாதோ, பிடிக்குமோ, பிடிக்காதோ என்று என் மனத்தில் ஐயம் இருந்தது. இதனால் நான் மாலை உணவை நிறுத்தினேன். இதற்குக் காரணம் அங்கே நான் செய்யும் எதையும் கவனித்துச் செய்ய வேண்டும் என்பதுதான். இதனால் எனக்கு நன்மையே விளைந்தது. எனக்கு இல்லாததெல்லாம் செய்வது புதிதல்ல. என் சித்தத்தை மனத்தை ஒரு முகப்படுத்துவதற்காக நான் இவ்வாறு

சோதனைகள் பல செய்திருக்கிறேன். வேதம் ஓதிய காலத்திலும் நான் பாலும் சோறும் மட்டுமே சாப்பிட்டு வந்தேன். இதைக்குறிக்க நான் சத்தியாக்கிரகி என்ற சொல்லைவிட்டு சத்தியாக்கிராகி என்ற சொல்லைக் கண்டுபிடித்தேன்.

நைமித்திக சத்தியாக்கிரகம் :

கேள்வி 17 :- மனிதன் எப்பொழுதும் அடக்கமான சத்தியாக்கிரகமே செய்துகொண்டிருக்கிருன். அதிலிருந்து மேலும் அடக்கமான சத்தியாக்கிரகம் அவனுக்குப் புலப்பட்டால் அவன் அதைச்செய்கிருன் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனல் உபவாசம் இருப்பது, மாலை உணவை நிறுத்துவது, காலை, மாலை இரு பொழுதுகளிலும் யாத்திரை செய்வது, அல்லது யாத்திரையையே நிறுத்திவிடுவது ஆகிய நடவடிக்கைகள் எப்பொழுதும் செய்யக் கூடியவையல்ல. நிலைமையில் தோன்றும் மாறுதல்களுக்கேற்ப இவற்றைச் செய்யவேண்டி வருகிறது. இவைகளை நீடித்துச் செய்வதற்கும் இல்லை. ஆகையால் இவ்வாறு எப்பொழுதும் செய்ய வேண்டியிராதவை வேறு இனத்தைச் சேர்ந்தவையாகையால், அவற்றைக்குறிக்க வேறு சொல் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் அல்லவா?

விநோபா : ஆம், சில சமயங்களில் இவ்வாறு சந்தர்ப்பத்திற்கேற்ப காரியம் செய்ய வேண்டி வந்தாலும் அந்தக் காரியமும் அடக்கம், மேலும் அடக்கம் என்ற சத்தியாக்கிரகத்திலிருந்து கிளைப்பவைதான். அவற்றை தாற்காலிகமான, நைமித்திக சத்தியாக்கிரகம் என்று அழைக்கலாம். ஆனல் மக்கள் மனத்தை மாற்றும் கருத்துடன் இவற்றை மேற்கொள்ளுதல் சரியல்ல. தத்துவரீதியாகச் செய்ய வேண்டியது என்ன என்பதையே யோசிக்க வேண்டும். நாம் செய்வது சரியாயிருந்தால் அது மக்கள் மனத்தை மாற்றியிருது.

குற்றம் நம்முடையது மட்டுமல்ல, நிலைமைக்கும் அதில் பொறுப்புண்டு :

கேள்வி 18 :- எதிர்பார்த்த பயன் விளையாவிட்டால் நம் கருத்திலேயே ஏதோ குறைபாடு இருந்திருக்கிறது என்ற எண்ணத்தில் நம் கருத்தை நன்கு அலசி ஆராய வேண்டியது தானே?

வினோபா : என் காரியத்திலேயே ஏதோ குறையிருக்கிறதென்று நான் எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருக்க மாட்டேன். என் வேலையிலும் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றையும் கண்டு அகற்ற வேண்டியதுதான். ஆனால் வெற்றி கிடைக்காததற்கு என் கருத்தும் செயலும் மட்டுமல்லாமல் **காலதேச நிலைமைகளும்** காரணமாயிருக்கலாம். என்னிடமுள்ள ஏதோ குற்றத்தினால்தான் எனக்கு தக்க பயன் கிடைக்கவில்லை, என்ற எண்ணத்திலேயே **அகங்காரம்** அல்லது ஆணவம் இருப்பது தெரிகிறது. ஆகையால் பயன் விளையச்செய்ய வேண்டியல்லாமல் நமது காரியம் மேன்மேலும் அடக்கமாய் அமைய வேண்டியும் இவ்வாறு தற்காலிகமான நைமித்திக உபாயங்கள் தோன்றலாம். பயன் விளைவிப்பதே என்நோக்கமாய் ஆகிவிடுமானால், பயனே விளையாமல் போய் விடவும் நான் என்னைப் பெரியவனாக எண்ணிக்கொண்டதுதான் மிஞ்சும். காஷ்மீரத்திலிருந்து பாகிஸ்தானுக்குப் போகலாமா என்ற பேச்சு எழுந்தது. அதற்கு வேண்டிய அனுமதியும் பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருக்கலாம். 'இந்த ஆள் எப்படிப்பட்டவன் என்பதைத்தான் சிறிது உறைத்துப் பார்ப்போமே' என்ற எண்ணத்தில் அவர்கள் என்னை வர அனுமதித்து இருக்கலாம். ஆனால் அவ்விடத்திய நிலைமை நான் அங்கே செல்லுவதனால் எவ்வகையிலும் திருந்தக்கூடியதாயில்லை. நான் போயிருந்தால் எல்லோரும் என்னிடம், 'காஷ்மீர் விவகாரம் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்றுதான் கேட்டிருப்பார்கள். **ஆன்ம ஞானம்** முதலிய நான் சொல்லக்கூடிய விஷயங்களில் எதை

யும் கேட்கக்கூடியதாக அவர்களின் மனோநிலை இராது. இதனால் இப்போது மேற்குப் பாகிஸ்தானுக்குப்போகும் யோசனையை விடுவதுதான் நான் மேற்கொள்ளக்கூடிய அடக்கமான நடவடிக்கை; பிறகு சந்தர்ப்பம் கிடைத்தால் கிழக்குப்பாகிஸ்தானுக்குப்போக அனுமதி கோருவோம் என்று முடிவு செய்தேன்.

இவ்வாறு செய்யாமல் காஷ்மீரப் பிரச்னையை தீர்த்து வைக்கும் பொறுப்பே எனக்கு வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு எனக்கு இந்தியாவின் கட்சியும் காஷ்மீரத்தின் கட்சியும் தெரிந்திருப்பதால், இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட அவர்கள், மூன்ருவது கட்சியான பாகிஸ்தானுக்கு சென்று (அது) சொல்வதையும் கேட்டு என் முடிவைக் கூறலாம் என்று எண்ணியிருந்தால் அது எனது ஆணவமாய், அகங்கார மாய் ஆகியிருக்கும்.

ஆங்கிலேயரும் ஆன்ம தத்துவவாதிகளே

கேள்வி 19 : (கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டது) ஆங்கிலேயர் தம் வசதிக்காகவே இந்தியாவைவிட்டு வெளி யேறினர்கள். இதில் அவர்களுக்கு தம் ஆன்ம நலனில் கருத்து இருந்ததாகச் சொல்ல முடியாதே ?

வினோபா : துறவு என்பது எப்பொழுதுமே நல்லது தான். ஒருவன் ஏதேதோ காரணத்தினல் தியாகம் செய் திருந்தாலும் அதுவும் துறவேயாகையால், அவனுக்கு அதனு லும் நன்மையே விளையும்; அந்தத் துறவையும் போற்றத் தான் வேண்டும். ஆகையால் ஆங்கிலேயர் எந்தக் கருத்தில் இந்தியாவைவிட்டுப் போயிருந்தாலும் அதிலும் ஆன்மீகத்தின் அம்சம் இருக்கவே செய்கிறது. ஆங்கிலேயர் தமது வெளி யேற்றத்திற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டு அந்தத் தேதி வந்ததும் வெளியேறிவிட்டதை எண்ணிப்பாருங்கள். இவ்வாறு

உலக வரலாற்றில் இதுவரையில் என்றுமே நடந்ததில்லை. இதன் பிறகு மவுண்ட்பேட்டன் பிரபுவை நாமாக வற்புறுத்தி மேலும் 6 மாதங்களுக்கு இங்கே நிறுத்திக்கொண்டோம். அவர் பாவம், தம்மைச் சேர்ந்த எல்லோரையும் ஊருக்கு அனுப்பிவைத்துவிட்டுத் தாமும் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு கிளம்ப சித்தமாயிருந்தார். மேலும் முன்பு வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது குற்றச்சாட்டுகள் செய்து விசாரணை நடத்தப்பட்டதுபோல் (impeachment) வேறு எங்குமே நடந்ததேயில்லை. மேலும் காங்கிரஸ் நிறுவப்பட்டதற்கே ஆங்கிலேயர் பலர் காரணமாயிருந்திருக்கிறார்கள். எந்த வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது குற்றம் சாட்டப்பட்டு பொது விசாரணை நடந்ததோ அவரே பண்டிதர்களின் உதவியினால் பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்து இருந்தார். இதை எல்லாம் கருதுகையில் ஆங்கிலேயர்களுக்கு ஆன்மீகப்பற்றே இல்லையென்று எவ்வாறு சொல்வது?

1-10-59

விளைவின் கணக்கு வேறு,
அதில் பற்று என்பது வேறு

கேள்வி 20: பயனைக்கருதி மக்கள் மனத்தை மாற்றும் கருத்தில் சத்தியாக்கிரகி எதுவும் செய்யமாட்டான்; அவன் சரியான காரியத்தைச் செய்துகொண்டேபோகையில் அதற்கே தக்க பயன் விளையுமென்று நீங்கள் சொன்னீர்கள். இதையே டாக்டர் லோஹியா முதலியோர் தலைகீழாகத் திருப்பிச் சொல்லுகிறார்கள். ‘பாபூ தாம் சத்தியம் என்று நினைப்பதில் உறுதியாய் நின்று அதன்படியே காரியம் செய்வார். தமது நடவடிக்கையினால் எதிராளியின் மனம் குளிர்ந்தாலும், அவன் கோபப்பட்டாலும் அதைக் கருதி தாம் முன் வைத்த காலை பின்னே எடுத்து வைத்ததில்லை. ஆனால் வினோபாவோ நாம் செய்யும் சத்தியாக்கிரகத்தினால் எதிராளியின் மனம்

குளிரவேண்டும். அவனுக்குக் கோபமோ அச்சமோ தோன்றக் கூடாது என்கிறாரே; இது சரியல்ல' என்கிறார்கள்.

விநோபா: விளைவைக் கணக்கிட்டுப்பார்த்தல் வேறு விளைவில் பற்றுக்கொள்ளுதல் என்பது வேறு. இவை இரண்டிற்குமுள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ளவேண்டும். நாம் எந்தக் காரியம் செய்யவிரும்பினாலும் அதனால் விளையக்கூடியது என்னவென்று யோசித்தே செய்கிறோம். விளைவைப்பற்றி நமக்குக் கவலையேயில்லையென்றால் நாம் ஒன்றைச் செய்வது தான் எதற்காக? வேலைத்திட்டம் பற்றி யோசிக்கும் போதே அதனால் விளையக்கூடியவைபற்றிய கணக்கும் நம் கவனத்திற்கு வந்துவிடுகிறது. அதையும் நாம் அந்தக்கருத்தில் அடங்கியதாகத்தான் நினைக்கவேண்டும். ஒரு காரியம் என்றதும் அதன்நோக்கம், அதன் தன்மை, அதன் விளைவு ஆகிய மூன்றையும்பற்றி எண்ணவே வேண்டியிருக்கிறது. முதலில் நாம் செய்யவிருக்கும் காரியத்தின் நோக்கம் அல்லது காரணம் சரிதானா என்று கவனிக்க வேண்டிவருகிறது. நோக்கம் சரியென்று தெரிந்ததும் அதைச் செய்வது எப்படி என்று எண்ணவேண்டியிருக்கிறது. பிறகு அதன் விளைவு என்ன ஆகும் என்பதும், அந்தச் சிந்தனையுடனேயே சேர்ந்து வந்து விடுகிறது. ஆனால் ஒரு காரியத்தைச் செய்வதென்று முடிவு செய்தானதும் பிறகு செய்கையில் எதிர்பார்த்த பயன் விளையாவிட்டாலும் மேற்கொண்ட காரியத்தை விடக் கூடாது. விளைவினிடம் பற்றே கொள்ளக் கூடாது. பாபூ இவ்வாறு எண்ணியதில்லை என்ற கருத்தே தவறாகும்.

அச்சமும் ஆசையும்:

கேள்வி 21: பாபூ இதை என்றுமே மறந்ததில்லை. ராஜகோட் விவகாரத்தில் அவர் உண்ணாவிரதம் இருந்ததனாலும் உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதென்று முடிவு செய்ததனாலும் வீரவாலா

முதலியோரின் மனம் கசந்து போய்விட்டது. இதனால் பாபூ தாம் எடுத்த நடவடிக்கை சரியல்லவென்று எண்ணினார். ஆனால் ஒருவர் செய்யும் சத்தியாக்கிரகத்தினால் முதலில் எதிராளியின் மனத்தில் விபரீதமான பயன் விளைவதும் உண்டு. அவன் அறிவு அடங்கிக் கிடப்பதாகையால் எடுத்ததும் அவனுக்கு அச்சமோ ஆத்திரமோ உண்டானாலும் பிறகு அவை நீங்கி விடவா?

வினோபா : நான் அச்சம் வேறு ஆத்திரம் வேறு என்று நினைப்பவன். அச்சம் எப்பொழுதுமே தவறாய் இருப்பதில்லை. ஓரளவு அச்சம் இருப்பதனால் நன்மையும் உண்டாகும். உதாரணமாக, நமக்கு காட்டுவழியே செல்ல நேர்ந்து, அங்கே சிங்கம் புலிகள் இருக்கும் என்ற அச்சத்தால் அதற்கு வேண்டிய பாதுகாப்புடன் சென்றால் அதில் தவறு ஒன்றும் இல்லை. நம் எதிரே சிங்கம் வந்து நிற்க, அப்பொழுதும் அஞ்சாது அதன்முன் நின்று கொண்டிருப்பது என்பது மிகவும் பெரிய விஷயம். சிங்கத்தைக்கண்டதும் நம் கைகால்கள் எல்லாம் வெடவெடத்துப்போய் என்ன செய்வதென்றே தெரியாது போய்விடுவதும் ஆபத்தாகும். ஆனால் ஒரு சிறிது பயம் இருப்பது அப்படி ஒன்றும் தவறல்ல. உபநிடதத்தில் ஒரு விசித்திரமான விஷயம் வந்திருக்கிறது அது **''ஹ்ரியா தேயம்! பியாதேயம், சிரத்தயாதேயம், அச்ரத்தயாதேயம்''** அதாவது வெட்கத்தினாலும் பிறருக்குத் தரவேண்டும்; அச்சத்தினாலும் தரவேண்டும்; சிரத்தையினாலும் தரவேண்டும்; சிரத்தையில்லாத போதும் தரவேண்டும் என்பது. எனவே மனிதன் சிறிது பயத்தினாலோ அல்லது வெட்கம் காரணமாகவோ ஒன்றைச் செய்கிறான் என்றால் அவனது அறிவு இயங்குகிறது, அவன் யோசித்து ஏதோ செய்கிறான் என்றே ஆவதால் அதில் தவறு எதுவும் இருப்பதாக எண்ணவேண்டியதில்லை.

ஆனால் கோபதாபம் என்பது வேறு. கோபம் வந்ததும் மனிதனின் அறிவே மழுங்கிப்போகிறது, இயங்குவதில்லை.

சத்தியாக்கிரகத்தின் நோக்கம் மனிதனின் அறிவை சிந்தனையைத் தூண்டுவதாகவே எப்பொழுதும் இருக்கவேண்டும், அறிவு மழுங்கிப்போகையில் எல்லாமே கெட்டுப்போகும். எந்த மனோநிலையும் அதன் எல்லைக் கோட்டைப்போய்த் தொடும்போது கோபம் உண்டாகிறது. உதாரணமாக ஒரு சிறிது பயம் இருப்பது நல்லதுதான். ஆனால் சிங்கத்தைக் கண்டதும் நமது சப்த நாடியும் ஒடுங்கி கைகால்கள் வெல வெலத்துப்போகும் அளவுக்கு பயந்துபோய்விடுகையில் நம் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். ஒரு சிறிது காமவாசனை இருப்பது நல்லதுதான். ஆனால் அதுவே மித மிஞ்சியதாகி, சித்தத்தில் ஆத்திரம் விளைவிப்பதாக ஆகிவிட்டால் அதனால் கேடுதான் விளையும். இவ்வாறு நாம் எடுக்கும் நடவடிக்கையினால் எதிராளியின் மனத்தில் ஆத்திரம், கோபம் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எதிராளியின் கையில் பெரிய ஆயுதம் இருக்கையில் நமக்கு இது உடனே விளங்கிவிடுகிறது. ஆத்திரத்தில் அவன் அறிவை இழந்து ஒன்றுக்கொன்று செய்துவிட்டால் அது பெருங் கேட்டில்போய் முடியக்கூடும்.

இந்தக்காலத்தில் பெரிய மாற்றங்கள் மூன்று நிகழ்ந்து இருப்பதாக நான் அடிக்கடி சொல்லிவருகிறேன். அவை :

1. முன்பு அன்னியருக்கு அடங்கியிருந்த நாம் இப்போது சுதந்திரம் பெற்றிருப்பது;

2. முன்பு கட்டுக்கடங்காமல் இஷ்டம்போல் நடந்து வந்த ஆட்சிபோய் இப்போது ஜனநாயக ஆட்சி நடப்பது;

3. இது விஞ்ஞான காலமாய் இருப்பது.

எனவே நாம் செய்யும் சத்தியாக்கிரகத்தினால் எதிராளியின் மனத்தில் சிறிது அச்சம் தோன்றலாம்; அவனுக்கு வருத்தமும் உண்டாகலாம். அந்த வருத்தம் தனது செயலைப்பற்றிய

தாய் இராமல் தன்னை எதிர்த்து நமக்கு சத்தியாக்கிரகம் செய்ய நேர்ந்திருக்கிறதே என்பதனாலும் இருக்கலாம். ஆயினும் ஆத்திரம் மூளாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

கேள்வி 22 : நமது சித்தத்தில் ஆத்திரமே தலை எடுக்காது பார்த்துக்கொள்வது எப்படி ?

வினோபா : இதற்குத் தேவையாய் உள்ளவைகளில் ஒன்று விஞ்ஞான மனப்போக்கு (Scientific attitude). இரண்டாவது உலகளாவிய பரந்த நோக்கு (World wide out-look). இவையிரண்டும் ஆன்மீக அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும். உலகளாவிய பரந்த நோக்கு இருந்தால் நாம் எந்த விஷயம் குறித்தும் பரந்த முறையில் சிந்திப்போம். விஞ்ஞான நோக்கு இருந்தாலோ சொந்த லாப நஷ்டத்தில் கருத்தின்றி (objective) யோசிக்க வரும்.

2-10-1959

காந்தி சிந்தனை வகுப்பு மாணவர்க்குப் பயன்படும் நூல்கள்

	ரூ.	பை
மகாத்மா காந்தி நூல்கள் பதினேழு தொகுப்புக்கள் தொகுப்பு ஒவ்வொன்றின் விலை ...	7	50
தமிழ் நாட்டில் காந்தி ... — அ. இராமசாமி	18	00
காந்திக்கு முந்திய புரட்சிகள் ... — க. அருணாசலம்	2	00
அகிம்சை ... — A. அப்துல் ரஜாக்	2	00
காந்தியுகம் ... — H. துரைசாமி	2	00
காந்தி ... — டி. டி. திருமலை	2	50

:கிடைக்குமிடம்:

சர்வோதய இலக்கியப் பண்ணை
மேல வெளி வீதி மதுரை-625001

சர்வோதய சங்க கதர் வஸ்திராலயங்கள்

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை - 625020

வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை-1.